ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 14 திங்கட்கிழமை (28.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 122



02 பொன்டிங்கின் எதிர்காலம்



04 இந்தியா கிண்ணம் வெல்லும்



16 அவலம் எப்போது தீரும்?



23 மக்களைப் பாதுகாப்பதே நேட்டோவின் நோக்கம்



30 நகரில் சேஷ்டை: சிக்கினர் இளைஞர்

உள்ளே சச்சினின் வர்ணப்படம் இணைப்பு



உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்கள் எதிர்பாருங்கள்

# மீனவர் பிரச்சினை குறித்து ஆராய புதுடில்லியில் இன்று முக்கிய சந்திப்பு

## உத்தேச புரிந்துணர்வு உடன்பாடு குறித்தும் இரு தரப்பும் ஆராயும்

கொழும்பு, மார்ச் 28

இலங்கை - இந்திய கடல் எல்லை தாண்டி மீன் பிடிப்பது தொடர்பாக ஏற்பட்டிருக்கும் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று இந்திய தலைநகர் புதுடில்லியில் சந்திப்பு ஒன்று இடம்பெறுகிறது. இந்தச் சந்திப்பின்போது இது தொடர்பான உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து ஆராயப்படவுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்ஜித் உயங்கொட தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், புதுடில்லி மற்றும் சென்னையில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் டி.எஸ்.திருமூர்த்தி தலைமை வகிக்கின்றார். (32 ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவில் இரு நகரங்கள் மீண்டும் கிளர்ச்சியாளர் வசம்

திரிபோலி,மார்ச் 28

லிபியாவில் இராணுவம் வசமிருந்த நகரங்களை புரட்சியாளர்கள் மீண்டும் கைப்பற்றினர்.

அஜ்தாபியா, பிரகா ஆகிய 2 நகரங்களும் மீண்டும் தங்கள் வசமானதால் புரட்சியாளர்கள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர். குண்டு வீச்சில் சேதமடைந்து அஜ் தாபியாவின் எல்லையில் நிற்கும் இராணுவ டாங்கிகள் மீது ஏறி நின்று நடனமாடினர்.

லிபியாவின் தேசியக் கொடிகளை கையில் பிடித்து வீசியபடியும், துப்பாக்கியால் வானத்தில் சுட்டபடியும் ஆனந்தக் கூத்தாடினர். இதற்கிடையே, தற்போது தங்கள் வசமுள்ள ஒரே நகரான மிஸ்ரதாவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள கடாபியின் ஆதரவாளர்களும், இராணுவத்தினரும் தீவிரமாக உள்ளனர். (29 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் ரோந்தில் ஈடுபடும் கரையோரப் படகுகள் இந்திய காவல்படை படகுகளின் வடிவமைப்பில்!

### அயல் நாட்டின் படகுகள் எமது எல்லைக்குள் வரவில்லை என்கிறது கடற்படை

யாழ்ப்பாணம்,மார்ச்28

இந்திய கரையோரப் படைகளின் படகுகளின் வர்ணத்திலும் வடிவத்திலும் இலங்கை கரையோரப் பாதுகாப்பு படையினரின் படகுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன

சமீபத்தில் வடமராட்சிக் கடற்பரப்பில் இலங்கை கரையோரப் பாதுகாப்பு படையினரின் படகுகளே ரோந்துப் பணியில் ஈடுபட்டன. இந்தியக் கடற்படையினரின் படகுகள் அல்ல.

கடற்படையினரின் வடபிராந்திய தலைமையகம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

வடமராட்சி கடற்பிரதேசத்தில் கடந்த 24ஆம் திகதி இந்தியக் கடற்படையினரின் நடமாட்டம் காணப்பட்டதாக வெளியான தகவலுக்கு விளக்கமளித்து அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான கரையோரப் பாதுகாப்பு (29 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் நல்லிணக்க ஆணைக்குழு

அம்பாறை,மார்ச்28

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்துக்கான அமர்வு நேற்று கல்முனையில் நடைபெற்றது.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெண்கள் உட்பட (32 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணம் ஐ.நா. நிதியுதவி குறைப்பு

நியூயோர்க்,மாரச்28

இலங்கையில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு கோரப்பட்ட நிதியுதவியை ஐ.நா. குறைத்துள்ளது.

இதற்காக முன்னர் 51 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை ஐ.நா. கோரியிருந்தது.

தற்போது அத்தொகையை 43 மில்லியன் டொலராக அமெரிக்கா குறைத்துள்ளது.

வெள்ள நிவாரணத்திற்கான மாற்றப்பட்ட உதவிக் கோரிக்கைக்கான தொகை அங்கீகாரத்துக்காக (29 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் சுயமிழந்து வாழாமல் இருக்கும் நிலையை அமைச்சர் டக்ளஸால் மட்டுமே ஏற்படுத்தித் தர முடியும்

### ஆலயக் கட்டட நிதிக்கு காசோலை பெற்ற நிகழ்வில் ஜெயராஜ்

கொழும்பு,மார்ச்28

தமிழ்மக்கள் சுயமிழந்து வாழாமல் இருப்பதற்கு மட்டுமன்றி, கௌரவமான வாழ்வை வாழக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மட்டுமே முடியும்.

இவ்வாறு மிகவும் சிலாகித்துக் கருத்துத் தெரிவித்திருப்பவர் வேறு யாருமல்லர்; கம்பன் கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ் ஆவார்.

கொழும்பில் நிர்மாணிக்கப்படவுள்ள ஐஸ்வர்ய லக்ஷ்மி ஆலய கட்டடத் திருப்பணிக்காக ஐந்து லட்சம் ரூபாவுக்கான காசோலையை அமைச்சரிடமிருந்து பெற்றுக்கொண்ட நிகழ்வில் உரையாற்றிய போதே கம்பன் கழக அமைப்பாளர் இதனைக் கூறினார்.

கொழும்பு, வெள்ளவத்தையில் அமைந்துள்ள கம்பன் கழகக் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



ஜெயராஜ் தமது பேச்சின் போது மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களுக்கான சுயகௌரவம், பண்பாடு, வாழ்வியல் உள்ளிட்ட சகல உரிமைகளையும் அரசுடன் பேசிப் பெற்றுக்கொடுக்கும் முக்கிய பொறுப்பும் அமைச்சர் டக்ளஸிடம் மட்டுமே உண்டு.

தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைத்துவம் உள்ள (29 ஆம் பக்கம் பார்க்க)





உங்கள் தேவைகளை உலகறியச் செய்யுங்கள்

வீடு வாங்குவதற்கு, விற்பனை, வாகனங்கள் விற்பனை, வாடகை, கல்வி, வேலைவாய்ப்பு, திருமண சேவை முதலிய விளம்பரங்களை மலிவான கட்டணத்தில் உலகறியச் செய்வதற்கு...

www.onlineuthayan.com

150/= மட்டுமே

Online உதயன்

UTHAYAN IT ISLAND
359, Kasthuriyar Road, Jaffna.
Phone: 021 567 2222 / 021 222 0549 E-mail:online@uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வந்தனர் மொஹாலிக்கு இந்திய வீரர்கள்

பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் பங்கேற்க, இந்திய வீரர்கள் மொஹாலிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்கின்றது. இதில் எதிர்வரும் 30 ஆம் திகதி மொஹாலியில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடக்கும் முக்கியமான அரையிறுதியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இதற்காக டோனி தலைமையிலான இந்திய வீரர்கள், நேற்று மொஹாலி வந்தனர். இவர்கள் அனைவரும் பலத்த பாதுகாப்புடன் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் நேற்றுப் பயிற்சியில் ஈடுபடவில்லை. இன்று பயிற்சி மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் வீரர்கள், பலத்த பாதுகாப்புடன் மொஹாலி வந்தனர். நேற்று, பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் இவர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர்.



அரையிறுதி ஆட்டத்தைக்காண, பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் அதிபர் மற்றும் பிரதமருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதனால் பாதுகாப்பு கூடுதலாக பலப்படுத்தப்பட்டுள்ளது. இரு அணி வீரர்களும் ஒரே ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருப்பதால், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு வீரர்கள், பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மைதானத்தை சுற்றி சுமார் இரண்டாயிரத்துக்கு மேலான பாதுகாப்பு வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். (15)

# மூன்று ஆசிய அணிகள்

உலகக் கிண்ண போட்டியின் கடைசி காலிறுதி ஆட்டத்தில் இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் இலங்கை அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

ஏற்கனவே அரையிறுதிக்கு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன. தற்போது 4 ஆவது அணியாக இலங்கை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இவற்றில் நியூசிலாந்தை தவிர மற்ற 3 அணிகளும் ஆசிய நாடுகளை சேர்ந்தவையாகும். உலகக் கிண்ண வரலாற்றில் முதன் முறையாக ஆசிய நாடுகளை சேர்ந்த 3 நாடுகள் அரையிறுதிக்கு ஒரேசமயத்தில் தகுதி பெறுவது இதுவே முதன் முறை.

இந்தியா 1983, பாகிஸ்தான் 1992, இலங்கை 1996 ஆகிய ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளன. (15)

## மும்பையில் புகுந்த சீக்கியத் தீவிரவாதிகள்:

# உலகக் கோப்பை மைதானத்தில் தாக்குதல் நடத்தத் திட்டமா?

மும்பை, மார்ச்.28

பிந்தரன்வாலே பிரிவைச் சேர்ந்த சீக்கிய தீவிரவாதிகள் சிலர் மும்பை நகருக்குள் ஊடுருவி இருப்பதாக மும்பை பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடுருவிய தீவிரவாதிகள் ஏப்ரல் 2ஆம் திகதி நடக்க இருக்கும் கிரிக்கெட் போட்டியை சீர்குலைக்க சதி செய்திருக்கலாம் என சந்தேகம் எழுந்தது.

எனவே இதனையடுத்து மும்பை முழுவதும் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மும்பையில் ஓடும் அனைத்து மின்சார ரயில்களிலும் ரயில்வே படையினரும், தீவிரவாத ஒழிப்பு பிரிவு பொலிஸாரும் சோதனை மேற்கொண்டனர்.

சந்தேகப்படும் பயணிகளிடம் விசாரணை நடத்தியதுடன் அவர்கள் கொண்டு வந்த பொதிகளையும் சோதனையிட்டனர். இதேபோல வாகன சோதனையும் நடந்தது. சந்தேகப்படும் முக்கிய இடங்களிலும் பொலிஸார் சோதனை நடந்தி வருகின்றனர்.

அதேபோல நகரம் முழுவதும் பொலிஸ் ரோந்தும் அதிகரிக்கப்பட்டது. சாதாரண உடை அணிந்த பொலிஸார் ஆங்காங்கே நின்று கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (201)

# பொன்டிங்கின் எதிர்காலம்



எனது சர்வதேச கிரிக்கெட் தொடர்பான எதிர்காலத்தை இன்னும் சில நாள்களில் தெரிவிப்பேன். இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பொன்டிங் நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய அணியுடனான காலிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்வியைத் தழுவியதனைத் தொடர்ந்து பத்தாவது உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது. இதனால் ஆஸி அணி நாடு திரும்பியதும் அந்த அணியில் மாற்றம் செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆஸ்திரேலிய அணியின் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் அணித்தலைமையில் மாற்றம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏனெனில் இவரது அணித் தலைமை மீது ஏற்கனவே பல்வேறு விதமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டன. இங்கிலாந்துடனான ஆஷஷ் தொடரில் ஆஸ்திரேலியா தோல்வியைத் தழுவியதிலிருந்தே இவரை அணித் தலைவர் பதவியிலிருந்து அகற்ற வேண்டுமென பல தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக 12 வருடங்கள் உலகக் கிண்ணத்தை தன் வசப்படுத்தியிருந்தது. ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கிரிக்கெட் உலகின் 'ஜாம்பவான்களா' வலம் வந்த ஆஸி இந்த முறை காலிறுதியில் வெளியேற்றப்பட்டதை அந்த நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இவ்வாறானதொரு நிலையிலேயே பொன்டிங் மேற்படி அறிவிப்பினை விடுத்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக ஊடகங்கள் எனது தலைமையை விமர்சித்தும் எமது அணியை விமர்சித்தும் செய்திகளை வெளியிட்டிருந்தார்கள். இருப்பினும் ஆஸ்திரேலிய அணியின் தெரிவாளர்களிடமிருந்து எமது அணியின் நிலை தொடர்பாக ஆதரவு தெரிவித்திருந்தனர். எனக்கு முடிவெடுக்க பல தெரிவுகள் இருக்கின்றன. இருப்பினும் எனது முடிவை இன்னும் சில நாள்களில் அறிவிப்பேன் - என்றார். (15)

# முழுத் தகுதியுடன் முரளி




நியூஸிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விளையாடுவர். இவ்வாறு இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

38 வயதாகின்ற முரளி சர்வதேச டெஸ்ட் அரங்கிலிருந்து விடைபெற்றுள்ளார். அதேவேளை உலகக் கிண்ணத் தொடருடன் ஒரு நாள் ஆட்டங்களிலிருந்தும் ஓய்வுபெற உள்ளார். இறுதியாக இடம்பெற்ற இங்கிலாந்துடனான ஆட்டத்தில் கால் மூட்டின் பின்புறத் தசையில் ஏற்பட்ட பிடிப்புக் காரணமாக அவதிப்பட்டார். இதனால் நியூஸிலாந்துடனான அரையிறுதி ஆட்டத்தில் ஆடுவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டது. இந்த நிலையிலேயே சங்கக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

முரளி தற்போது நல்ல நிலையில் உள்ளார். அவர் 100 வீத உடற் தகுதியுடன் உள்ளார் என்பதால் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளோம். நாங்கள் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் உலகக் கிண்ணத்துக்கான பயிற்சிகளை மேற்கொண்டோம். இதனால் எமது வீரர்கள் மிகுந்த களைப்படைந்துள்ளனர். இருந்தும் [illegible] காரணமாக [illegible] யேறாதது அதிஷ்டம் - என்றார். (15)



இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்காக கடும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் சோகைப் அக்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் மனைவியிடையே முற்றுகின்றது முறுகல்

இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முன்னாள் அணித்தலைவர் சோயிப் மாலிக் தம்பதியர் இடையே உலகக் கிண்ண அரை இறுதியில் ஜெயிப்பது யார் என்பதில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து சானியா கூறுகையில், இந்தியாதான் ஜெயிக்கும் என்று நான் உறுதியாக இருக்கிறேன். வழக்கம் போல எனது கணவர் பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாக இருக்கிறார். இந்த விஷயத்தில் எங்களுக்கிடையே போராட்டம் நீடிக்கிறது என்று 'டுவிட்டர்' இணையதளத்தில் சானியா தெரிவித்துள்ளார். (15)



இவர்கள்தான் ரசிகர்கள் : இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான காலிறுதி ஆட்டத்தை ரசிக்க வந்த இலங்கை ரசிகர்கள்

# ஆடி அடங்கிய ஆட்டம்

ஆஸ்திரேலியாவை உலகக் கிண்ண காலிறுதியில் டோனியின் தலைமையிலான இந்திய அணி வீழ்த்தியது உலகக் கிரிக்கெட்டில் இந்தியாவின் புதிய ஆதிக்கத்தை அறிவிப்பதாக உள்ளது என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் புகழாரம் சூட்டியுள்ளன.

'தோல்வியில் நாணம் இல்லை, ஆதிக்கத்தில் மாற்றம்' என்ற தலைப்பில் சிட்னி மார்னிங் ஹெரால்ட் பத்திரிகை தலைப்பிட்டு எழுதியுள்ள பத்தியில் வரும் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்தை இந்தியா செயற்படுத்தும் என்று கருத்து தெரிவித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி இந்திய அணி போல் சரியான ஆரம்பம் இல்லாமல் ஆனால் சில தனி நபர் துடுப்பாட்டம் போல் இருந்தது. மாறாக இந்திய அணியின் 'ஸ்கோர் காட்டைப்' பார்த்தால் அனைவரும் பங்களிப்பு செய்துள்ளதும் தனிநபர் திறமையும் இணைந்து, ஆதிக்க ஆஸ்திரேலிய அணியின் 'ஸ்கோர்கார்ட்' போல் உள்ளது என்று அந்தப் பத்தியில் ஒப்பு நோக்கப்பட்டுள்ளது.

இந்தத் தோல்வி 4 ஆவது முறை உலகக் சாம்பியன்களான ஆஸ்திரேலியாவின் சரிவு என்பதை விட இந்தியாவின் எழுச்சி என்று கூறலாம் என்று அந்த பத்தி மேலும் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் நிபுணரும் எழுத்தாளருமான பீட்டர் ரீபாக 'முடிவில் ஆஸ்திரேலிய அணி சிறப்பாக வர முடியவில்லை, தோல்விதான் வந்தது ஆனால் மதிப்பற்றுப் போய்விடவில்லை.

பொன்டிங் அணி சிறப்பாகவே விளையாடியது. இன்னும் ஒரு இந்திய விக்கெட் இந்தியாவுக்கு அழுத்தம் என்பது போல் ஆடியது, ஆனால் யுவராஜ் சிங் என்ற ஒரு வீரர் தனது பெயருக்கு ஏற்ப நின்றார், ரெய்னாவும் உடனிணைந்தார். இதனால் இந்த பதற்றமான ஆட்டத்தில் இந்தியா வென்றது' என்றார். (15)

# வாய்ப்பளியுங்கள் அக்தருக்கு





இந்தியாவுக்கு எதிரான அரையிறுதியில் விளையாட, வேகப்பந்துவீச்சாளர் அக்தருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் இடம்பெற்றுவருகின்றது. நாளை மறுதினம் புதன்கிழமை மொஹாலியில் இடம்பெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

இது குறித்து 1999 இல் பாகிஸ்தான் அணியை உலகக் கிண்ண இறுதி ஆட்டத்துக்கு அழைத்துச் சென்ற வசிம் அக்ரம் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதியில், வேகப் பந்துவீச்சாளர் அக்தர் கட்டாயம் விளையாட வேண்டும். வாகாப் ரியாஸ் சிறப்பாக பந்து வீசி வருகிறார். இருப்பினும், இந்த ஆட்டத்தில் அக்தருக்கு முன்னுரிமை அளித்து, விளையாடும் பதினொருபேர் கொண்ட அணியைத் தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில் இவர், இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக பந்துவீசக் கூடியவர். சச்சின், சேவாக் உள்ளிட்ட ஆரம்ப ஜோடியை எளிதாக சமாளிக்கக் கூடிய திறமை இவரிடம் உள்ளது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இவருக்கு ஒரே ஒரு பிரச்சினை மட்டும் தான் உள்ளது. ஆரம்ப ஓவர்களில் சிறப்பாக பந்துவீசி வரும் இவர், சிறிது ஓய்வுக்கு பின்னர் பந்துவீச வரும் போது தடுமாறுகிறார். இது போன்ற நேரத்தில், இலேசான பயிற்சிக்குப் பின்னர் பந்து வீசுமாறு அறிவுறுத்தி உள்ளேன்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சயீட் அஜ்மல் சிறப்பாக பந்து வீசினார். இருப்பினும் அரையிறுதியில் அப்துர் ரெஹ்மானுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். அணித்தலைவர் அப்ரிடி, மொஹாலி ஆடுகளம் குறித்து அறிந்து கொண்டு பந்து வீச்சாளர்களை தேர்வு செய்தால் நல்லது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக தெரிகின்றது. இருப்பினும் இந்தத் தொடரில் பாகிஸ்தான் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கின்றது. பந்து வீச்சு சிறப்பாக இருப்பதால், பாகிஸ்தான் அணிக்கும் வெற்றி வாய்ப்பு உள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் என்றாலே ஒருவித எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருக்கத்தான் செய்யும். ரசிகர்களே இல்லாத மைதானத்தில் விளையாடினால் கூட, இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் சுவாரஸ்யத்திற்கு பஞ்சம் இருக்காது - என்றார். (15)

# தோல்வி நிலையென நினைத்தால்...



உலகக் கிண்ணக் கிரிக்கெட் காலிறுதியில் அடைந்த தோல்வியில் இருந்து மீள்வோம். இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித் கூறியுள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் தற்போது இடம்பெற்று வருகின்றது. இதற்கான மூன்றாவது காலிறுதியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தென்னாபிரிக்க அணி, 172 ஓட்டங்களுக்குள் சுருண்டு, 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்திடம் தோல்வியடைந்து வெளியேறியது. கடந்த 1992 முதல் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி, இதுவரை 3 அரையிறுதி, 2 காலிறுதியில் தோல்வியடைந்தது. இதுகுறித்து ஒருநாள் அணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிய ஸ்மித் கூறியதாவது:

இந்தத் தொடருக்காக அனைத்து வீரர்களும், கடினமான பயிற்சி செய்து, நல்ல திறமையுடன் வந்து இருந்தோம். இதனால் தென்னாபிரிக்க அணியின் மீது அதிக நம்பிக்கை ஏற்பட்டு இருந்தது. கடந்த 1992 இல் என்ன நடந்தது என்பது இன்னும் எங்கள் மனதில் இருந்தது. ஆனால், நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. இதை சொல்வதும் கடினமாக உள்ளது.

இந்த ஆட்டத்தில் நாங்கள் வெல்வதற்கு கிடைத்த நல்ல வாய்ப்பை வீணடித்து விட்டோம். நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடிய போது, சிறப்பாகத்தான் பந்து வீச்சு மேற்கொண்டோம். ஆனால் அவர்கள் அனைத்து பக்கங்களிலும் இருந்து நெருக்குதல் தந்துவிட்டனர். இதனால் சற்று பொறுமையாக விளையாட வேண்டி இருந்தது. இருப்பி னும், மீண்டு வருவது என் பது கடினமாகி விட்டது.

மற்றபடி, இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தைத் தான் வெளிப்படுத்தினோம். இதில் தவறு இருப்பதாக தெரிய வில்லை. அடுத்து எதிர்காலத்தில் அனைத்து பிரிவிலும் அசத்தி, கிண்ணம் வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (15)

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| ரொரட் (இங்கிலாந்து) | 07 | 422 | 05 | 00 | 92 | 60.28 |
| டில்ஷான் (இலங்கை) | 07 | 394 | 01 | 02 | 144 | 65.66 |
| டெண்டுல்கார் (இந்தியா) | 07 | 379 | 01 | 02 | 120 | 54.14 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 07 | 21 | 05/16 |
| சகீர்கான்(இந்தியா) | 07 | 17 | 03/20 |
| பீற்றர்ஸன் (தென்னாபிரிக்கா) | 07 | 15 | 04/12 |

# அரையிறுதிப் போட்டிக்கு இந்தியாவின் அழைப்பை ஏற்றார் கிலானி





இஸ்லாமாபாத் மார்ச்.28

இந்தியா-பாகிஸ்தான இடையே மொஹாலியில நாளை மறுதினம நடைபெறும் அரை இறுதிப போட்டியைக் காண வருமாறு பிரதமா மன்மோகன சிங் விடுத்த அழைப்பை பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி ஏற்றுக கொண்டாா.

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜா்தாரியும், பிரதமர் கிலானியும் சனிக்கிழமை இரவு சந்தித்து இதுதொடாபாக விவாதித்த பின்னா இந்த முடிவு எடுககபபடடதாக ஜா்தாரியின் செய்தித்தொடா்பாளா் ஃபர்ஹத்துல்லா பாபர் தெரிவிததாா.

ஜா்தாரியையும், கிலானியையும் அரை இறுதிப போட்டியைக் காண வருமாறு அழைத்ததை பாகிஸ்தான ஏற்கனவே வரவேற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போட்டியின்போது மன்மோகன் சிங்கை கிலானி சந்திக்கவுள்ளார். போட்டி முடிந்ததும் இருவருக்கும் இடையில் அதிகாரபூர்வ கூட்டம் நடைபெறும் என தகவல்கள் தெரிவித்தன. கிலானி வரவிருப்பது குறித்து தூதரகம் மூலம் இந்திய அரசுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதாக தகவல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேஷன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (201)

# மஹிந்தவும் அழைப்பு விடுக்கிறார் நியூஸிலாந்து பிரதமருக்கு

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தை நேரில் பார்வையிட வருமாறு நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீயை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைத்துள்ளார். ஆர்.பிரேமதாஸ அரங்கில் நாளை செவ்வாய்க்கிழமை இந்த ஆட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் இங்கிலாந்தை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்து அரையிறுதி ஆட்டத்துக்கு இலங்கை அணி தகுதி பெற்றது.

உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் புதன்கிழமை மொஹாலியில் நடைபெறவுள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இங்கிலாந்து ஆட்டத்திலிருந்து சில துளிகள்...

**நான்காவது முறை**

நேற்று இங்கிலாந்தை வீழ்த்திய இலங்கை அணி, உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் நான்காவது முறையாக (1996, 2003, 2007, 2011) அரையிறுதிக்கு முன்னேறியது. கடந்த 1996 இல் சம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி, 2003 இல் அரையிறுதி வரை சென்றது. கடந்த 2007 இல் இறுதி ஆட்டம் வரையில் முன்னேறிய இலங்கை அணி, 1975, 1979, 1983, 1987, 1992, 1999 இல் நடந்த தொடர்களில் முதல் சுற்றோடு வெளியேறியது.

**ஐந்து விக்கெட்டுக்கள் தேவை**

உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில், 38 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள இலங்கை அணியின் சுழல் மாயாவி முத்தையா முரளிதரன், 66 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உள்ளார். இவர், கூடுதலாக ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தும் பட்சத்தில், உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய பந்து வீச்சாளர்கள் வரிசையில், முதலிடத்தை ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மெக்ராத்துடன் (71 விக்கெட்டுக்கள்) பகிர்ந்து கொள்ளலாம்.



**இரண்டாவது முறை**

இங்கிலாந்துக்கு எதிராக ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய இலங்கையின் உபுல் தரங்க (102), டில்ஷான் (108) இருவரும் சதம் அடித்தனர். இதன் மூலம் இவர்கள் இருவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில், இரண்டாவது முறையாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கி சதம் அடித்துள்ளனர். முன்னதாக இந்த ஜோடி சிம்பாப்வே அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் சதம் கடந்தது. இது, சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில், 23 ஆவது முறை. இதில் இலங்கை துவக்க வீரர்கள் 7 முறை சதம் கடந்துள்ளனர்.



**சிறந்த வெற்றி**

இங்கிலாந்தை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி, உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில், விக்கெட் இழப்பின்றி அதிக ஓட்டங்களை விரட்டிய அணி என்ற பெருமை பெற்றது. முன்னதாக கடந்த 1992 இல் பாகிஸ்தான் அணி நிர்ணயித்த 221 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி விரட்டியது.

**நான்கு முறை கொடுக்கப்பட்ட உயிர் பிச்சை**


இங்கிலாந்து அணி வீரர் மோர்கனுக்கு நேற்று நான்கு தடவைகள் ஆடும் வாய்ப்புக் கிடைத்தது. முதலில் மெண்டிஸின் பந்தில் சமரவீர பிடியைத் தவறவிட்டார். தொடர்ந்து மலிங்கவின் பந்து வீச்சில் பந்து அவரது கால் காப்பில் பட்டது. ஆட்டமிழப்புக்கு மலிங்க முறையீடு செய்தார். நடுவராக கடமையாற்றிய சைமன் ரோபிள் ஆட்டமிழப்பு வழங்க மறுத்து விட்டார். இலங்கை மேன் முறையீடு செய்யவில்லை. இருப்பினும் 'ரீவிரிப்பிளேயில்' பார்த்தபோது ஆட்டமிழப்பு என்பது தெளிவாகத் தெரிந்தது. இதை விட மூன்றாவது சந்தர்ப்பத்தை மத்தியூஸ் வழங்கினார். முரளியின் பந்து வீச்சில் மத்தியூஸ் பிடியைத் தவறவிட்டார். அதே ஓவரில் மீண்டும் மோர்கனின் பிடியை ஹேரத் தவறவிட்டார்.

**100ஆவது ஆட்டம்**

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் அந்த மைதானத்தில் இடம்பெற்ற 100ஆவது சர்வதேச ஒரு நாள் ஆட்டமாகும். இதுவரை சர்வதேச ரீதியில் நான்கு மைதானங்களே 100 ஆட்டங்களை நடத்திய மைதானங்களாகும்.

**துடுப்பு முறிவது இரண்டாம் முறை**

மலிங்கவின் பந்து வீச்சில் மோர்கனின் துடுப்பின் கீழ் பகுதி முறிந்தது. இதற்கு முன்னர் இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மலிங்கவின் பந்தில் ரெயிலரின் துடுப்பு முறிவடைந்தது. (15)



## மில்ஸ் 'மிஸ்' பண்ணுகிறார் அரையிறுதியை

காயம் காரணமாக கைல்ஸ் மில்ஸ் நீக்கப்பட்டு, நியூசிலாந்து அணியில் மெக்கே சேர்க்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட்டில் அரையிறுதிக்கு நியூசிலாந்து அணி முன்னேறியுள்ளது. இந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் கைல் மில்ஸ், காயம் மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதில், 30 வயதான அன்டி மெக்கே சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு ஐ.சி.சி. சம்மதம் தெரிவித்துள்ளது. (15)

## தளர்த்தியது கட்டுப்பாட்டை

பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களுக்கு மேலும் கூடுதலாக 1500 விசாக்கள் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட் அரையிறுதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி மோதுகின்றன.

இதற்காகப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வர 5 ஆயிரம் பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விசா வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேலும் கூடுதலாக 1500 விசாக்கள் வழங்குமாறு இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் மாலிக் கோரிக்கை வைத்தார்.

இதனையடுத்து மாலிக்கின் கோரிக்கையை ஏற்று கூடுதல் விசாக்கள் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (15)

## இந்தியா கிண்ணம் வெல்லும் இது என் கணிப்பு



அரையிறுதியில் பாகிஸ்தானை இந்திய அணி வெல்லும் என்று பாகிஸ்தானின் முன்னாள் அணித் தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

பழைய வரலாறுகளை வைத்து யார் வெற்றிபெறுவார்கள் என்பதை தீர்மானிக்க முடியாது. சமீபத்திய ஆட்டங்களை வைத்துப் பார்க்கும் போது இந்திய அணிக்கே கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புள்ளது. இதுவரை போட்டியை நடத்திய நாடுகள் கோப்பையை வென்றதில்லை. இருந்தும் 1996 ஆம் ஆண்டு இலங்கை வெற்றிபெற்றதைப் போன்று இந்த முறையும் போட்டியை நடத்தும் இந்தியா வெற்றி பெறும்.

பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனாலும் இது போன்ற சிறந்த வாய்ப்பு இந்திய அணிக்கு கிடைக்காது. சமீபத்திய சாதனைகளை பார்க்கும்போது இந்தியா பலம் வாய்ந்த அணியாகும். இந்திய அணிக்கு கிண்ணம் வெல்ல நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதுபோன்ற வாய்ப்புக்கள் அரிதாகவே கிடைக்கும். இந்த வாய்ப்பு அடுத்த உலகக் கிண்ணத்தில் கிடைப்பது கடினம்.

சயிட் அப்ரிடியுடன் ஒப்பிடும்போது டோனியே சிறந்த அணித்தலைவர். டெஸ்ட், ஒரு நாள், இருபது ஓவர் என அனைத்து ஆட்டங்களுக்கும் இந்திய அணிக்கு அவரே அணித்தலைவர். ஆனால் அப்ரிடி டெஸ்ட் போட்டிக்கு அணித்தலைவர் கிடையாது. ஒரு நாள் போட்டியைவிட டெஸ்ட் போட்டி நெருக்கடி மிகுந்தது. டெஸ்ட் அணித்தலைவராக இல்லாத பட்சத்தில் ஒருநாள் போட்டியில் நெருக்கடியை சமாளிப்பது கடினமாகும்- என்றார். (15)


**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள் வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள் வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நர்ச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

பருத்தித்துறையில்
[illegible]

நெல்லியடியில்
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

மந்திகையில்
நாவலர் புத்தகசாலை

உடுப்பிட்டியில்
ரஜினி பீடா

வல்வெட்டித்துறையில்
கலைச்சோலை பான்சி கவுஸ்

தென்மராட்சியில்
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

கிளிநொச்சியில்
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுநதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 செக்கனுக்கு இந்திய மதிப்பில் 18 லட்சம்

மொஹாலியில் நடைபெறவுள்ள இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்துக்கான தொலைக்காட்சி விளம்பரக் கட்டணம் 350 வீதத்தால் உயர்ந்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளின் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பின்போது வசூலிக்கப்படும் கட்டணம், முதல் சுற்றுப் போட்டிகளின்போது 10 செக்கன்க்ள் நேரத்திற்கான விளம்பரத்திற்கு 3.5 முதல் 4 லட்சம் ரூபா வரை கட்டணம் இருந்தது. அது ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இந்தியாவின் காலிறுதி ஆட்டத்திற்கு ரூ. 8 முதல் 9 லட்சமாக உயர்த்தப்பட்டது.

அரையிறுதி ஆட்டங்களுக்கு இந்த விளம்பரக் கட்டணங்கள் இரட்டிப்பாக உயர்ந்துள்ளன. எதிர்வரும் புதன்கிழமை மொஹாலியில் நடைபெறவுள்ள இந்தியா - பாகிஸ்தான் அரையிறுதி ஆட்டத்துக்கான 10 செக்கன்கள் விளம்பரத்துக்கான கட்டணம் ரூ. 17 முதல் 18 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதென இந்தப் போட்டிகளை நேரடி ஒளிப்பரப்புச் செய்யும் ஈஎஸ்பின் - ஸ்டார் தொலைக்காட்சி நிறுவனம் கூறியுள்ளது.

ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட விளம்பர ஒப்பந்தகளுக்கு அதே கட்டணம்தான் அறவிடப்படுகின்றது என்றும், விளம்பர நேரத்தில் முக்கிய ஆட்டங்களுக்கு மட்டும் ஒதுக்கியிருந்த 10 செக்கன்கள் நேரத்திற்கு மட்டுமே இந்தக் கட்டணம் அறவிடப்படுவதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது. (15)



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான காலிறுதி போட்டியில் பெற்ற வெற்றியை, அஹமதாபாத்தில் 'கேக்' வெட்டி கொண்டாடிய ஹர்பஜன், சச்சின், யுவராஜ், ரெய்னா உள்ளிட்ட இந்திய அணியினர்.

# விடைபெறவும் பொன்டிங்



ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு இதுவே சரியான நேரம் என்று முன்னாள் வீரர்களான இயன் சப்பல், ஷேன் வோர்ன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சப்பல் 'தீ ஆஸ்திரேலியன்' பத்திரிகைக்கு கூறியிருப்பதாவது:

தோல்வியின் பிடியில் இருந்து ஆஸ்திரேலிய அணியை மீட்பதற்கு அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும். இதேபோல் அணியையும் உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்.

ஆஷஸ் தொடரோடு ரிக்கி பொன்டிங் தலைமைப் பதவியில் இருந்து விலகவேண்டும். அதுசரியான நேரம் என்று ஏற்கனவே கூறியிருந்தேன். இரண்டு உலகக் கிண்ணத் தொடர்களுக்கு அணித் தலைவராக இருந்த பொன்டிங்கிற்கு மூன்றாவது முறையாகவும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

அடுத்த உலகக் கிண்ணத்துக்காக இப்போதே அணியை மாற்றியமைப்பதுதான் சரியாக இருக்கும். மிகச் சிறந்த இளம் வீரர்கள் ஆஸ்திரேலிய அணியில் உள்ளனர். அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து ஷேன் வோர்ன் கூறியதாவது:

அணியை மாற்றியமைக்க வேண்டும். ஆனால் பொன்டிங் தலைமைப் பதவியில் தொடர்வதா, வேண்டாமா என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும். எந்த முடிவு எடுத்தாலும் ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (15)



**உங்கள் நட்சத்திரங்களின் வர்ணப் படங்கள் இணைந்திருங்கள் உங்கள் உதயனுடன்**

# முரண்டு பிடித்ததால் விதிக்கப்பட்டது அபராதம்



பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதிக் கொண்டன.

இதில் நியூசிலாந்து அணியின் தலைவர் வெற்றோரி, மில்ஸ் இருவரும் இணைந்து, தென்னாபிரிக்காவின் பிளெஸிஸ் உடன் வாய்த் தகராறில் ஈடுபட்டனர். இது குறித்து ஐ.சி.சி. வெளியிட்ட அறிக்கையில் 'விதி 2.2.4, நிலை 2 ஐ மீறி, தேவையில்லாமல் வேண்டுமென்றே, பிளெஸிஸ் மீது மோதிய மில்ஸ்ஸிற்கு, 60 சதவீதம், ஆட்டத்தில் இடையூறு செய்ததால், மேலும் 60 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. விதி 2.2.4 மற்றும் 2.1.8 ஐ மீறிய வெற்றோரிக்கு, 50 மற்றும் 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இதே போல் விதி 2.2.4ஐ மீறிய பிளெஸிற்க்கு, 50 சதவீதமும், போட்டிக் கட்டணத்தில் அபராதம் விதிக்கப்பட்டது. (15)

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
வழங்கும் 32" TV LCD
மாபெரும் இறுதிப் போட்டி

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வெற்றிகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

உதயன் வழங்கும்
1ஆம் பரிசு
2ஆம் பரிசு

எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

CICT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

1 லட்சம் ரூபா பணப் பரிசு

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் டுடே வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் டுடே இலவச சந்தா

உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.

உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை
மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

SINGER PLUS
No.01 STANLY ROAD
JAFFNA. வழங்கும்
EGG BEATER

SINGER
HOSPITAL ROAD
JAFFNA. வழங்கும்
FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும்
FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும்
FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI.
வழங்கும் TOASTER

PC SOLUTION
KASTHURIYAR ROAD
JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA
KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும்
SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள [illegible] பெட்டியில் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி**

இ.தர்சிகா- 7ஏபிசி, த.சுவேத்தா- 4ஏபி3சி, நீ.நிரோசன்- 3ஏ3பி2சிஎஸ், இ.யனுசா- 3ஏ2பி4சி, ச.லலீசன்- 2ஏ5பிசிஎஸ், மொ.ஜனவியா- 2ஏ2பி2சி2எஸ், மு.சசிரேகா - 2ஏபி4சிஎஸ்.

**அரியாலை மகேஸ்வரி வித்தியாசாலை.**

சி.ரேகா-2ஏ3பி2சி2எஸ், சோ.லஜித்தா- 2ஏ2பி 4சி, பி.துஸ்யந்தன்- ஏ3பி4சிஎஸ், மா.சிவகௌரி- ஏ2சி3எஸ், ச.லாவண்யா- பி3சி2எஸ், கி.சிவசங்கர்-பி3சிஎஸ், சி.நிஷாந்தினி- 2பி2சி3எஸ், ஜெ. ஜான்சன்- ஏ3சி4எஸ்.

**பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்**

ம.மனோதாஸ்- 6ஏபிசி, த.குபேரன்- 5ஏ2பிசி, சி.நீலவண்ணன்- 3ஏ2பி3சிஎஸ், ஜெ.ஜெயதீபன்- 3ஏ2பி2சி, அ.கார்த்தீபன்- 3ஏபி2சிஎஸ், வி.பிரதீபன்- 2ஏ4பி2சி, ஈ.சாந்தரூபன்- 2ஏபி4சி2எஸ், வ.விமலன்- 2ஏபி4சிஎஸ், ப.சசிகரன்- 2ஏபி3சிஎஸ், ஜெ.சயேந்திரன்- ஏ4பிசிஎஸ், ஜெ.செந்தீசன்- ஏ2பி2சிஎஸ், அ.டினுசன், ஏபி3சி2எஸ், ஆ.பாலபவான்- ஏ4சி3எஸ், ச.நிரோஜன்-ஏ4சி3எஸ், வீ.நிதர்சன்- ஏ4சி2எஸ்.

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

இ. கஸ்தூரிராஜன்- 8ஏபி, பே. கஜமுகன்-7ஏபிஎஸ், செ.தனுஜன்- 5ஏ2பி2சி, சி.கலைவரதன்- 5ஏ2பி2சி, சி.மேரிதர்மஸ்ரீ- 5ஏபி 2சிஎஸ், ஞா.மயூரதாசன்- 4ஏ3பிசி, கா.கீர்த்தனா- 4ஏ3பி2எஸ், த.பபீந்திரன்- 3ஏ3பிசிஎஸ், இ.விதுஷா- 3ஏ2பி3சிஎஸ், வி.கம்சாயினி- 3ஏ4சிஎஸ்.

**யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

ம.மதுஜீவிதன்- 7ஏ2பி, சொ.செந்தூரன்- 5ஏ 2பிசி, அ.நிதர்சன்- 4ஏ2பி3சி, த.விதுர்சன்- 3ஏ2பி4சி, அ.கிருசாந்- 3ஏபி4சிஎஸ், க.கலைச்செல்வன்- 3ஏபி4சிஎஸ், சி.தர்சனா- 3ஏபி4சிஎஸ், அ.ரஜீவன்- 2ஏ4பி2சிஎஸ், வி.தர்சினி- 2ஏ4பி3சி, ரு.கமிஸ்காந்- 2ஏ4பிசி2எஸ், சி.சிந்துஜா- 2ஏபி4சி2எஸ், த.குகன்ஜா- ஏ3பி5சி, அ.தபேஸ்- ஏ2பி3 சி3எஸ், க.கதிர்ச்செல்வன்- ஏ2பி4சிஎஸ், கு.பிரியங்கா- ஏ2பி2சி4எஸ், ப.சோபிதா- ஏ2பி2சி3எஸ், மு.காயத்திரி- ஏ2பி5சிஎஸ், கோ.உதயசபேசன்- ஏபி6சிஎஸ், தி.தேனுகா- ஏபி2சி5எஸ், ச.வினோஜிகா- ஏபி2சி3எஸ்.

# கைதிகளைப் பயன்படுத்தி விவசாயச் செய்கை ஆரம்பம்

சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகளின் நாளாந்த உணவுத்தேவைக்கான நெல் மற்றும் மரக்கறி வகைகளை அந்தச் சிறைக்கைதிகளைக் கொண்டே உற்பத்தி செய்யும் விவசாயச் செயற்றிட்டம் ஒன்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் ஆலோசனைக்கு அமைய இந்தப் பயிர்செய்கை செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

முப்பதாயிரம் சிறைக்கைதிகளின் உணவுத் தேவைக்கு அரசு ஆண்டொன்றுக்குச் செலவிடும் 250 கோடி ரூபாய்களை அடுத்த ஆண்டிலிருந்து குறைத்துக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கம் என அமைச்சின் செயலாளரான ஏ.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக அனுராதபுரம், பல்லேகலை, வீரவில, வட்டரெக்க, வாரியப்பொல, குருவிற்ற, தல்தென, எம்பிலிப்பிட்டிய ஆகிய திறந்த வெளிச்சிறைச்சாலைகளில் நெல், மரக்கறிகள், பழவகைகள் தென்னை மற்றும் ஏனைய விவசாய பயிர்களின் பயிர்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விவசாயச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பெறுமதி கொண்ட 18 கை உழவு இயந்திரங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தை அனைத்து சிறைச்சாலைகளிலும் செயற்படுத்தவும் பயிர் செய்கை நிலங்கள் அற்ற சிறைச்சாலைகளுக்கு அரச காணிகளை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-22)

## மரண அறிவித்தல்

### சம்பந்தன் சக்திதரன்

(ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தன் சக்திதரன் 26.03.2011 சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தன் மற்றும் சாரதாதேவி தம்பதியரின் இளைய மகனும், சிறிதரன் (கனடா), கெங்காதரன் (கனடா), தயாவதி, பகீதரன் (இத்தாலி), தயாளினி (தாதி, திருகோணமலை பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நந்தினி, குலநிதி, சதீஸ்குமார் (யாழ்.ப.நோ.கூ.சங்கம்), சந்திரகுமார் (இ.போ.ச. திருகோணமலை), சயந்தினி ஆகியோரின் மைத்துனரும் பிரியங்கா, பிறஸ்திகா, துதீபன் ஆகியோரின் சிறிய தந்தையும் பிரவீண், பாணுஜா, லதீசனன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக குப்பிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு, குப்பிளான். (39) தகவல்: குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ற-313)

* * *

கொழும்பு, தெகிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தின் 10 ஆவது வருட அபிஷேக இலட்சார்சனை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை 108 வலம்புரிச்சங்குகளால் விசேட கலச கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ற-313)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய பொங்கல் எட்டாம் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி முதல் நள்ளிரவு வரை நடைபெறவுள்ளது. (ற)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 28

தும்பளை வெள்ளந்தாத பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் கடந்த இரு மாதங்களாகக் கந்தபுராணப் படிப்பு இடம் பெற்று வருகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணப் படிப்புடன் நிகழ்வுகள் நிறைவு பெறும். (ற-236)

# தவக்காலச் சிந்தனை

## மனம் மாறுதல் இறையொளியைத் தருகிறது

வனத்து அந்தோனியார் அவரது சொந்த ஊரான கெராகிளியோபோலிஸ் அருகில் ஒரு தனிமையான இடத்தை தெரிவுசெய்து துறவற வாழ்வு வாழ்ந்தவர். பதினைந்து ஆண்டுகளின் பின்னர் நைல்நதியின் கிழக்குக் கரையில் இருந்த ஒரு பாழடைந்த கோட்டையில் தங்கி இருபது ஆண்டுகள் தவம் புரிந்தார். இவரது மறைவிடத்தை அறிந்த மக்கள் திரள்திரளாகத் திரண்டு வந்து அருளையும் ஆசிகளையும் பெற்றனர். இவரே துறவற சபையின் முன்னோடியாவார்.

வனத்து அந்தோனியாரின் இருபதாவது வயதில் அவரது பெற்றோர் இறந்துவிட்டனர். இவர் எகிப்திய நாட்டில் ஒரு மிகப் பெரிய செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவர். ஒரு நாள் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது ''நீ நல்வாழ்வை அடைய வேண்டுமானால் உன்னிடம் உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு'' என்ற வாசகத்தைக் கேட்டு மனம் மாறினார். தன்னிடம் இருந்த 300 ஏக்கர் நிலப்பரப்பை விற்று ஏழை எளியவர்களுக்கு வழங்கினார். மனமாற்றம் மனிதனைக் கடவுளிடம் நெருங்கச் செய்கின்றது.

கடவுள் ஏழை எளியவர்களிடத்தில் வாழ்பவர். கடவுளைக் காணவேண்டுமெனத் துடிப்பவர்கள் உங்கள் அருகில் பசியால் துடிப்பவனில் இறைவனை காணமுடியும். ஆடையின்றி அல்லல் படுபவனில் கடவுளைக் காணமுடியும். கடவுள் பசியாலும், வறுமையாலும், ஆடையின்றியும் அலையும் ஓர் எளியவனா? என விதண்டாவாதம் கதைப்பவர்களே உங்களுக்கு ஓர் அன்பான அறைகூவல். இன்று நாம் செய்கின்ற நற்செயல்கள் இறையுலகிற்கு நாம் தேடும் வழிவகையாகும். ஏழைகளின் இதயங்களைக் குளிரப் பண்ணும்போது கடவுளும் குளிர்ச்சியடைவான். மனம் மாற்றம் மிக்க மனிதராகும்போது இறையரசுக்கு நுழையும் தகுதி கிடைக்கின்றது.

எனவே அநாதைகள், விதவைகள், ஒதுக்கப்பட்டோர், நோயாளர் போன்றவர்களுக்கு உதவுவதன்மூலம் கடவுளின் தவக் காலத்தைப் புனிதப்படுத்துவோம். எங்களிடம் உள்ள செல்வத்தை, அன்பை, நற்பண்புகளை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வோம் இவ்வாறு செய்வதன் மூலம் தவக்காலம் பெறுமதியுடையதாகட்டும்.

எஸ்.கே.லதா.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 597
திகதி 2011/03/26
சுப்பர் இலக்கம் 14
வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 08 49 67

| | | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | [illegible] | ரூ. 11,115,856.80 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 | 07 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 272 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 | 504 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 12,979 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 40.00 | 7,392 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 185,709 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 29,658 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,298,920.00
05970419486 , 05970554788
அடுத்த புதன்கிழமை ரூ 11,481,615.20
தேசிய லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2211 திகதி 26-03-2011
ஆங்கில எழுத்திற்கும் G
வெற்றி எண்கள் 32 34 49 69
போனஸ் இல: 16
ஜக்பொட் பரிசு ரூ. 17,940,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 195399 | 20/- | 3,907,980/- |
| 2 இல | 13997 | 100/- | 1,399,700/- |
| 3 இல | 297 | 1,000/- | 297,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8122 | 40/- | 324,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 592 | 1,000/- | 592,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,940,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 9347 | 100/- | 934,700/- |
| 2 இல + போனஸ் இல | 415 | 500/- | 207,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 388 | 200/- | 77,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 27 | 1,500/- | 40,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,441,860/- |
| [illegible] | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 228607 | | 10,041,860/- |

| | |
|---|---|
| கேகாலை | 303010157-6-15 |
| கண்டி | 303007919-3-47 |
| புத்தளம் | 303005132-3-15 |
| மாத்தறை | 303006102-0-05 |
| மட்டக்களப்பு | 303029078-9-07 |
| குருநாகல் | 303004438-6-47 |
| திருகோணமலை | 303008552-0-31 |
| இரத்தினபுரி | 303010530-4-45 |
| கண்டி | 303008001-4-09 |
| யாழ்ப்பாணம் | 303029004-9-17 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.18,475,325/-
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிராந்திய அலுவலகங்களுக்கு மூடு விழா

வவுனியாவில் இயங்கிய, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளையும் மூடப்பட்டு விட்டது. வடமாகாணத்தில் மாவட்டந்தோறும் இயங்கிய கிளைகளில் வவுனியாக் கிளை ஒன்றே எஞ்சியிருந்தது; அதற்கும் மூடு விழா நடந்து விட்டது.

வவுனியாப் பிரதேசத்துக்கான செயற்பாடுகளை கொழும்பில் உள்ள தனது அலுவலகத்தின் ஊடாக முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையை அடுத்தே, சர்வதேச செஞ்சிலுவைக் குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய செஞ்சிலுவைச் சர்வதேச குழு அலுவலகம் கடந்த மாதத்தில் மூடப்பட்டது. அப்போது, இந்த மாவட்டத்துக்கு உரிய முந்தைய பிரதான செயற்பாடுகளில் பிரதானமானவை வவுனியா அலுவலகத்திலிருந்தும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் இருந்தும் ஆற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இயங்கிய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மாவட்ட அலுவலகங்களுக்கு மூடு விழாக்கள் நடத்தப்பட்டன.

கிழக்கு மாகாண மக்களுக்கு பல அரிய மனிதாபிமான சேவைகளை ஆற்றி வந்த திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் செயற்பட்ட செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளும் அரசாங்கம் கொடுத்த அழுத்தத்தினால் கடந்த வருட முற்பகுதியிலேயே மூடப்பட்டு விட்டன.

நீங்கள் கொழும்பில் மட்டும் இயங்கினால் போதும்; வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தளத்தில் நின்று தான் மக்களுக்கு பணிபுரிய வேண்டும் என்பதில்லை என்று உறுக்கும் தொனியில் அரசு கூறியதன் விளைவே, ஆறு மாத கால இடைவெளியில் வடக்கு, கிழக்கில் உள்ள செஞ்சிலுவைக் கிளைகள் அனைத்தும் அடுத்தடுத்து மூடப்படும் பின்னணி. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் யுத்தப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத் தப்பட்ட இருபது வருடங்களுக்கு முந்திய காலத்திலேயே, வடக்கு, கிழக் கில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மனிதாபிமானப் பணிகளை, அரும்பெரும் சேவைகளை தொடங்க வேண்டிய தேவை பெரிதும் தேவைப்பட்டது.

போர் மற்றும் பூசல்கள் காணப்படும் நாடுகளில் சர்வதேச செஞ்சிலு வைக் குழு தனது மனிதாபிமான, மனித நேயப் பணிகளை பக்கச் சார்பின்றி ஆற்றுவதில் உலகப் பிரசித்தம் பெற்றது; உலகலாவிய ரீதியில் நற்பெயர் பெற்றது. தனக்கென தனித்துவமான சிறப்பான இடத்தை வகிப்பது. அந்தச் சேவைகளைத் தனது நிதி கொண்டே இயற்றுவது.

அந்த வழி நின்று வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போர்க் காலத்தில், 1994, 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில், மற்றும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட வேளையில் செஞ்சிலுவைக் குழு செய்த பணிகளை மக்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள், அவர்களால் மறக்க முடியாதவை.

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் போன்ற அத்தியவசியப் பொருள்களை கொழும்பில் இருந்து கடல் வழியாகக் கொண்டு வருவதற்கு வழித்துணை வழங்கி, மக்களின் உயிர்களைக் காப்பாற்ற உதவியதும் செஞ்சிலுவைக்குழுவே.

வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரின் போது அதில் சிக்குண்ட பொது மக்களைக் காப்பாற்றுவதற்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்களை எடுத்துச் சென்று வழங்கியதும், காயமுற்ற பொதுமக்களை கப்பல் மூலம் திரு கோணமலைக்குக் கூட்டிச் சென்று, ஆயிரக் கணக்கான பொதுமக்களின் உயிர் களைக் காப்பாற்றியதும், செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒப்பற்ற மனிதா பிமான மனித நேயப் பணிகளே. அவற்றைத் தமிழ் மக்கள் எத்தனை சந்ததிக்கும் மறக்க மாட்டார்கள்.

போரில் ஈடுபடும் தரப்புகளின் கைதிகளை பரிமாற்றம் செய்வது, போரில் இறந்தவர்களின் சடலங்களை உரிய தரப்பினரிடம் கையளித்தல் போன்ற செஞ்சிலுவைக் குழுவின் பக்கச் சார்பற்ற பணிகள் இலங்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியவை.

அதே நிலையில், வன்னியில் அரசாங்கம் போரைத் தீவிரப்படுத்தி, அதனை வெளியுலகம் அறிவதற்கு உத்தியோகப்பற்றற்ற தடை விதிக்கும் வகையில்-

வன்னியில் மக்களுக்கு உதவி வந்த உலக உணவுத் திட்டம் போன்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களையும் மற்றும் உள்நாட்டு தொண் டர் நிறுவனங்களையும் கழுத்தில் பிடித்து தள்ளுவது போன்று வெளியேற்றிய வேளையிலும்-

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது மனித நேயப் பணிகளை ஆற்றியதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

போர் முடிந்து விட்டதால், இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணிகளை அரசாங்கம் நன்றி கெட்ட தனமாக மறந்து, தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து செஞ்சிலுவைக் குழுவை வெளியேற்றி விட்டது. ஆம்; வடக்கு, கிழக்கில்-அக்கரைப்பற்று, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டுவிட்டன.

ஆயுத மோதல்களால் பாதிக்கப்படும் குடிமக்களை அச்சுறுத்தல் களில் இருந்து பாதுகாத்து வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளை அளிப்பதே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதான நோக்கம்.

அத்தோடு போர்ச் சட்டங்களான, சர்வதேச மனிதாபிமானச் சட்டங் களுக்கு மதிப்பளிக்கப்படுவதனை உறுதி செய்வதும் அதன் பிரதான பணியாகும்.

இந்தப் பணிகளை சர்வதேசக் குழு திறன்படச் செய்துள்ளது. பக்கச் சார்பின்றி ஆற்றியுள்ளது. எனினும் தனக்குரிய தனித்துவத்துடன் திருப்திகரமாகப் பணி செய்துள்ளது என்ற மனத்துடன் தானாகவே வடக்குக் கிழக்கில் இருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு வெளியேறுகிறதா, அல்லது இன்னும் சில பணிகள் உண்டென்று உள்ளாந்தரமாக நினைத்தாலும், வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தமிழ் மக்கள் மத்தியில் கவலையும் அத்தோடு கூடிய சந்தேகமும் உண்டு.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர், உள்நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து சுத்தமான குடிதண்ணீர் வழங்குதல், மற்றும் போசாக்கு மேம்பாட்டுப் பணிகளைச் செய்தனர். அவற்றை உரிய அளவுக்கு ஆற்றிய திருப்தி இல்லாமல் இடைநடுவில் விட்டுச் செல்லும் நிலை தோன்றியிருக்கலாம். அதனால் வடக்கு, கிழக்கு மக்கள் பாதிப்புறுவார்கள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

காணாமல் போனோர் பற்றிய பதிவுகள், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுடன் அவர்களது குடும்ப உறவினர்கள் கடிதத் தொடர்பை வைக்க உதவுதல், யுத்த சூனியப் பிரதேசங்களில் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்குக் கண்காணிப்பு செய்தல், பிரிந்த குடும்பங்களை மீள இணைக்க உதவுதல் ஆகிய பணிகளிலும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஈடுபட்டதால், பல உள்ளார்ந்த உண்மைகள் அதனூடாக வெளிவந்து விடுமோ என்ற அச்சமும் வடக்கு, கிழக்கில் உள்ள அலுவலகங்கள் அவசர அவசரமாக மூடப்பட்டதற்கான வெளியே புலப்படாத காரணங்களாக இருக்கலாம்.

போரின் பின்னிணைப்பாக அரசாங்கத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து வாதப் பிரதிவாதங்கள் எழுந்திருப்பதால்-

செஞ்சிலுவைக் குழு தனக்கே உரிய செயற்படு ஆணைப் பிரகாரம் தமிழ்ப் பிரதேசங்களில் ஆற்றிய பணிகள், அரசுக்கு பாதகமான துப்புகளை வெளிப்படுத்திவிடும் என்ற சந்தேகம் அரச வட்டாரங்களில் எழுந்ததால் இந்த அவசரத்தனத்துக்கு உந்தப்பட்டதா என்ற சந்தேகம் எழுவது இயல்பே.

# தலைமைப் பதவிக்குவந்த ஆபத்தை சாணக்கியமாக சமாளித்தார் ரணில்

நேற்று 27.03.2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனத்தில் ஒருபகுதி இங்கு தரப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவிக்கு வருவதற்காக கடந்த பல மாதங்களாக சஜித் பிரேமதாசா தீவிரமாகப் போராட்டம் நடத்திவந்தார்.

நாடுமுழுவதும் பௌத்த ஆலயங்களுக்கு விஜயம் மேற்கொண்டு தனது தனிப்பட்ட பிரசார வேலைகளை நடத்தி வந்தார்.

மார்ச் 17 ஆம் திகதி இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது ஏப்ரல் 12ஆம் திகதியிலிருந்து ஐ.தே.கவின் தலைவராகத் தாமே செயற்படவிருப்பதாக அறிவித்திருந்தார் அன்றையதினம் தான் கட் சியின் புதிய விதிகளின்படி புதிய தலை வரை தெரிவுசெய்யும் நாளாகக் குறிக்கப்பட்டிருந்தது.

அவர் கூறினார் ''ஒரு தலைவரின் கடமை பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டு தனது பதவியைப் பாதுகாத்துக்கொள்வதல்ல,'' உறுப்பினர்களைப் பாதுகாக்கும் விதத்தில் சவால்களை எதிர்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும்'' என்று.

இவ்வாறெல்லாம் கூறி வந்த மனிதர் 44வயதான சஜித் பிரேமதாச கடந்த வாரம் தலைவர் பதவிக்கான போட்டியைத் தவிர்த்து தமக்களிக்கப்பட்ட கட்சியின் கூட்டு பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு விட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக் குத்திரும்பியவரான கரு ஜயசூரிய தமது கட்சியை மீளவும் கட்டியெழுப்புவதற்குப் பெருமளவில் பாடுபட்டுவந்துள்ளார்; உள்ளூராட்சித் தேர்தல்

## ஐ.தே.கவுக்குள் ஏற்பட்ட உள்பூசல் சுமுகமாக தீர்ந்து விட்டது

தொடர்பான கட்சியின்பொறுப்புகளை அவரே மேற்கொண்டிருந்தார்.

கட்சியின் புதிய விதிகள் மீள் அமைக்கப்பட்டு வந்த போது பிரேமதாசாவுக்கு நிகராகத் தமக்கும் ஒரு பதவியை வற்புறுத்திவந்த ரவி கருணாநாயக்கவும் இப் போது பாதிக்கப்பட்டவராகக் காணப்படுகிறார். பிரேமதாசாவுக்கு எதிராக திரை மறையில் செயற்பட்டுவந்த அவர் இப்போது ஒதுக்கப்பட்டவராகக் காணப்படுகின்றார். சதிகாரர்களும் தூண்டி விடுபவர்களும் பதவிகளைப் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள் என்று அவர் கவலை தெரிவிக்கின்றார்.

விஷயம் தெரிந்தவர்கள் பிரேமதாசா கீழிறங்கிவருவார் என்பதை எதர்பார்த்தே இருந்தார்கள். மனம் தளர்ந்து போயிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில்விக்கிரமசிங்க மிக முக்கியமான ஒரு கட்டத்தில் மிகத் தீர்க்கமாகச் செயற்பட்டமை தெரியவந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவுற்றமையோடு கட்சியின் செயற்குழுவை அழைத்து புதிய விதிகளுக்கமைவாக புதிய நிர்வாகத்தினைத் தெரிவு செய்வது பற்றி அவர் ஆலோசனைகளை நடத்தினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. 9 மன்றங் களை மட்டுமே வெற்றிகொண்டிருந்தது. ஆனால் அதன் வாக்கு வங்கி விகிதம் 29 இல் இருந்து 34 வீதத்துக்கு அதிகரித்திருந்தது. நிலைமைகளை சுதாகரித்துக் கொண்ட பிரேமதாசா கடந்த வாரம் தாம் ஒரு முகமான தீர்மானத்தையே விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். ''ஒரு முகமான தீர்மானமே வர வேற்கத்தக்கது. ஆனால் முழுக் கட்சியும் ஒருமித்துத் தீர்மானம் எடுக்கவேண்டும்'' என்று அவர் கூறியிருந்தார்.

விக்கிரமசிங்க அவரது நெருங்கிய நண்பர்கள் கூறுவதுபோல் பொது மக்கள் தொடர்பாடலில் சிறந்து விளங்காவிட்டாலும், கூட்டங்களைசேர்க்க முடியாதவரானாலும் ஆனால் எதிர் தரப்பிலிருந்து காய் நகர்த்துவதில் அவர் சிறந்த ''கிரான் மாஸ்டர்'' தான். தமது வியூகங்களை அவர் இரகசியமாக வகுத்து வைத்திருந்துள்ளார். கடந்த திங்கள், செவ்வாய், மற்றும் புதன் கிழமைகளில் நடைபெற்ற வெவ்வேறு மூன்று செயற் குழுக் கூட்டங்களில் இது மெதுவாக வெளிவரக் காணப்பட்டது. கடைசிக்கட்டத்தில் நாடாளுமன்றக் குழுவும் சேர்ந்து கொண்டது. இவைகளுக்கு முன்னதாக, அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்ட கடைசிக்குழு வான ஐக்கிய தேசியக்கட்சி குழுவினர்தமது முன்னாள் சகாக்களுடன் தொடர்புகொண்டு கதைதிருந்தார்கள் என்பது சிலர் மத்தியில் ஆச்சரியத்தைத் தோற்றுவித் திருந்தது. அவர்கள் தாம் கட்சியிலிருந்து வெளியேறியதற்கு விக்கிரமசிங்கதான் காரணம் என்று முன்னர் அறிவித்திருந்தபோதிலும் இப்போது தமது சகாக்களை அவருக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள் என்று தெரியவந்துள்ளது.

பௌத்த குருமார் சிலர் ஐக்கிய தே.கவின் தலைமை பதவிக்கு விக்கிரமசிங்காவே மிகவும் பொருத்த மானவர் என்று கூறியிருந்ததாக அரச தரப்புப் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டிருந்தது. பிரேமதாச அரசதரப்பு ஒரு பகுதியினருட்ன் கருத்துப் பரிமாறியிருந்தார் என்று தெரியவருகின்றது. அவர்களும் எதிரான கருத்தையே வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கடந்த வெள்ளியன்று பத்திரிகையாளர்களுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ அலரி மாளிகையில் நடத்திய சந்திப்பின்போது இது மேலும் வெளிப்படையாயிற்று விக்கிரமசிங்க மீண்டும் ஐ.தே.கவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக ஜனாபதி அவருடன் தொலை பேசியில் கதைத்தமை குறித்து கேள்வி கேட்கப்பட்டது. உண்மையில் அன்று மார்ச் 24 ஆம் திகதி விக்கிரமசிங்காவின் பிறந்தநாளாகும். அப்படி இல்லாமலிருந்தாலும் கட்சியின் தலைவராகப் பிரேமதாச தெரிவாகியிருந்தாலும் நிச்சயம் அவரைப் பாராட்டித் தான் இருப்பார் என்றார் ஜனாதிபதி.

எதிர்க்கட்சியினர் பலமாக இருக்கவேண்டும். அவர்களுக்குள் பிரிவு இருக் கலாகாது என்றார். கட்சித் தலைவர் ஒருவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒரு முறை இருக்கிறது. அது மோசமானவகையில் அமையலாகாது. தலைவர் பதவிக்குவர முயற்சிக்கிறவர்கள் விக்கிரமசிங்க கட்சிக்கு செய்துள்ள சேவையை மறந்து விடலாகாது. நன்றி உணர்வு இருக்கவேண்டும். ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராக அவரது கட்சி யினரில் ஒரு பகுதியினர் குற்ற விசாரணை ஒன்றுக்கு முற்பட்டபோது அதற்கு எதிராக தன்னந்தனியாக நின்று போராடியவர்தான் ரணில் விக்கிரமசிங்க என்றார் ஜனாதிபதி. திங்கட் கிழமை இடம் பெற்ற ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் பொதுச் செயலாளர் சமர்ப்பித்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான அறிக்கையொன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தேர்தல் நடைபெற்ற விதம் குறித்துப்பல சந்தேகங்கள் எழுந்துள்ளதாக திஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். வாக்களிப்பு மிக மந்தமாக இருந்துள்ளது. வாக்காளர் வருகை மிகக் குறைவாக இருந்துள்ளமையை அவர் சுட்டிக்காட்டினர். ஊட

தொகுப்பு: கோகுலன்

கங்கள் அன்று வாக்காளர் வருகை காலையில் 25 வீதமாக இருந்தது என்று தெரிவித்துள்ளன. ஆனால் மாலை 4மணியானபோது 60 வீதமாக அது அதிகரித்துள்ளது. காலை 7மணி முதல் பிற்பகல் 2 மணி வரை 25 வீதமாக இருந்தது. 2 மணியிலிருந்து 4 மணிக்குள் அது 35 வீதமாக மாறியுள்ளது இரண்டு மணி நேரத்துக்குள் வாக்காளர் எண்ணிகை வீதம் அதிகரித்தமை குறித்து ஐ.தே.க. வாக்களிப்பு முக வர்களிடமிருந்து விசாரித்து அறிய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். அரச வளங்கள் யாவும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாக்காளர்களின்மனநிலையை ஐ.தே. கவினால் மாற்றிவிட

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையுடன் சர்ச்சை; மகன் 'பாய்ச்சல்'!

தந்தையுடன் ஏற்பட்ட சச்சர வினால் ஆத்திரமுற்ற மகன் போத்தலை உடைத்து தந்தை யைக் குத்த முனைந்தபோது தவறுதலாக தாயைக் குத்தி தன் னையும்காயப்படுத்திக்கொண்டான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை பளை அர சர் கேணிப்பிரதேசத்தில் இடம் பெற்றது. கே. ரஞ்சினி (வயது - 42), கே. ரஜிவன் (வயது - 23) ஆகி யோரே காயமடைந்த நிலை யில் பளை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

(ஒ-207-311)

## சாவகச்சேரியில் பாத்தீனியம் அழிப்பு


வலிகாமம் பகுதியில் விவசாயி களுக்கு தொல்லையாக காணப் பட்ட பாத்தீனியம் செடி தென்ம ராட்சி பிரதேசத்திலும் பரவத் தொடங்கியுள்ளது.

சாவகச்சேரி கல்வயல் வேத வளப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் பாத்தீனியச் செடிகள் பெரு மளவில் காணப்பட்டன. அவற்றை கடந்த வெள்ளிக்கிழமை சாவகச் சேரி நகர சபையினரும் சுகாதா ரப் பகுதியினரும் படையினரும் இணைந்து அழித்தனர்.

பிரதேசத்தில் பாத்தீனியம் செடி காணப்படின் அவை பூக்க முன்னர் அழிக்குமாறு சுகாதாரப் பகுதியி னர் அறிவித்துள்ளனர். (ஒ-207)

# யாழ்ப்பாணத்தில் இரு புதிய அலுவலகங்கள் வடக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்தார்





யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம், யாழ். மாவட்டத்துக்கான நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனை ஆகிய இரண்டு அலுவலகங் கள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட் டன.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திர சிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த அலுவலகங் களைத் திறந்து வைத்தார்.

திருநெல்வேலி ஆடியபா தம் வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் செயல கம் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது யாழ். மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகளுக்கு 30 'டிஸ்கவரி' ரக மோட்டார் சைக்கிள்களும் ஆளுநரால் கையளிக்கப்பட் டன.

அதனைத் தொடர்ந்து புதி தாக திறந்து வைக்கப்பட்ட அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் ஆளுநர் தலைமை யில் முதல் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ். நகர் பண்ணை வீதி யில் 10.9 மில்லியன் ரூபா நிதி யில் நிர்மாணிக்கப்பட்ட யாழ். மாவட்டத்துக்கான நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனை முற்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியில் வடக்கின் வசந்தம் அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் இந்தப் பணிமனை நிர்மாணிக்கப்பட் டது.

இந்துப் பணிமனையின் பணிப் பாளர் கே.எஸ். சிவபாதம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது பணிப் பாளர் கே.எஸ். சிவபாதம், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகி யோர் உரைகளை நிகழ்த்தி னர்.

நூறு வருடங்களுக்கு மேலாக நிரந்தரக் கட்டடம் இல்லாது இயங்கி வந்த இந்தப் பணி மனைக்கு கடந்த 84ஆம் ஆண்டு நாவற்குழியில் கட்ட டம் அமைக்கப்பட்டது.

பின்னர் அது அழிவடைந்த நிலையில் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் தற்காலி கமாக இயங்கி வந்தது. இன்று எமது பணிமனைக்கு என சொந் தக் கட்டடம் கிடைத்துள்ளது என உரை நிகழ்த்தும்போது பணிப்பாளர் சிவபாதம் தெரி வித்தார்.

இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ரி. ரங்கராஜன், கல்வியமைச் சின் வடக்கு மாகாண செயலா ளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் மற்றும் திறந்து வைக்கப்பட்ட அலுவல கங்களின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ம-14)

## வீதிகளில் குப்பைகள் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

நவாலி, மார்ச் 28

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் குப்பைகள், கழிவுப் பொருள்கள் கொட்டு வோர் மீது மானிப்பாய் பிரதேச சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் முகமாக குடியிருப்பாளர் களின் வளவுகளிலுள்ள தகரப் பேணிகள், பிளாஸ்ரிக் போத்தல் கள் மற்றும் கழிவுகளை உரப்பை களில் கட்டி முக்கிய சந்திகளில் வைக்குமாறு அறிவிக்கப்பட்டு அவற்றை பிரதேச சபை வாகனங் கள் எடுத்துச் சென்று அகற்றி வந்தனர்.

தற்போது கண்ட இடங் களிலும் கொட்டிக்கிடக்கும் குப்பை கள், கழிவுப் பொருள்களால் சுகா தாரத்துக்கு பங்கம் ஏற்பட்டுள் ளதுடன் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டு வருகின் றது.

கண்டபடி குப்பைகள் கொட்டுவோரை இனங் கண்டு எமக்கு உடன் அறிவிப்பு செய்தால் அவர்கள் மீது நீதி மன்றம் மூலம் சட்ட நடவ டிக்கை மேற்கொள்ளப்படு மென்று மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு. சிவ லிங்கம் தெரிவித்தார்.

(எ-100)

## போக்குவரத்து விதிமுறையை மீறியோருக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 28

போக்குவரத்து விதிமுறை களை மீறி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் போக்குவரத் துப் பொலிஸார் சோதனை நட வடிக்கையில் ஈடுபட்டபோது தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மேற்படி நபரிடம் சாரதி அனுமதிப்பத் திரம், காப்புறுதி சான்றிதழ், வாகன வரிப் பத்திரம் போன்ற ஆவணங்களும் இல்லாமையி னால் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எ-207)

## பாடசாலையின் புதிய கட்டடம் குடத்தனையில் நாளை திறந்து வைப்பு

குடத்தனை, மார்ச் 28

குடத்தனை றோ.க.த.க. பாட சாலை றோட்டறிக் கழகத்தால் நவீன கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற கட்டடப் பௌதீக வளப் பரிமாணங்களுடன் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையால் முற்றாக சேதமடைந்த இப்பாட சாலையின் புதிய கட்டடத்தை சர்வதேச றோட்டறிக் கழகத்தின் தலைவர் றேகிளிங்ஸ்மித் நாளை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து பாடசாலை இன்றறக்ட் கழகத்தி னர், றோட்டறட் கழகத்தினர், றோட்டறிக் கழகத்தினரை பி.ப. 2.00 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் றேகி ளிங்ஸ்மித் சந்திக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் கொழும்பு றோட்டறிக் கழகத்தினரும் பங்கு கொள்ளவுள்ளனர். (எ-149)

## பேராலய மேப்புப்பணி அலுவலகம் இரு மாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்படும்

வண்ணை, மார்ச் 28

யாழ். பேராலய மேப்புப் பணி அலுவலகம் 15 மில்லியன் ரூபா செலவில் இருமாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

200 வருடங்கள் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வந்த மேற்படி பணிமனை அருகில் உள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

பழமையடைந்த கட்டடத்தை புதிதாக நிர்மாணித்து அதனூ டாக பேராலயப் பங்குத் தேவைகளையும், கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை பரிவர்த்தனையையும் மேற்கொள்ள இருப்பதாக பங்குத் தந்தை அருட்திரு ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

யாழ். குருநகர் இராசாவின் தோட்டம், சுண்டிக்குளி, பாண்டி யந்தாழ்வு, கொழும்புத்துறை மற்றும் பாசையூர், கொய்யாத்தோட் டம், திருநகர் போன்ற இன்னோரன்ன பகுதி மக்களின் மயானங் களின் பராமரிப்பு வேலைகளையும் மேற்படி அலுவலகத்தினூடா கவே நிர்வகிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (எ-160)

## குமுதினியின் சேவை இன்று ஆரம்பமாகிறது

நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகு குமுதினி இன்று திங்கட்கிழமை தனது சேவையை ஆரம்பிக்கவுள்ள தாக வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் தெரிவித் துள்ளனர்.

வேலைகள் முடிவடைந்த தும் நெடுந்தீவுச் சேவைக்கென வந்த குமுதினி மீண்டும் பழுத டைந்ததால் குறிகாட்டுவானில் நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு, இன்று தனது போக்குவரத்துச் சேவையைத் தொடரவுள்ளதாகக் கூறப்படு கின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவுத் துறைமுக கடல் பகுதியை ஆழமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

நெல்லியடி,மார்ச் 28

நெடுந்தீவுப் பகுதிக்கான போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் பாரியளவில் பாதிக்கப் படுவதாக, நாடாளு மன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

நெடுந்தீவுப் பகுதிக்கு நீண்ட காலமாகக் குமுதினி படகு சேவையில் ஈடுபட்டு வந்தது. அதன் பின்னர் குமுதினிப் படகு இயந்திரக் கோளாறு காரணமாக அதன் சேவையைத் தொடர்ந்து வழங்க முடியாமல் போனதால் மீண்டும் டொக்கியாட் நிறுவனத்தால் 'வடதாரகை' எனும் புதிய படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இப்படகில் 100 பயணிகளை ஏற்றமுடியும் என்பதால் அந்த படகு செல்வதற்குரிய கடல் ஆழத்துக்கு நெடுந்தீவுத் துறைமுகம் இல்லாததால் இப்போது அந்தப்படகுச் சேவையும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே நாடாளுமன்றத்திலும் கருத்து தெரிவித்திருந்தேன். போக்குவரத்து அமைச்சருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளேன்.

எனவே இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போக்குவரத்து படகுச்சேவைகள் முறையாக இடம்பெற வேண்டும்.

வடதாரகைப் படகை பயன்படுத்தஏதுவாக நெடுந்தீவுத் துறைமுகத்தை ஆழமாக்க வேண்டும்.

இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரிகள் கவனம் எடுத்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

(எ-319)

## கைதடி தொழில்நுட்ப பூங்காவில் தங்கியுள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கல்

கைதடி, மார்ச் 28

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோருக்கு பன்னவேலை தொடர்பான பயிற்சி நெறி ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஆ. மகேந்திரன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.ஜீவரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்தப் பயிற்சி நெறியைத் தொடங்கி வைத்தார்.

06 மாதங்கள் தொடர்ந்து நடைபெறும் இப்பயிற்சிநெறி தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணியரை நடைபெறும்.

இப்பயிற்சிநெறிக்கான செலவுகள் அனைத்தையும் இலங்கை பனை அபிவிருத்திச் சபையே பொறுப்பேற்கவுள்ளதாகவும் ஜீவரட்ணம் தெரிவித்தார்.

இலங்கை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் மற்றும் இலங்கை பனை அபிவிருத்திச் சபையை சேர்ந்த விரிவாக்க உத்தியோகத்தர் கா. கோபால கிருஷ்ணன், போதனா ஆசிரியை திருமதி பா. சுகந்தி ஆகியோரும் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர். (எ-288)

## மாணவ தாதியர் பயிற்சிக்குத் தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

சுகாதார அமைச்சினால் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பகங்கள் கோரப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தகைமையுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய காலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாணவ தாதியர் பயிற்சிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஏப்ரல் 11ஆம் திகதியாகும். 11.03.2011ஆம் திகதி வர்த்தமாணப்பத்திரிகை அறிவுறுத்தலுக்கமைவாக இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தமிழ்மொழி ஆகிய பாடங்களுடன் மற்றுமொரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுக்கு மேற்படாது ஆறு பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது பாடவிதானத்தில் ஒரு தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்வாறான கல்வித் தகைமை உடையவர்களே விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே 09.09.2010, 14.09.2010 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்களும் கட்டாயமாக இதற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (த-14)

வளரும் பயிர்.....



திறமை: யாழ். பாலர் கல்விக்கழகத்தின் 14 ஞானக் குழந்தைகள் இல்லப்பாலர் பாடசாலைகளின் "பேச்சுத்திறன் காணும் வைபவம்" நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் எஸ். சோமசுந்தரம்பிள்ளை மாணவனுக்கு பரிசில் வழங்குகிறார். (313)

## கசிப்பு, உபகரணம் வைத்திருந்த நபருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி,மார்ச் 28

சட்ட விரோதக் கசிப்பும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் வைத்திருந்த கொடிகாமம் எழுவன் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்த மேற்படி வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்தநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்கு 30 ஆயிரம் ரூபா அம் உற்பத்தி உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக 30 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 6 மாதம் சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு நீதிவான் மா. கணேசராசா உத்தரவிட்டார். (எ-207)

## கிளி பிடிக்கச்சென்ற சிறுவன் குளத்தில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தனது நண்பர்களுடன் கிளி பிடிக்கச் சென்ற 12 வயதுச் சிறுவன் குளத்தில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தான்.

வேலணை, நாரந்தனை இலந்தைக் குளத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி றொசான் (வயது-12) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் சக நண்பர்களுடன் மேற்குறித்த குளத்துக்கு அருகில் இருந்த பற்றைக்குள் கிளிபிடிக்கச் சென்ற சமயம் குளத்தில் தவறி விழுந்து அந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளான.

சம்பவம் அறிந்து அங்கு விரைந்த பொலிஸாரும் கடற்படையினரும் குளத்தில் இருந்து சிறுவனின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச்சென்ற ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9-93-4)

## 12 கால்நடை உத்தியோகத்தருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழுள்ள திணைக்கழங்களில் நிலவும் விவசாயக் கால்நடை உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆளுநரின் விசேட அனுமதியின் பேரில் பன்னிரண்டு பேர் ஒரு வருட காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சின் வடக்கு மாகாண செயளாளர் யு.எல்.எம் ஹால்தீன் அறிவித்துள்ளார். (கடந்த 14 ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின்அடிப்படையிலே இவர்கள்நியமனம்செய்யப்பட்டுள்ளனர்).

நியமனம் பெற்றோரின் பெயர் விவரங்கள் வருமாறு: -கணேசமூர்த்தி நிஷாந்தினி (அச்சுவேலி தெற்கு), நாகராசா துஸ்யந்தினி (உடுவில்வடக்கு), றேமன் கெனத் எட்வின் (தும்பளை), திருமதி சிவானந்தன் மயூரி (கொக்குவில் மேற்கு), இராஜதுரை திவ்வியா (சங்கானை), துரைசிங்கம் அஜீபன் (சுன்னாகம்), பீற்றர் குரூஸ் பபெற் லக்ஷன் (பேசாலை, மன்னார்), செகராஜா அகல்யா (கந்தர் மடம்), ஜெயகிஸ்ணன் வரதரூபி (சுன்னாகம் மேற்கு), சாம்பசிவம் சோபிகா (கொக்குவில் கிழக்கு), நடராஜக்குருக்கள் கௌரி சங்கர சர்மா (முள்ளியவளை), சுந்தரமூர்த்தி யாழினி (கந்தர் மடம்) ஆகியோரே இவ்வாறு ஒப்பந்த அடிப்டையில் நியமனம் செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு இல. 04, புறூடிஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்அமைந்திருக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு அலுவலகத்துக்கு சமுகமளித்துகடமைகளைப்பொறுப்பேற்றுக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-288)

## சுகாதார தர நிர்ணயப் போட்டி யாழ்.பிராந்தியத்துக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

மத்திய சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட 2009/2010 இற்கான தேசிய சுகாதார தர நிர்ணயப் போட்டியில் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களப் பணிமனை 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

வடமேல் மாகாண சுகாதாரத் திணைக்களம் முதலாம் இடத்தையும், கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளதாகச் சுகாதார அமைச்சுநேற்றுமுன்தினம்உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இதேவேளை -பொது வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை தர நிர்ணயப் போட்டியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை 2ஆம் இடத்தையும் கேகாலை பொது வைத்தியசாலை முதலாம் இடத்தையும் மாத்தளை பொது வைத்தியசாலை 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.பிரதேச வைத்தியசாலை தர நிர்ணயப் போட்டியில் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு சிறப்புச் சான்றிதழும் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளற்ற வட்டக்கச்சி மாயவனூர் கிராமம்

கடந்த காலங்களில் இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்துச் சொல்லொணாத் துன்ப, துயரங்களை அனுபவித்து, தற்போது அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் தேவைகள் அதிகம். ஆனால் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் கூட இதுவரை பூர்த்தியாகாத நிலை யில் உள்ளனர்.

அந்தவகையில் பல்வேறு இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்து இன்று தமது இழந்த வாழ்வாதாரத்தையும் வாழ்வையும் மேம்படுத்தும் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் அதிகமாகவே காணப்படுகின்றன.

இந்தக் கிராமத்தில் சுமார் 925 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அடிப்படைத் தேவைகளான போக்குவரத்து வசதிகளையும் மருத்துவத் தேவைகளையும் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாயவனூர் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் எண்பது சதவீதமான மக்கள் தங்களுக்கான வாழ்விட வசதிகள் இன்றியே காணப்படுகின்றனர். அத்துடன் இந்தக் கிராமத்தில் உள்ள 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் தமது அடிப்படை வசதிகளையும் இதர தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு வேறு இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லையென்றே கூற வேண்டும். கடந்த காலங்களில் தமது கிராமத்தில் இருந்து கிளிநொச்சி மற்றும் ஏனைய இடங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இருந்ததாகவும் இதனால் தமது தேவைகளை வெளியிடங்களுக்குச் சென்று நிறைவேற்றக் கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்த இந்தக் கிராமவாசிகள் முன்னர் தங்களுக்கான தொழில் வாய்ப்புக்களும் போதியளவு இருந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

தற்போது வயல் வேலைகளில் அதிகமான இயந்திரங்களைப் பயன்படுத்துவதனால் இவர்களுக்கு வேலைகள் குறைந்து போய்விட்டன.

இங்குள்ள மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் கால்நடையாகவோ அல்லது வேறு தனியார் வாகனங்களின் உதவியுடனோ செல்ல வேண்டுமெனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள எந்தக் குடியிருப்பு வீதியும் குண்டும் குழியுமாகச் சாதாரண துவிச்சக்கர வண்டிகளில் கூடப் பயணிக்க முடியாத அவல நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் இங்கு இயங்குகின்ற மாயவனூர்ப் பாடசாலையின் தேவைகளும் அதிகமாகவே காணப்படுகின்றன. அதாவது இந்தக் கிராமத்தின் மக்கள் தொகையையும் மாணவர்களின் நிலையினையும் கருத்தில் கொண்டு கிளிநொச்சி கல்வி வலயத்தின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட இந்தக் கிராமத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டு தரம்1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கக் கூடிய வகையில் மாயவனூர் அ.த.க. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது கடந்த ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.ஆனால் இன்று 113 மாணவர்கள் கல்வி கற்றுவரும் இந்தப் பாடசாலை நிரந்தரக் கட்டடங்கள் எவையும் இல்லாத நிலையில் மாயவனூர் சிவன் கோயில் வளாகத்தில் இயங்க ஆரம்பித்தது. அதன்பின்னர் பாடசாலை வளாகத்தில் மாமரத்தின் கீழ் நீண்டகாலமாக இயங்கியது. மழைக் காலங்களில் என்றும் இல்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளதுடன் அலுவலக ஆவணங்களைக் கூடப் பாதுகாக்க முடியாமல் பெரும் சிரமங்களுடன் ஆசிரியர்களும் அதிபரும் வீடுகளுக்கு கொண்டு சென்று அவற்றைப் பாதுகாத்து வருவதாகவும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதன்பின்னர் இந்தக் கிராமத்தின் அவல நிலையினையும் மாணவர்களின் நிலையினையும் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் பல் வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாணவர்களின் கல்வி ஓரளவு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு இந்தக் கிராமம் அபிவிருத்தி செய்யப்படாது தொடர்ந்தும் இதேநிலையில் இருக்குமாயின் மிகவும் கீழ் நிலைக்கே செல்லும்.

**துவாரகன்**

## கிராம அபிவிருத்தியில் ஆற்றல் உள்ளோர்

அக்கராயன்,மார்ச்28

ஆற்றல்கள் உள்ளோர் கிராம அபிவிருத்தியில் பங்காளிகளாக மாற வேண்டுமெனக் கூறியுள்ளார் அக்கராயன் பதில் கிராம அலுவலர் கு.துஷ்யந்தன்.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மீள் எழுச்சித் திட்டத்தின் கீழான கிராம அபிவிருத்தி அமைப்பினைத் தெரிவு செய்யும் நிகழ்வில் தலைமையுரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எமது கிராமத்தின் அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். மக்கள் மீள் எழுச்சித் திட்டமூடாகப் பயன்களைச் சரிவரப் பெற்றுக் கொள்வதற்கு கிராமிய அபிவிருத்தி அமைப்பின் செயற்பாடு முக்கியமானவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

(க-410)

195 வது மைல்கல்

# வேலணை

புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க பொலனறுவை காலத்தில், வடகடலின் பிரதான கப்பல் கட்டும் துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்துறை தண்ணி தீவினால் சூழப்பெற்றுள்ளது. 17ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த போர்த்துக்கேயரின் பிரசித்திபெற்ற கடல் மத்திய நிலையமாக விளங்கிய "பொருட்கள் ஏற்றும் துறையான" அப்பகுதிக்கு "கையிஸ்" எனும் பெயரையும் சூட்டியதாகவும், அதனைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் அப்பகுதியை "கையிட்ஸ்" என்றழைத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட காலத்தில் "வேலணை" நகரம் கையிட்ஸ் தீவின் கடல் வர்த்தக கேந்திர நிலையமாக திகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

"வேலணை" எனும் பெயரானது சிங்கள மொழியில் "முத்து பெல்லன்" அதாவது தமிழில் "முத்துச் சிப்பி" அதிகமாக பெற்ற ஊர் எனும் காரணத்தால், முதலில் பெல்லன் (சிற்பி) பின்னர் வெல்லன என்று அழைக்கப்பட்ட இப்பெயரானது மறுவி "வேலணை" என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு பழமைவாய்ந்த முருகன் கோவில் வேலனின் பெயராலும், கையில் வேல் அணைந்திருந்தமையினால் (வேல்+அணை) வாய்மொழி வழக்கில் "வேலணை" எனும் பெயர் புழக்கத்திற்கு வந்ததாக இன்னுமொரு கருத்தும் உள்ளது.

நீண்ட கால இடைவெளியை தொடர்ந்து, இருள் நீங்கி ஒளி பெற்று வட மாகாணமெங்கிலும் அதிவேக அபிவிருத்திப் பணியை முன்னோக்கி செயற்படுத்தும் இப்பொற்காலத்தில், அப்பிரதேசங்களின் உடனடித் தேவைகளை அறிந்து உட்கட்டமைப்பு வசதிகளை செய்யவேண்டிய தலையாய பொறுப்பு அரசுக்கு மட்டுமின்றி தனியார் துறையினரையும் சார்ந்ததாகவே அமைகிறது. எனவே, அதிவேகமாக இப்பிரதேசம் அபிவிருத்தியடைவதால் தேவையான நவீன வசதிகளுடன் நிதியியல் பலத்தைக் கொண்ட கொமர்ஷல் வங்கி, இப்பிரதேச வாழ் மக்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக, புதிய கிளையை ஊர்காவற்துறை தீவிலுள்ள வேலணை நகரில் இன்று திறந்து வைக்கிறது.

கொமர்ஷல் வங்கியின் இப்புதிய கிளை, குறிக்கட்டுவான் வீதி, வங்களாவடி சந்தி, வேலணை, என்ற முகவரியில் 2011 மார்ச் மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 9.17 மணிக்கு சுபவேளையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

முகாமையாளர்: 021 3202142 பொது: 021 3202143, 021 3202144 தொலைநகல்: 021 3734813



COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோர வியாபாரத்தால் நட்டமடையும் கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகள்

கிளிநொச்சி,மார்ச்28

பொருத்தமற்ற திட்டமிடல் மற்றும் வீதியோர வியாபாரம் என்பவற்றால் கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் பெரும் நட்டமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சிப் பொதுச் சந்தை நகரில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அம்பாள் குளத்தில் இயங்கி வருகின்றது. கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாகத்தில் இயங்கி வரும் பொதுச்சந்தைக்கு வெளியே ஏ-9 வீதியை அண்டிய பகுதிகளில் வீதியோரக் கடைகள் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் பொதுச்சந்தை வியாபாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தாங்கள் பெற்ற பல இலட்சம் ரூபா கடன்களை மீளளிக்க முடியாத நிலையில் திண்டாடுவதாகவும் பொதுச்சந்தை வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர். பொதுச் சந்தையை அம்பாள்குளம் பகுதிக்கு இடம்மாற்றியபோது பேருந்து நிலையமும் இடம் மாற்றப்படுமென அரச அதிகாரிகளும் அரச தரப்பு அரசியல்வாதிகளும் உறுதி வழங்கியிருந்தனர். ஆனால் பொதுச் சந்தை மாற்றப்பட்டதே தவிர பேருந்து நிலையம் மாற்றப்படவில்லை. பெருமளவு மக்கள் ஏ- 9 வீதியை மையமாகக் கொண்டே தமது நாளாந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனால் அனுமதியின்றி இயங்குகின்ற பாதையோரக் கடைகள் அதிகரித்துள்ளன. இத்தகைய வியாபாரம் வெளிமாட்டங்களைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுவதாலோ என்னவோ அதனைத் தடை செய்ய அதிகாரிகள் பின்னிற்பதாகவே தெரிகிறது. எனவே பேருந்து நிலையம், பொதுச் சந்தை என்பவை திட்டமிடப்பட்டவகையில் ஒருங்கிணைந்து இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவரை பொதுச்சந்தை வர்த்தகம் மேம்பாடு அடையாது என்பதுடன் தாங்கள் தொடர்ந்தும் கடனாளிகளாக இருக்கப் போகின்றோம் என அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இத்தகைய குறைபாடுகள் தொடர்பில் தாம் முன்வைக்கும் கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களால் முறையாகப் பரிசீலிக்கப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கவனயீர்ப்பை மேற்கொள்வதற்காக வியாபாரப் புறக்கணிப்பை மேற்கொள்ள முயன்றபோது அரச செயலகம் தந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அதிக சிரத்தை எடுக்குமாறு வேண்டுகிறோமென அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-301)

## நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முல்லைத்தீவில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

முல்லைத்தீவு,மார்ச்28

நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த மாவட்டத்துக்கு வருகை தந்த நாமல் காலையில் முள்ளியவளை, கலைமகள் வித்தியாலயத்துக்கு முதலில் வருகை தந்தார். அங்கு இந்த மாவட்டத்தில் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியெய்திய 23 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் காசோலைகள் வழங்கினார். அத்துடன் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு 5 மோட்டார் சைக்கிள்களையும் வழங்கினார்.

பின்னர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்குச் சென்ற நாமல் அந்தப் பாடசாலையைப் பார்வையிட்டதுடன் உயரம் பாய்தலுக்குப் பயன்படும் மெத்தை ஒன்றினையும் அதிபரிடம் வழங்கினார்.

மேலும் முள்ளியவளை மகா வித்தியாலயத்துக்குச் சென்ற அவர் அங்கு அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் அன்று மாலை தர்மபுரம் அ.த.க.பாடசாலைக்குச் சென்று அங்கும் பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்தார்.

பின்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின்போது 20 விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்களை வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீரங்கா, பஸ்நாயக்கா ஆகியோர் மற்றும் வடமாகாண நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.இராசநாயகம், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

### நல்ல ஆரம்பம்...



வெற்றிக்குப் பரிசு:சோரன்பற்று கணேசா வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவனுக்கு கிளிநொச்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (313)

## 22 வருடங்களுக்குப் பின்னர் ஆரம்பமானது கிளிநொச்சி- வடமராட்சி கிழக்கு பஸ்சேவை

கிளிநொச்சி,மார்ச்28

கிளிநொச்சிக்கும் வடமராட்சி கிழக்குக்குமிடையே 22 வருடங்களுக்குப் பிறகு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சிக்கும் வடமராட்சி கிழக்குக்குமான பஸ்சேவை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தற்போது யுத்தம் ஓய்ந்த நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.30 மணிக்கு ஆழியவளையில் ஆரம்பமாகும் இந்தப் பஸ்சேவை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை வழியாகப் பளை, புதுக்காட்டுச் சந்தியை அடைந்து தொடர்ந்து ஏ-9 பிரதான வீதி வழியாகக் கிளிநொச்சியைச் சென்றடையும்.

பின்னர் மாலை 5 மணிக்கு இந்த பஸ் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு மேற்கூறிய வழித் தடங்களூடாக இரவு 10 மணியளவில் ஆழியவளையைச் சென்றடையும்.

தற்போது கிளிநொச்சி பஸ் டிப்போவில் 8 பஸ் வண்டிகளே உள்ளதால் ஒரு பஸ் வண்டி மட்டுமே இந்தச் சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# கல்வியையும் விளையாட்டையும் இருகண்களாக மாணவர்கள் மதித்துப் போற்ற வேண்டும்

### கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி,மார்ச்28

மாணவர்கள் கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாக மதிக்க வேண்டுமென கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக அறிவேன். ஆசிரியர்கள் பற்றாக்குறையென்பது வலயப் பாடசாலைகளில் நிலவும் பொதுவான பிரச்சினையாக உள்ளபோதிலும் இந்தப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையைக் குறிப்பாக விஞ்ஞான பாடத்துக்குரிய ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நீண்ட நள்களுக்குப் பிறகு இந்தப் பகுதியில் நடைபெறும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டுள்ளமை மகிழ்வைத் தருகிறது எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை முதல்வர் க.இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சிக் கோட்டக்கல்வியதிகாரி சு.அமிர்தலிங்கம், கோணாவில் பகுதி இராணுவ அதிகாரி லெப்டினன்ட் சரத்குமார, கோணாவில் கிராம அலுவலர் த.அருந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.(க-410)

## நெடுங்கேணி பனை, தென்னை கூ.சங்கத்தின் அங்கத்தவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில்

வவுனியா, மார்ச் 28

நெடுங்கேணி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நிலை காரணமாக அங்கத்தவர்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகச் சங்கத் தலைவர் இ.ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்படாமையே இதற்குக் காரணமென அவர் மேலும் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கம் போரின்போது தனது வளங்கள் அனைத்தையும் இழந்தது. தற்போது தனது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது. தற்போது ஏழு கிளைகளுடன் செயற்படும் இந்தச் சங்கம் அதிகளவான அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

தற்போது சங்கத்திற்குச் சொந்தமாகக் காணி எதுவுமில்லை. இதனால் தலைமை அலுவலகத்தை நிறுவமுடியாதநிலை தோன்றியுள்ளது. மேலும் தற்போது கள் உற்பத்திக்கான பருவகாலம் என்பதனால் பதநீர் மூலம் வெல்ல உற்பத்தியை மேற்கொள்ள முடியும். ஆனால் இட வசதியோ, தளபாட உபகரண வசதியோ இல்லாததால் இதனை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் சங்கம் தற்போது உள்ளது. அத்துடன் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலையும் நீடிக்கிறது.

தற்போது இந்தச் சங்கத்தில் 30 இற்கும் மேற்பட்ட மகளிர் குழுக்கள் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய பனை தென்னை சார் பயிற்சி நெறியினை நடத்த வேண்டிய அவசியமும் சங்கத்திற்குத் தற்போது ஏற்பட்டுள்ளது. (க-14-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் புனரமைப்பு வேலைத்திட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதாக குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மார்ச் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் மக்களை ஈடுபடுத்தி மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் பணத்துக்கான வேலைத்திட்டத்தில் பாடசாலை மாணவர்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடுத்துவதாக சிறுவர் நல அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

வவுணதீவுப் பிரதேசத்தில் 18 வயதுக்குக் குறைந்த மாணவர்களை அதிக எண்ணிக்கையில் வேலையில் ஈடுபடுத்தியதாக பிரதேச செயலாளருக்கும் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் வவுணதீவு சிறுவர் பிரிவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

பன்சேனைப் பிரதேசத்தில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனம் இந்த மாணவர்களை ஈடுபடுத்தியதாக கிராம சேவை உத்தியோகத்தர் எழுத்து மூலம் சிறுவர் நன்னடத்தைப் பிரிவிற்கு தெரிவித்துள்ளார். (204)

# சமூக சேவை அதிகாரிகள் இல்லை

திருகோணமலை,மார்ச் 28

திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலகத்தில் சமூக சேவை அதிகாரி ஒருவர் இல்லாமையினால் அந்தப்பகுதி மக்கள் சிரமத்திற்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

8,500 இற்க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்துவரும் இந்தப்பகுதியில் சமூக சேவை அதிகாரி இல்லாமையினால் முதியோர்களுக்கான முதியோர் அடையாள அட்டை போன்ற பல சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மொறவெவ பிரதேச செயலாளரைக் கேட்ட போது, இந்தப் பதவிக்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லையென்றும் அது தொடர்பாக திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (204)

# கிழக்கில் யானைகள் அட்டகாசம்; ஒருவர் படுகாயம்; 5 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு, வவுணதீவு - பன்சேனை கிராமத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை மக்கள் நித்திரையில் இருந்த வேளையில் யானைகள் புகுந்து வீடுகளை சேதமாக்கியதுடன் அங்கிருந்த மக்களையும் தாக்கியுள்ளன.

இதில் படுகாயமடைந்த ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனைய சிலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளன. 5வீடுகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

யானைகள் கிராமத்திற்குள் புகுந்து வீடுகளை சேதமாக்கிய சத்தம் கேட்ட மக்கள் அங்கிருந்து தப்பி ஓடியதால் பலர் உயிர்பிழைத்துக் கொண்டதாக அந்தப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடமும் இந்தவருடமும் இதுவரை படுவான் கரைப் பிரதேசத்தில் யானை தாக்கி 15பேர் உயிரிழந்துள்ளனர்.

19 பேர் படுகாயமடைந்துள்ளனர். 108 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

55வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பல ஏக்கர் பயிர்களும் தென்னைமரங்களும் யானைகளின் தாக்குதல்களில் சேதமடைந்துள்ளன எனவும் அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (204)

# கெசல்கமுவப் பாலத்தைப் புனரமைக்குமாறு கோரிக்கை

பொகவந்தலாவை ஆல்டி தோட்டத்திற்கும் ராணிக்காடு தோட்டத்திற்கும் இடையே, கெசல்கமுவ ஓயா ஆற்றுக்குக் குறுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பாலம் உடைந்து பல வருடங்கள் கழிந்துள்ளபோதும் இதுவரை மீளப் புனரமைக்கப்படவிலலை என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆல்டி தோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக இந்தப்பாலத்தினைப் பயன்படுத்தி வந்தனர். உடைந்த நிலையிலுள்ள இந்தப்பாலத்தினை உரிய முறையில் செப்பனிடுவதற்கு அம்பகமுவ பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204)

# நானுஓயாவுக்கான ரயில் சேவை பாதிப்பு

கண்டி, மார்ச் 28

நானு-ஓயாவிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயில் ஒன்று வட்டகொட ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்டுள்ளது. இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெற்றதாக ரயில்வே திணைக்களத்தின் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இந்த விபத்துக் காரணமாக மலையகத்திற்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து கொழும்பிலிருந்து மலையகம் நோக்கிப் பயணிக்கும் ரயில்கள் தலவாக்கலை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பதுளையிலிருந்து புறப்படும் ரயில்கள் வட்டகொடவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட ரயில் சேவையை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

# தோட்டப் பகுதிகளில் அம்மை நோய் தாக்கம்

நுவரெலியா, மார்ச் 28

நுவரெலியா மாவட்டத்தில் அக்கரப்பத்தனை பகுதியிலுள்ள பல தோட்டங்களில் அம்மை நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாகத் தோட்டச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

பத்து வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் இந்த நோய்ப் பீடிப்புக்கு அதிகமாக உள்ளாகின்றார்கள்.

அண்மைக் காலங்களில் நிலவிவரும் வரட்சியான காலநிலை காரணமாக இந்தநோய் தீவிரமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (204-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 1933.08.09
உதிர்வு: 2011.02.26

### நாகமணி இரத்தினவடிவு

அல்லும் பகலும் உம்மை
வருத்தி எம்மை ஆளாக்கி
எமக்கு நல்இனிய வாழ்வு
தந்த தியாகச் சுடரே அம்மா
இன்று நீங்கள் இல்லாமல்
சிற கொடிந்த பறவைகள்
ஆனோமே அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது தயாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் மற்றும் வெளியூரில் இருந்து தொலைபேசி மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி பத்திரிகை மூலமாகவும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மரணத்தின்பின் பலவகையிலும் உதவிகள் செய்தவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (28.03.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தாயாரின் பிரிவால் வாடும்:
பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தவர்கள்

இல.449, இராமலிங்கம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(48,19,23)



## VACANCIES

1. **Course Counselors** Female
   should be qualified in G.C.E (A/L) having good command in English and computer literacy.
2. **Lecturers** Male/Female (Full or part time)
   Computer Hardware or Graphics or Programming or accounting and experience is an added qualification.
3. **Instructors** Male/female
   Office application or Graphics or Programming or web designing or animation or accounting and previous experience is an added qualification.

தற்பொழுது வெற்றிடம் உள்ள எமது பின்வரும் கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்,
**யாழ்ப்பாணம், திருநெல்வேலி, மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, தண்ணீரூற்று மற்றும் வவுனியா**

Apply before the 10th of April 2011

கடித உறையின் இடதுபக்க மேன்மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, பணியாற்ற விரும்பும் இடம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.

TECHNO WORLD Studies (Pvt) Ltd

அனுப்பவேண்டிய முகவரி

**The Human Resource Manager**
**TECHNO WORLD Studies (Pvt) Ltd**
**No.344,Kasturiyar Rd.**
**Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சிறுபோக நெற்செய்கையை ஊக்குவிப்பதற்கு கடன் உதவிகள்

மட்டக்களப்பு, மார்ச் 28

சிறுபோக நெற்செய்கையை கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கிழக்கிலுள்ள கமத்தொழில் சேவைப் பிரிவிலுள்ள சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வங்கிக் கிளைகளின்மூலம் கடன் உதவிகளும், விவசாயத் திணைக்களத்தின்மூலம் விதை நெல், உரம் ஆகியவையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்தவாரம் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொண்டு சிறுபோக நெற்செய்கை வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டு சிறிய குளங்களை உடனடியாக விவசாயிகளின் ஒத்துழைப்புகளுடன் புனரமைப்புச் செய்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

பிரதேச மட்டத்தில் சிறிய குளங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் ஆகியவை புனரமைப்புச் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் அறுவடை செய்துள்ள விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் வேலைகளை நெல் சந்தைப்படுத்தும் மாவட்ட முகாமையாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதுவரை அம்பாறை மாவட்டத்திலேயே கூடுதலான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனச் சபையின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுபோக நெற்செய்கையை காப்புறுதி செய்து கொள்ளுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்போகத்தின்போது காப்புறுதி செய்து சேதமடைந்த வயல் நிலங்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## திறப்பு......



திருகோணமலை,தம்பலகாமம், பாரதிபுரத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கால்நடை வைத்திய பரிசோதனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், கிழக்கு மாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா ஆகியோர் இணைந்து திறந்து வைக்கின்றனர். (204)

# தமிழ் மக்களின் ஏகோபித்த குரல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, மார்ச்28

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த குரல் என்பதை நாவிதன் வெளிப் பிரதேச மக்கள் நிரூபித்துள்ளனர். அதற்காக இந்தத்தருணத்தில் நான் நாவிதன்வெளிப் பிரதேச மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

-இவ்வாறு தெரிவித்தார் நாவிதன்வெளி பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் த.கலையரசன் .

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் நாவிதன்வெளிப் பிரதேச சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

நாவிதன்வெளிப் பிரதேச மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெற்றுத் தந்த இந்த வெற்றியானது இந்தப் பிரதேசத்துக்கு மட்டுமல்ல, இந்தநாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழருக்கும் பெற்றுத்தந்த வெற்றியாகும்.

எமது மக்கள் பலத்த சவால்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் விழிப்பாக இருந்து செயற்பட்டு ஜனநாயக ரீதியான வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளனர். எமது பிரதேச மக்களுக்கு நானும், எமது உறுப்பினர்களும் எம்மாலான பரிபூரண சேவையைச் செய்வோம் - என்றார்.

# கிண்ணியா- மூதூர் தரை வழிப்பாதை திறப்பு

கிண்ணியா மற்றும் மூதூருக்கான உறவுப் பாலமாக விளங்கும் ஏ-15 தரை வழிப்பாதை மக்கள் பாவனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த வீதி அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அதிகளவு பாதிக்கப்பட்டிருந்ததன் விளைவாகத் தற்காலிகமாக மூடப்பட்டது. இதனால் கிண்ணியா -மூதூருக்கான தரை வழிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்ததால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தனர். இந்தவீதி தற்போது திறக்கப்பட்டுள்ளதால் மக்கள் தமது பயணத்தை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொண்டு வருகின்றனர். (204)

# கண்டி வைத்தியசாலையில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கண்டி,மார்ச் 28

கண்டி பொது வைத்தியசாலையின் ஊழியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வைத்தியசாலையின் கனிஷ்ட பிரிவு ஊழியர் ஒருவர் தாதி ஒருவரினால் தாக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் 20 ஆவது விடுதியில் கடமையாற்றிய தாதி ஒருவர் கனிஷ்ட பிரிவில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரைத் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கனிஷ்ட பிரிவின் அதிகாரிகளுக்கும், வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடலை அடுத்து, உரிய தாதியை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வைத்தியசாலை நிர்வாகத்தினர் உறுதியளித்ததைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தினால் வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு 3 மணிநேரம் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

# படகு சேவை நிறுத்தம்; மக்கள் சிரமம்

மட்டக்களப்பு,மார்ச்28

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் - குருமண்வெளிக்கிடையிலான இயந்திரப் படகுகள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 5 மணிக்குப் பின்னர் போக்குவரத்தில் ஈடுபடுவதில்லை. இதனால் பிரயாணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மண்டூர் பகுதியிலிருந்து இந்தப்பாதையூடாகக் களுவாஞ்சிக்குடிக்குப் பகுதிநேர வகுப்புகளுக்காகச் செல்லும் மாணவர்கள் முதல் அனைவரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அதிக தூரமான பட்டிருப்பு வீதியூடாகவே பயணிக்கவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பாடசாலை பஸ் சேவையின்றி சாமிமலை மாணவர்கள் அவதி

சாமிமலையிலிருந்து நடத்தப்பட்டு வந்த பாடசாலை அரச பஸ் சேவை கடந்த சில தினங்களாக இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிவனொளிபாதமலை யாத்திரிகர் பருவகாலத்தின்போது இந்தச் சேவை சீராக நடைபெறுவதில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பஸ்சேவை சீராக நடைபெறாததால் இந்தப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஹற்றன் டிப்போ அதிகாரிகள் இந்தப் பஸ்சேவையைச் சீராக நடத்தவேண்டும் என மாணவர்களும், பெற்றோரும் கோரிக்கை விடுக்கின்றனர்.


# கால் நடைகளின் தங்குமிடமாகியுள்ள வாராந்தச் சந்தைக் கட்டடம்

அம்பாறை,மார்ச் 28

அம்பாறை, நான்காம் கொலனியில் யு.எஸ்.எயிட்ஸ் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தைக் கட்டடம் மற்றும் பஸ் தரிப்பு நிலையம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு 3 வருடங்களுக்கு மேலாகி எவ்வாறான பயன்பாடுகள் இன்றி காடு வளர்ந்து காணப்படுகின்றது எனப் பிரதேசமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடங்களை மக்கள் பாவனைக்குப் பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை முறைப்பாடு தெரிவித்தும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக நாவிதன் வெளிப்பிரதேசசபைத் தவிசாளராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள கலையரசனிடம் தொடர்பு கொண்டபோது, தனக்கு முன்னர் தவிசாளராக இருந்த



கிழக்கு மாகாண சபை உறுப்பினர் புஸ்பராசாவின் காலத்தில் திட்டமிடல் இல்லாமல் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி தான் பதவியேற்றவுடன் இந்தக் கட்டடங்களை மக்கள் பாவனைக்குத்திறக்க நடைவடிக்கை எடுப்பேன் என அவர் உறுதியளித்துள்ளார்.(204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையப் பாதுகாப்பு களஞ்சியத்திலிருந்து ரூ.6.2 கோடி பெறுமதி தங்க பிஸ்கட் கொள்ளை

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பூட்டுடைத்துக் கைவரிசை

கொழும்பு, மார்ச் 28

வெளிநாடுகளிலிருந்து விமானம் மூலம் கொண்டுவரப்படும் மிகப் பெறுமதியான பொருள்களை வைக்கும் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் களஞ்சிய அறையிலிருந்து சுமார் 6 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன - என விமான நிலையப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக்கொள்ளை தொடர்பில் விமான நிலையப் பொலிஸார் மேலும் தெரிவித்தவை வருமாறு:

15 கிலோ 200 கிராம் நிறையுடைய இந்த தங்க பிஸ்கட்டுகள் கடந்த திங்கட்கிழமை துபாய் தங்க விற்பனை நிலையமொன்றிலிருந்து கொழும்பிலுள்ள வர்த்தகரொருவருக்கு விமானம்மூலம் அனுப்பப்பட்டது. உரிமையாளர் வந்து பொறுப்பேற்கும் வரை அவை விமான நிலையத்தின் அதியுயர் பாதுகாப்புக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு களஞ்சியசாலையின் வாயில் கதவிலிருந்த பூட்டுக்களை உடைத்துக் கொண்டு உட்புகுந்த இனந்தெரியாத நபர்கள் தங்க பிஸ்கட்டுகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த பாதுகாப்புக் களஞ்சியம் சுங்கத் திணைக்களத்தின் பாதுகாப்பில் உள்ளது. அதன் பாதுகாப்புக்கு தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

கொள்ளை இடம்பெற்ற இரவு கடமையிலிருந்த சுங்க அதிகாரிகளிடமும், பாதுகாப்பு அதிகாரிகளிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகளில் முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. கொள்ளையர்கள் இன்னும் ஓரிரு தினங்களில் கைது செய்யப்படுவார்கள் என விமான நிலையப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மரண விசாரணை அதிகாரிகளாக ஓய்வுபெற்ற பொலிஸார் நியமனம்

## நீதியரசர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்28

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகள் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாகவும், இணக்க சபை உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படுவர் - என நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளை திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமிப்பது பொருத்தமானதே.

மரணங்கள் சம்பவிக்கும்போது அவற்றை விசாரித்து தாமதமின்றி சடலங்களை உறவினர்களிடம் கையளிப்பதற்கு ஏற்றவிதத்தில் இந்த நியமனங்கள் அமையும். அத்துடன் ஓய்வுபெற்ற பொலிஸ் பரிசோதகர்களை இணக்கசபை உறுப்பினர்களாக நியமிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் - என்றார்.

மாநாடு...




ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹசன் அலி ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் எம்.பி. பாரூக் உட்பட பலர் கலந்துகொண்டனர். (204)

# மின்னல் தாக்கியதில் 17 பசு மாடுகள் பலி

மட்டக்களப்பு,மார்ச் 28

மட்டக்களப்பு, பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குழுவினமடு கிராமத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை மின்னல் தாக்கியதில் 17 பசு மாடுகள் உயிரிழந்துள்ளன.

3 பண்ணையாளர்களின் பசு மாடுகளே மின்னல் தாக்கத்தில் உயிரிழந்துள்ளதுடன், இறந்த பசு மாடுகளின் பெறுமதி மூன்றரை லட்சம் ஆகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மரத்தின் கீழ் நின்ற பசு மாடுகளே இந்த மின்னல் தாக்கத்தில் உயிரிழந்துள்ளன. (204)

# கோட்டை- வவுனியா இரவு நேர ரயில் சேவையில் நேரமாற்றம்

வவுனியா,மார்ச் 28

கோட்டையிலிருந்து, வவுனியா வரும் இரவுநேர தபால் ரயில் சேவையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் இரவு 9.45 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்ட வவுனியா தபால் ரயில், புதிய நேரமாற்றத்தின்படி இரவு 8.30 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு அதிகாலை 3.10 மணிக்கு வவுனியாவை வந்தடையுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியாவிலிருந்து கோட்டைக்கு புறப்படும் யாழ்தேவி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் பிற்பகல் 2 . 30 மணிக்கு புறப்பட்டு கோட்டையை இரவு 7.10 மணிக்கு சென்றடையுமென ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (204)

# வடக்கு, கிழக்கு விவசாயிகள் பெற்ற வங்கிக் கடனைத் தள்ளுபடி செய்க

கொழும்பு, மார்ச் 28

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு விவசாயிகள் தமது விவசாயச் செய்கைக்காக வங்கிகளில் பெற்றுள்ள வங்கிக் கடனை முற்றாகத் தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அல்லது அந்தக்கடனை திருப்பிச் செலுத்த அவர்களுக்கு ஒருவருட கால அவகாசம் வழங்கவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் .

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு, கிழக்கு விவசாயிகள் வங்கிகளில் கடன் பெற்று விவசாயம் மேற்கொண்டனர். அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாக விவசாய நிலங்கள் அழிவுற்றன. சுமார் 80 சதவீதமான விவசாய நிலம் பாதிக்கப்பட்டது.

வங்கிகளில் விவசாயத்திற்காகப் பெற்ற கடனை மீளச் செலுத்த அவர்களால் முடியாதுள்ளது.

இதனால் அந்த விவசாயிகளின் மனநிலையைப் புரிந்து அந்த வங்கிக் கடனை முற்றாகத் தள்ளுபடி செய்ய அல்லது கடனை திருப்பிச் செலுத்த ஒரு வருட கால சலுகை வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் சுமார் 8 ஆண்டுகளுக்கு மேல் 8 ஆயிரம் ரூபா சம்பளத்துடன் பல்தர உதவியாளர்கள் செயற்படுகிறார்கள்.

அவர்களுக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களில் 40 வயதுக்கும் மேற்பட்டோரும் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இரண்டாயிரம் ரூபா சம்பளத்தில் ஆசிரிய உதவியாளர்கள் கடமை புரிகின்றனர். அவர்கள் இன்று வரை பயிற்சிநெறிகளுக்கு உள்வாங்கப்படவில்லை. கிளிநொச்சி, வவுனியா - வடக்கு, மன்னார் - மாந்தை ஆகிய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் தொடர்ந்து இழுத்தடிக்கப்படுகிறது. இது குறித்து அரசு கவனம் செலுத்தவேண்டும்.

தலைமன்னார் மீனவர்கள் கடந்த யுத்தக் காலத்தில் தங்களது மீன்பிடித் தொழிலை இலகுவாக மேற்கொண்டு வந்தார்கள். இன்று யுத்தம் முடிந்து 2 வருடங்களாகின்றன.

அந்த மீனவர் கள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

மீன்பிடிக்கச் செல்வதாயின் அவர்கள் இராணுவத்தினர், கடற்படையினர், கிராமசேவகர் ஆகியோரிடம் அனுமதி பெற்று 3 புகைப்படங்களைச் சமர்ப்பித்த பின்னர் கிடைக்கும் டோக்கன் மூலம் மீன்பிடி நடவடிக்கைக்குச் செல்லவேண்டியிருக்கின்றது.

நீர்கொழும்பிலிருந்து வரும் சிங்கள மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் ஒரு தடையுமின்றி மீன்பிடிக்கின்றார்கள்.

அத்துடன், இந்தியாவிலிருந்து வரும் தமிழக மீனவர்கள்கூட அங்கு எவ்வித தடையுமின்றி மீன்பிடிக்கின்ற நிலையில் அங்குள்ள தலைமன்னார் மீனவர்களுக்கு மீன்பிடிக்க பல்வேறு கெடுபிடிகள் விதிக்கப்படுகின்றன- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



மயிலிட்டி றோ.க.த. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் பாடசாலையின் முன்னாள் அதிபர் சி. நாகையா உரையாற்றுகின்றார். (555)



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா பாடசாலை அதிபர் எஸ். சிவ சிதம்பரம் சகிதம் அழைத்து வரப்படுகிறார். (319)



கோப்பாய் கோட்டப்பாடசாலைகளின் விளையாட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் ஆரம்பக்கல்வி மாணவர்களின் இசையுடன் அழைத்துச் செல்லப்படுகின்றார். (72)



நாவற்குழி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.சிவகுமார், பாடசாலை முதல்வர் திருமதி வ. மேகலிங்கம் மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர். (121)

மட்டுவில் தெற்கு அ.மி. த.க. வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது சிரேஷ்ட மாணவ தலைவியான சிறிதரன் பிரியங்காவுக்கு வித்தியாலய முன்னாள் அதிபர் த. அப்புத்துரை சின்னஞ் சூட்டுகிறார். (327)



# வடக்கு, கிழக்கில் பனைவளம் இயற்கை அன்னையின் அருங்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயற்கை அன்னையின் அருங்கொடை பனைவளம். இந்தப் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்துமிடத்து ஒரு வருடத்தில் வருமானமாக 500 கோடி ரூபாவைப் பெறமுடியும் என்றுபனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

நெடுங்கேணி பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெற்ற பனங்கைப்பணி உற்பத்திப் பயிற்சி நிலையத்தின் ஆரம்பநாள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

பனை வளத்தால் பெறப்படும் பயன்களை சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதற்கு பனை அபிவிருத்திச் சபையால் புதிய தொழில்நுட்பங்கள் கண்டறியப் பட்டு வருகின்றன.

அதனால் நம் நாட்டு வளத்தை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு அனைவரும் முன் வரவேண்டும்.

1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட பனை அபிவிருத்திச் சபை பனை வளத்தை அபி விருத்தி செய்வது தொடர்பாகவும் அதனை தொழில் வாய்ப்பாக நம்பியுள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தன்னுடைய சேவைகளை வழங்கி வருகின்றது.

இவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாள்கைக் குழுவிலிருந்து மூன்று அங்கத்தவர்களை பனை அபிவிருத்திச் சபையின் நெறியாள்கைக் குழுவுக்கு தெரிவு செய்துள்ளோம்.

இந்த இரு நிறுவனங்களதும் இணைந்த செயற்பாடுகளில் ஒன்றாக பயிற்சி நெறிக்கான போதனா ஆசிரியர்களுக்கு வழிகாட்டல், ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சியினூடாக இணைந்து கொள்ளும் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை பனை அபிவிருத்தி சபை வழங்கவுள்ளது.

தற்போது இந்த நிலையத்தில் உற்பத்திப் பயிற்சிக்காக இருபது பெண்கள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார். பனைசார் கைப்பணிப் பயிற்சி, வெல்ல உற்பத்திப் பயிற்சி, மிக்சர் உற்பத்தி ஆகியவற்றின் ஆரம்பநாளான இந்த நிகழ்வு நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ. ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் அலுவலர், வவுனியா மாவட்ட பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர், வவுனியா வடக்கு, பிரதேச செயலாளர் பிரிவு கூட்டுறவு பரிசோதகர் எஸ். உதயகுமார், வவுனியா மாவட்ட சிறு கைத்தொழில் பணிப்பாளர், கைப்பணிப் பயிற்சி ஆசிரியை திருமதி எம். லோகேஸ்வரி, முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பொது முகாமையாளர் சி. வேதவனம், சங்கத்தின் மகளிர் குழு அங்கத்தவர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

(ம-313)

# வாழ வழிகாட்டுபவையாக சமய நூல்கள் அமைகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 28

சிறுவயது தொடக்கம் சமயம் சார்ந்த நூல்களைக் கற்பதன் மூலம் எவ்வாறுவாழ வேண்டும் எனும் நுட்பத்தை அறிவதுடன் சந்தோசமான வாழ்க்கை முறையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சின்மயா மிஷன் துறவி பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்யா சுவாமிகள் தெரிவித்தார்.

யாழ். சென். ஜோன்ஸ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் ''வாழ்க்கையும் ஆன்மீகமும்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போது:

மாணவப் பருவம் என்பது வாழ்க்கையை வாழ்வதற்கான ஆரம்பம் என்பதால் நாம் எப்படி வாழ வேண்டும் என்பது வாசித்து தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை முறை சரியானதா? என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இறைவன் எம்மைப் படைக்கும் பொழுது சமய நூல்களையும் தந்துள்ளார். ஆனால் நாம் அதனைப் பயன்படுத்துவது கிடையாது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் நிரந்தரமான சந்தோசத்தை அனுபவிப்பது கிடையாது. அதனை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுவார்.

சமய நூல்களை வழிகாட்டிகளாகப் பயன்படுத்த வேண்டும்.

எந்த நேரமும் 'நேரம் இல்லை' என்னும் பதட்டத்துடன் தான் காரியங்களைச் செய்கின்றோம்.

புத்திக் கூர்மையடையச் செய்வதற்கும் மனதை ஒரு நிலைப்படுத்தியைக் காரியங்களில் வெற்றி பெறுவதற்கும் சமய நூல்களைப் படிக்க வேண்டியது அவசியமாகும்.

முதுமையடைந்த பின் சமய நூல்களை வாசிப்பதால் எந்தப் பயனும் இல்லை. அதனை சிறு வயது முதல் பழக்கப்படுத்திக் கொண்டால் வாழ்வு சிறந்ததாக அமையும் - என்றார்

(ம-313)

# தொழில்நுட்பத்தை சாதகமாக்கி வழி தவறிச் செல்லும் இளைஞர் சமூகம்

காரைநகர், மார்ச் 28

இன்றைய இளம் சமூகம் தொழில்நுட்ப வளர்ச்சியை சாதகமாகப் பயன்படுத்தி அதில் உள்ள நல்ல விடயங்களைப் பயன்படுத்துவதோடு தீய விடயங்களையும் தேடி ஆராய்கின்றார்கள்.

இதனால் சமூகம் நெறி பிறழ்வு நிலைக்கு உள்ளாகின்ற நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரி. சசிகுமார். காரைநகர் திக்கரை பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:

குழந்தை ஒன்று பிறந்து தாயுடைய அரவணைப்பிலும், தந்தையினது பாதுகாப்பிலும் வளர்ந்து முதற் தடவையாக குடும்பத்தினருக்கு அடுத்ததாக சந்திப்பது முன்பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும்தான்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய்போல் இந்த ஆசிரியர் மிகவும்பொறுமையோடும்அன்போடும் கல்வியை ஊட்டவேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் எனப் பல்வேறு நிலைகளுக்கு வரவுள்ளனர்.

பெற்றோர்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். பிள்ளைகளை எதிர்காலத்தில் நல்ல கல்விமான்களாக உருவாக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடன் அவர்களுக்கு அதிக சுமையைக் கொடுத்து விடாதீர்கள். குழந்தைகளின் மனங்களைப் பாதிப்படையச் செய்யாதீர்கள். இன்று 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் ஏதோ கௌரவக் குறைச்சல் என்கின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தங்களுடைய பிள்ளைகள் கல்வி அறிவு உள்ளவர்களாக வரவேண்டும் என்பதோடு நல்ல பழக்க வழக்கம் உள்ளவர்களாக ஆன்மீகப் பற்றுள்ளவர்களாக வரவேண்டும் என்ற நோக்கோடு அவர்களுக்குரிய வழிகாட்டலைச் செய்ய வேண்டும். நல்ல சூழலை அமைத்துக் கொடுத்து பிள்ளைகளோடு மனம் விட்டுக் கதைக்க வேண்டும்.

சரி பிழைகளைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்த்த இலக்கை முழுமையாக அடைய முடியும் என்றார்.

(ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்களிடம் கோபத்தைக் காட்டாமல் அனுசரித்துச் செல்ல வேண்டும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்கள் தள்ளிப் போகலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம்.

**இடபம்:**
திட்டமிட்டபடி காரியங்கள் நடக்காமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தேவையற்ற சில விடயங்களில் மூக்கை நுழைத்து அவதிகளுக்கு ஆள்படலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

**மிதுனம்:**
எந்த வேலையையும் சிறப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அயலாரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். புதியவர்கள் நட்பு கிடைக்கும். இனிய அனுபவம் பெறலாம்.

**கடகம்:**
திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும் நாள். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். குறுக்கு வழிச் சிந்தனைகளை விரட்டி எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அனுகூல செய்தி கேட்கலாம்.

**சிங்கம்:**
சொந்த பந்தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தீர்த்து வைப்பீர்கள். மாமன், மைத்துனர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். சில வேலைகளைச் செய்ய மறந்து குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். உல்லாசமாகப் பேசி வம்பில் மாட்ட நேரிடலாம்.

**கன்னி:**
மன உறுதியை குலைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். சிக்கலில் இருக்கும் ஒருவருக்கு அவசரமாக உதவி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம். பயணங்களால் செலவுகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் தொடர்பான வேலைகளுக்காக கடுமையாக அலையலாம்.

**துலாம்:**
இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று முடிவுக்கு வரும். சில நாள்களுக்கு முன் நீங்கள் செய்த உதவிக்கு ஒருவர் பதில் உதவி செய்யலாம். மற்றவர்கள் செய்த வேலை ஒன்றை நீங்கள் செய்ததாக காட்டி கொள்வீர்கள். நண்பர்கள் வழியில் கேட்ட உதவிகள் கிடைக்கும். உதிரி வரவுகளை பெறலாம். பரபரப்பாகச் செயற்பட நேரிடும்.

**விருச்சிகம்:**
கடும் சிரமப்பட்டும் சில வேலைகளில் தடை ஏற்படலாம். கையிருப்புகள் கரையும் அளவுக்கு செலவுகள் ஏற்படலாம். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். சிலர் உங்களை எங்காவது வரச் சொல்லிவிட்டு அவர்கள் தாமதமாக வரலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும்.

**தனுசு:**
அவசர செலவுகளை சமாளிக்க சிலரிடம் கடனாகப் பணம் பெறலாம். நேரத்திற்கு ஒரு வேலை என திட்டமிட்டு பல வேலைகளை செய்வீர்கள். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சிலர் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொள்ளலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**மகரம்:**
அனுபவ அறிவால் சாதனை படைப்பீர்கள். சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு, வெளியில் செல்லும் போது அவசரமாகத் தேடலாம். உங்களின் திறமையை நீங்களே சோதித்துப் பார்ப்பீர்கள். தர்ம, புண்ணிய காரியங்களை செய்வீர்கள். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். கேலிப்பேச்சுகளுக்கு ஆளாகலாம்

**கும்பம்:**
எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். எந்த வேலையையும் பரபரப்பு இல்லாமல், நிதானமாகச் செய்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்து பார்ப்பீர்கள். சுகமான அனுபவம் உண்டு.

**மீனம்:**
ஒருவரிடம் வாங்கிய கடனைக் கொடுத்து தீர்ப்பீர்கள். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். பெண்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். பிள்ளைகளுக்கு, குடும்பத்தினருக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

# முன்னாள் போராளிகள் குடும்பங்களின் அவலம் எப்போது தீரும்...?

வன்னியில் இறுதிக்கட்டப் போரில் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அரசு புனர்வாழ்வு அளித்து வருவதாக கூறிவரும் நிலையில் தடைமுகாமில் இருக்கும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாக மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. தடுப்பு முகாமில் இருக்கும் முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின் குடும்பங்கள் தமது வாழ்க்கை மட்டத்தில் பெரும் துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருவதாகச் சுட்டிக்காட்டுப்படுகின்றது. இவர்களின் எதிர்காலம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதால் வாழ்க்கை கேள்விக் குறியாக இருக்கிறது.

வவுனியாத் தடுப்பு முகாமில் இருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்களைப் பார்வையிடச் செல் வதற்குக் கூடப் பணவசதிகள் இல்லாத நிலையில் பல முன்னாள் போராளிகளின் உறவுகள் உள்ளன.
வலிகாமம் பகுதி ஒன்றில் வசித்துவரும் தடுப்பு முகாமில் இருக்கும் போராளிகளின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பலவாறு உள்ளன.

### போராட்டத்தின் மத்தியில் வாழ்வு

இந்தச் சமூகம் தங்களை ஒதுக்கி வைத்திருப்பதாக எல்லாச் சம்பவங்களில் இருந்தும் உணர்வதாகத் தெரிவிக்கின்றனர். இரண்டு பெண்பிள்ளைகளோடு வாழ்க்கையைப் போராட்டத்தின் மத்தியில் நகர்த்தி வருவதாகத் தடுப்பு முகாமில் உள்ள போராளியின் மனைவி ஒருவர் தெரிவித்தார். எந்த நேரமும் பயப்பீதியுடன் நாள்களைக் கழித்து வருவதாகவும் மன ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

யாராவது அவரது வீட்டுக்குச் சென்றால் அதாவது உறவுகளாக இருந்தாலும் வீட்டு ஜன்னல்லூடே வெளியே பார்த்துவிட்டுத் தயங்கி தயங்கி வீட்டுக் கதவினைத் திறந்து வாசலுக்கு வந்து படலையைத் திறந்து வந்தவர்களுடன் உரையாடுவதைப் பார்க்க முடிகிறது. அந்தக் குடும்பம் வலிகாமம் பகுதியில் தமது பிறந்த ஊரிலேயே இருக்க முடியாமல் வேறொரு தெரியாத ஊரில் வசித்துவருவது பற்றிக் கேட்டபோது, இந்தச் சமூகம் தன்னை ஒதுக்கி வைத்திருப்பதாகவும் அதனால் எனது ஊரில் இருக்க முடியாமல் இங்கே வந்துவிட்டேன் என்று மன உளைச்சலுடன் தெரிவித்தா. எமக்குத் தெரிந்த ஒரு சில இப்படியான சம்பவங்களை அறிந்துகொள்ள முடிகின்ற போது எமக்குத் தெரியாமல் எத்தனை சம்பவங்கள் இருக்கிறது. வெளியே சொல்ல முடியாமல் தமது சோகக் கதையினை மனதுக்குள்ளே புதைத்து நாளாந்தம் குமுறும் நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆயுதம் தூக்கியவர்களுக்குத் தண்டனை என்றால் அவர்களின் குடும்பங்களுக்கும் தண்டனையை வழங்குவது போல் உள்ளது. சர்வதேசப் பரப்பில் மீண் டும் தமிழீழ அரசை நிறுவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருப்பவர்கள்இப்படிப்பட்ட போராட்ட வாழ்வில் தங்களின் வாழ்க்கையினை உருக்கிக் கொண்டவர்களைத் திரும்பிக்கூட பார்க்கமுடியாமல் உள்ள சூழல் ஏற்பட்டிருப்பது எந்த அளவுக்குத் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பவர்களாகக் கருதமுடியும்.

வலிகாமம் மேற்குப் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் நாளாந்தம் சீவியத்துக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். தனது கணவனும் சகோதரனும் தடுப்பு முகாமில் இருப்பதாகவும் தனது குடும்பத்துக்கு ஆண்துணையில்லாமல் இருப்பதால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவித்தார். அவர் ஒருநாள் தனது ஊரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது பேருந்தினுள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் இந்தப் பெண்ணைப் பார்த்ததும் எங்கே இருக்கிறியள்? என்ன செய்கிறியள்? எங்கே போகிறீங்கள்? என்று கேட்டதும் வேர்க்க விறுவிறுக்கப் பதில் சொல்ல முடியாமல் பிழையான தகவல்களை கொடுத்து விட்டதாகத் தெரிவித்தார். இப்படிப்பட்ட பிரச்சினையில் முதலில் பழக்கப்பட்டவர்கள் இன்று அவர்களைக் காணும் போதும் பேசும் போதும் ஒரு பதட்டம் அவர்களிடையே நிலவுகின்றது. இப்படிப்பட்ட சூழலினை எதிர்கொண்டிருக்கின்ற இன்றைய சமுதாயம் எப்படி வாழ்வினைப் பயபீதியில்லாமல் கழிப்பது என்று தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### போராளிகளின் மரணம்

வவுனியா பம்மைமடு தடுப்பு முகாமில் இரண்டு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளத்.

வன்னியில் இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த கிளிநொச்சியைச் சேர்ந்த 27 வயதுடைய ஆ. நியூட்டன் என்பவரே கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார். இவர் எதற்குத் தற்கொலை செய்து கொண்டார் என ஆராயும் போது தனது குடும்பத்துக்கு உதவிட யாரும் இல்லை எனவும், தனது சகோதரிகள் இருவரும் கணவன்மாரை இழந்துள்ள நிலையில் நிர்க்கதியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைக் காக்க வேண்டும். எனவே என்னை விடுதலை செய்யுங்கள் என்று பொறுப்பான அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் பயனளிக் காத போது கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார். அங்கே தடுப்பு முகாமில் இருப்பவர்கள் பலருக்கும் இதே நிலைதான். ஆகவே தான் தற்கொலை செய்வதன் மூலம் ஏனையவர்களுக்கு விடிவு கிடைக்கும் என நினைத்ததால் அந்த முன்னாள் போராளி தனது தற்கொலை முடிவினை நிறைவேற்றிக் கொண்டார். இப்படிப்பட்ட சம்பவங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்கள் என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் பல கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் கிளிநொச்சியில் முயல் பிடிக்கக் காட்டுக்குள் இறங்கியபோது காணாமல் போனதும் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் திடீரென உயிரிழந்து போனதும் தடுப்பு முகாமில் இருந்து தப்பிச் சென்றவர் கொலை செய்யப்பட்டு பிணமாக எடுப்பதுவும் என நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளில் அரசு இவர்களுக்கான பாதுகாப்பினை வழங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதா அல்லது கண்டும் காணாமல் விட்டுள்ளதா என்பது போகப் போகத்தான்வெளிச்சத்துக்கு வரும்.

### சமூகத்தால் புறக்கணிப்பு

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த இரண்டு வருடங்களாகியிருக்கின்ற நிலையில் வடபகுதியில் இருந்து முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் பலர் தாம் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதாக கூறுகின்றார்கள். தேசிய மட்டத்திலான நல்லிணக்க நடவடிக்கைகளில் அவர்களை உட்படுத்த வேண்டிய் அவசியம் குறித்து பலரும் பேசி வருகின்ற சூழ்நிலையில் தொழில் பாதுகாப்பு, திருமணம், வீட்டு வசதி போன்ற பல வகைகளிலும் நாம் புறக்கணிக்கப்படுவதாக, உணர்வதாக அவர்களில் பலர் கூறியுள்ளனர். பல முன்னாள் பேராளிகளும் திருமணம் செய்யத் தமது பிள்ளைகளை அனுமதிக்கப் பல பெற்றோர் தயக்கம் காட்டுவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். அதேபோன்று தமது சொந்த ஊரிலேயே தாம் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாடகைக்குக் கூட இடம் தர மறுக்கப் படுவதாக ஒரு முன்னாள் பெண் போராளி கூறு கின்றார். இவ்வாறு பல வகைகளிலும் புறக்கணிக் கப்படும் முன்னாள் போராளிகள் ஒரு உத்தரிப்பு நிலையில் இருப்பதாக கூறுகின்றார்கள். விடுதலைப்புலிகளின் ஆட்சியின் போது கலப்புத் திருமணம் செய்த போராளி தம்பதிகளில் கணவர் காணாமல் போன நிலையில் அவரது குடும்பத்தில் சாதியைக் காரணம் காட்டி அவரது மனைவி புறக்கணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வருடக் கணக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களை விடுவிக்கும்படி நாம் இலங்கையர் அமைப்பு அரசுக்குகோரிக்கை விடுத்துள்ளது. மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 120 புலிச் சந்தேக நபர்களில் 15பேருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டும் இல்லை. அதேபோன்று அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 55 புலிச்சந்தேக நபர்களில் 9பேருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டும் இல்லை. இந்த அப்பாவிகள் வருடக்கணக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் சுமார் 400 தடவைகள் நீதிமன்றம் சென்றுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த மகேந்திரம் என்பவர் 18 வருடங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஆயுதம் ஏந்திய குற்றத்திற்காக 18 வருடங்களாக சிறையில் உள்ள மகேந்திரனைப் போன்று பலர் இன்னும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை விடுவிப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலித் சந்தேக நபர்களைப் பார்வையிட வரும் அவர்களது பெண் உறவினர்களிடம் சிறைச்சாலை அதிகாரிகள் முறைகேடாக நடந்து கொள்கின்றனர். தங்களைப் பார்வையிட வரும் பெண் உறவினர்களிடம் சிறைச்சாலை அதி காரிகள் கீழ்த்தரமாகத் தகாத முறையில் நடந்துகொள்வதாகவும் குறிப்பாக இளம் பெண்களிடம் தொலைபேசி இலக்கங்களைக் கொடுத்து தொடர்புகொள்ளுமாறு வற்புறுத்துகிறார்கள்.

மகஸின் சிறைசாலையில் 120 புலிச்சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கைதிகளைப் பார்வையிட வரும் உறவினர்கள் வரிசையாக நிறுத்தப்படுவார்கள். அதிலும் பின் வரிசையில் உள்ளவர்கள் வரிசையின் முலாவது இடத்துக்கு வருவதற்கு சிறை அதிகாரிகளிடம் நூறுரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வழங்க வேண்டிய நிலை உள்ளது என்று நாம் இலங்கையர் அமைப்புத் தெரிவித்துள்ளது. வவுனியா தடுப்பு முகாமில் 11 ஆயிரம் பேர் தடுத்துவைக்கப் பட்டிருந்ததாகவும் பலர் விடுதலைசெய்யப்பட்டதாகவும் யாருக்கும் தெரியாத இடத்தில் பலர் அடைத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் செய்தி வெளியிட்டுள்ளமை . இதேபோல விடுதலைப்புலி மூத்த தலைவர்கள் பாலகுமார், யோகி, பாப்பா, ஆஞ்சிநேயர் கரிகாலன் போன்ற பலர் புலனாய்வு இராணுவத்திடம் இணைந்து செயற்படுகிறதாகத் தமிழ் கார்டியன் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது.

### தடுப்புமுகாம்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகள் அச்ச உணர்வில் வாழ்ந்து வருவதாக முன்னாள் போராளி ராமர் தெரிவித்தார். இப்படியாகத் தடுப்பு முகாங்களில் இதுவரை போராளிகளின் குடும்பங்கள் தமது பிரச்சினைகளை வெளியே சொன்னால் வேறு ஏதாவது பிரச்சினை வந்து விடுமோ என்ற பயத்தில் இருப்பதாகவும் விடுதலையாகி வெளியே வந்த முன்னாள் போராளிகளும் தமது பிரச்சினைகளை வெளியே சொல்ல முடியாமல் தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளை அரசு தீர்த்து வைக்க முடியும் என்று சொல்ல முடியாதுள்ளது. இலங்கையில் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் 5 ஆயிரத்து 653 பேர் பற்றி அரசு இன்னும் போதிய வாதங்களை முன் வைக்கவில்லை. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு இன்னும் உரிய பதில் அளிக்கப்படவில்லை. ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் ஆசிய மனித உரிமை அபிவிருத்தி மற்றும் சார்பாக வாய் மூலம் விளக்கமளித்த பூஜாபட்டேல் இவ்வாறு தெரிவித்தார்.

மீள்குடியமர்வுப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமை அங்குள்ள பெண்களுக்கு இடையூறாக உள்ளதாக அவர் தெரிவித்தார். ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் 16 ஆவது தொடர் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போது இவ்வாறு தெரிவித்தார். இதைப் பார்க்கின்றபோது கிளிநொச்சியில் அண்மையில் பிறந்த சிசுவைப் புதைத்த சம்பவம் இரண்டு நடைபெற்றது. இதனைப் பார்க்கிற போது அந்தப் பெண்கள் யாரால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரியவரும். பெண்கள் சம்பந்தமாக வெளிச்சத்துக்கு வராமல் இன்னும் எத்தனை சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அச்சுறுத்தப்பட்டு வெளியே சொன்னால் கொன்று விடுவோம் என்று பாதிக்கப்பட்ட பெண்களை மிரட்டியது யார் என்று நினைக்கிறீர்கள். வடக்கில் படையினரால்

**துன்னாலைச் செல்வம்**

பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் இது கண்டிக்கத்தக்கது எனக் காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தி தெரிவித்தார்.

பழிவாங்கும் படலமாக இந்த நடவடிக்கைகள் இருக்கலாம் எனச் சந்தேகங்களும் எழுந்த வண்ணம் இருக்கின்ற நிலையில் இலங்கை அரசிற்கான போர்க்குற்ற விசாரணையில் பக்க பலமாக எல்லா சம்பவங்களும் இருக்கப் போகிறது என்பது உண்மையான விடயம். இலங்கைக்கான போர்க் குற்றம் தொடர்பான ஐ.நா வின் அறிக்கை வெளியிடப்படும் போது கூடுதலான பாதிப்பினை இலங்கை அரசு எதிர்கொள்ள வேண்டி வரும் என தெரிவிக்கபடுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான். கீ.மூ னால் நிறுவப்பட்ட இலங்கை விவகாரம் தொடர்பான நிபுணர்கள் குழுவின் இறுதி அறிக்கை இலங்கைக்குப் பாதகமாக அமையும் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அந்த அறிக்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இலங்கையில் நடைபெறுகின்ற அனைத்து மனித உரிமை மீறல்களும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கும் நிலையில் அரசு தான் நினைத்தபடி எதனையும் சாதித்து விடலாம் என கனவு காணும் உலகில் ஒருநாள் பேரிடியாக வந்து விழும் செய்தி தமிழர்களுக்கு நியாயத்தை ஏற்படுத்தும் சூழலை சர்வதேசம் முன் நின்று அதனை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பது உறுதி.

## கடைசிக் கட்டம்



தர்மன் ஏன் காட்டுக்குப் போனார்? சூதாட்டத்தில் தோற் றுப் போனதால் அவர் காட்டுக்குப் போனார். தருமர் முதல் தடவை தோற்றும் போய் திரௌபதியும் அவமானப் பட்ட பிறகு திருதசராஷ்டிரன் என்ன செய்தான் தெரியுமா? தர்மர் இழந்துவிட்ட பொருள்கள் எல்லா வற்றையும் அவனிடமே கொடுத்து விடுகிறான்.

ஆனால் தருமர் மறுபடியும் சூதாடி எல்லாவற்றையும் இழக்கிறார். அதனுடைய விளைவு பன்னிரண்டு வருடம் வனவாசம், ஒருவருடம் அஞ்ஞாதவாசம் புறப்படத் தயாராகிய அந்த சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. அந்த நிகழ்ச்சியை வியாசர் சொல்லவில்லை வில்லிபுத்தூரர் மட்டும் சொல்லியுள்ளார். இதை ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் எடுத்துக்கூறினார்.

எது என்ன நிகழ்ச்சி தெரியுமா? காட்டுக்குப் போவதற்கு முன்னர் நீ மறுபடியும் ஒரு தடவை சூதாடவேண்டும் "என்று ஒரு குரல் கேட்டது" யார் அப்படிச் சொன்னது? என்று எல்லோரும் திரும்பிப் பார்த்தால் அது திரௌபதி!

"எதற்காக அப்படிச் சொல்கிறாய் என்று கேட்கிறார் தருமர். அதற்குத் திரௌபதி "நாம் இப்போது அடிமைத் தளையில் இருக்கிறோம். நீங்கள் ஜெயித்தால் அதுபோய்விடும்" தான் என்றாள்.

பணையம் வைப்பதற்கு ஒன்றுமில்லையே என்றார் தருமர். "ஒன்று இருக்கிறது என்றாள் திரௌபதை "என்ன அது?" என்று கேட்கிறார் தருமர் அதற்கு அவள் உங்கள் புண்ணியம்"தான் என்றாள்.

சரி! அப்படியே ஆடுகின்றேன் என்று சொல்விட்டு ஆடி முதல் ஆட்டத்திலேயே தோற்றுப்போகிறார். இரண்டாவது ஆட்டம் இவர் ஆடவேண்டிய முறை இவர் காய்களைக் கையிலே எடுக்கிறார். அப்போது திரௌபதி இவர் கையைப் பிடித்து பகவானுடைய பன்னிரண்டு நாமங்களையும் சொல்லிவிட்டு ஆடுங்கள் என்றாள்.

அதேமாதிரிச் சொல்லிவிட்டு ஆடி ஜெயித்துவிட்டார்! அடிமைத்தளை நீங்கிப்போய்விடுகிறது.

"ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்துவதற்குத்தான் வில்லிபுத்தூரர் வியாசர் சொல்லாத இந்தக் கதையை சொல்லியிருக்கிறார்" என்று ஆன்மிகப் பேச்சாளர் விவரம் சொன்னார்.

மனிதன் பலவிதமாகக் கஷ்டப்பட்டு அதற்குப் பின்னர் கடைசி நிலைக்கு வருகிறான். அப்போது அவன் இருக்கின்ற நிலைமையில் கடவுளைத்தான் நொந்துகொள்வானே தவிர வணங்கமாட்டான். ஆனால் அந்தச் சமயத்திலேயும் கணவனை வணங்குகிறவனுக்குக் கடவுள் என்ன செய்வார் என்றால் "அவன் செய்கிற தீமை மூலமாகவே உதவி செய்கிறார்"

சூதாட்டம் என்பது ஒரு புண்ணியமான காரியமா? அது ஒரு தீய காரியம்தான் இருந்தாலும் தருமர் அதில் வெற்றிகொள்வதற்குக் கடவுள் உதவி செய்கிறார்.

அதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். என்பதற்காகத்தான் இந்தக் கதை அதற்காகத் திருடப் போகிறவர்கள் சாமியை வேண்டிவிட்டுப் போனால் காரியம் கைகூடும் என்று நினைத்துவிடக் கூடாது.

ஒருவர் பத்து ரூபாய்க்குப் பத்து அதிஸ்டலாபச் சீட்டுவாங்கினார். பின்னர் குலுக்கல் முடிந்து பரிசு பெற்றோரின் பெயர் பத்திரிகையில் வந்தது. இவரும் பத்திரிகை வாங்கிப் பார்த்தார். இவருக்குப் பரிசு விழவில்லை என்று மிகவும் கவலையடைந்தார். "கவலைப்படாதீர்கள் பத்துரூபாய் தானே போனால் போகட்டும் என்றார் அவருடைய சினேகிதர். அது எப்படி பத்து ரூபா என்று சொல்கிறீர்கள்? எனக்கு ஐம்பது ரூபா நட்டம் என்றார் இவர். "எப்படி?" என்று கேட்டார் அவர்.

"பத்துச் சீட்டிலும் பரிசு விழவேண்டும் என்று வேண்டிப் பத்துத் தேங்காய் வாங்கி உடைத்திருக்கிறேன் என்றார். இவருக்கெல்லாம் கடவுள் எப்படி உதவி செய்வார். இவர்தான் தேங்காய்க் கடைகளுக்கு உதவி செய்திருக்கிறாரே.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்க வேதாள வெங்காயச் செய்கை

(சென்றவாரத்தொடர்ச்சி)

**பசளைப் பிரயோகம் - ¼ ஏக்கர் (1000 ச.மீ)**

வெங்காய நடுகையின் முன் அடிக்கட்டுப் பசளையாக யூரியா 6.5 கி.கிராம், ரி எஸ் பி 10 கி.கிராம், எம் ஓ பி 5 கி.கிராம்,

நட்டு 3 ஆம் வாரம் யூரியா 6.5 கி.கிராம், நட்டு 6ஆம் வாரம் யூரியா 6.5 கி.கிராம், எம் ஓ பி 2.5 கி.கிராம்.

நோய் பூச்சித் தாக்கங்களை வழமையாக வெங்காயப் பயிர்களைப் பராமரிப்பது போன்று பராமரித்தால் போதுமானதாகும். வயலில் நடுகை செய்து 65 நாள்களின் பின்னர் அறுவடை செய்யலாம்.

உண்மை விதைகளின் மூலம் உருவான வெங்காயப் பயிரில் அதிக குமிழ்கள் பிரிகையடைவதில்லை. தனிக்குமிழாகவோ இரண்டு தொடக்கம் மூன்றுக்கு மேம்படாத பெரிய கவர்ச்சியான குமிழ்களாகவோ பிரிகையடையும். அறுவடை செய்த குமிழ்களை விரும்பினால் சந்தைப்படுத்தலாம். அல்லது இரண்டு மாதங்கள் வரை சேமித்து வைத்து மீண்டும் இக்குமிழ்களை நடுகை செய்தால் அதிக விளைவைத் தரும். இவ்வாறாக மீண்டும் நடுகை செய்யும்போது அவை நன்றாக வளர்ந்து ஐந்துக்கு மேற்பட்ட குமிழ்களாகப் பிரிகையடைவதுடன் முதல் அறுவடை செய்த குமிழ்களை விடச் சற்றுப் பருமன் குறைவாக காணப்படும் குமிழ்கள் உருவாகும். ஆனால் முதல் அறுவடை விளைச்சலை விட இரண்டாவது அறுவடையில் விளைச்சல் ஒன்றரை மடங்கினை விட அதிகமாக இருக்கும். தொடர்ச்சியாக இக்குமிழ்களை நடுகை செய்யும் போது பருமனில் மாற்றம் இல்லாமலும் விளைச்சலில் குறைவு இல்லாமலும் அறுவடை செய்யக்கூடியதாக இருக்கும்.

வெங்காயப் பூக்கள் விரியும் போது இயற்கையாகவே அயன் மகரந்தச் சேர்க்கைக்கு உட்பட்டுப் பூக்களில் விதைகள் உருவாகின்றன. இவ்வாறு உருவாகும் உண்மை விதைகளில் மறைந்து செறிந்துள்ள பிறப்புரிமையியல்புகள் அவற்றை நடுகை செய்யும்போது வெளிக்கொணரப்படுகிறது. இக்குமிழ்களைத் தொடர்ச்சியாகச் சில நடுகை போகங்களுக்கு நடுகை செய்த போதும் விளைவில் குறைவு அடையாமல் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி முடிவின் மூலம் நேரடியாக உண்மை விதைகளை நடுகை செய்து பெற்றுக் கொள்ளக்கூடிய விளைச்சலை விடக் குமிழ்களை அறுவடை செய்து மீண்டும் அதே குமிழ்களை நடுகை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய விளைவானது அதிகமாக உள்ளது. அறுவடை செய்த குமிழ்களைத் திரும்பவும் நடுகை செய்யும்போது சீரான தோற்றம் நிறம் கொண்ட குமிழ்களைத் தெரிவு செய்து நடுகை செய்தால் சந்தை மானம் உள்ள குமிழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**உண்மை விதைகளை எவ்வாறு உற்பத்தி செய்யலாம்?**

விதைகளை உற்பத்தி செய்வதற்காக நன்றாக பூக்கும் தன்மையுள்ள வேதாள இனங்களில் பெரிய தாய்க்குமிழ்களைத் தெரிவு செய்து நடுகை செய்யவும் பெரிய குமிழ்கள் அதிக பூந்துளிகளை உருவாக்கும். (ASDA 2002 ஜே.பி.சுமனரட்னவும் குழுவினரும்)

இத்தாய்க்குமிழ்களை 15 ச.மீ இடைவெளிகளில் நடுகை செய்து பராமரிக்கவும் மற்றைய பராமரிப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே குறிப்பிட்டவாறு மேற்கொள்ளவும். தாய்க்குமிழ்களை நட்டு 21 நாள்களில் பூ அரும்பத் தொடங்கும். 43 நாள்களில் பூந்துணர் விரிய ஆரம்பிக்கும். பூந்துணர்கள் விரியும் முன்னர் காற்றினால் முறிந்துவிடாமல் இருக்க சிறிய அளவு நிலப்பரப்பில் உற்பத்தி மேற்கொள்ளவதாயின் வாழைநாரினால் ஆதாரம் வழங்கவும் பெரிய நிலப்பரப்பில் விதை உற்பத்தி மேற்கொள் வதாயின் அகலமான கண்ணுள்ள நைலோன் வலையினைப் பயன்படுத்தவும் பூக்கள் விரிந்துள்ள காலங்களில் கிருமி நாசினி விசுறுவதைத் தவிர்க்கவும்.

விரிந்த பூந்துணரில் விதைகள் உருவாகும். விதைகள் முற்றிவரும் போது பூந்துணரின் மேற்பகுதி வெடித்துக் கறுப்பு நிறம் தெரிய ஆரம்பிக்கும். பூந்துணரில் 20 வீதமானவை கறுப்பு நிறமாகத் தெரிய ஆரம்பிக்கும் பருவத்தில் பூந்துணரில் இருந்து 10 ச.மீ கீழே பூக்காம்புடன் வெட்டி எடுக்கவும். வெட்டிய பூக்கினை 2 அல்லது 3 நாள்கள் உலர விடவும். காய்ந்த பூக்களை கையால் கசக்கி விதைகளை வேறாக்கவும். வேறாக்கிய விதைகளைப் பிடைத்துச் சுத்தப்படுத்தி மீண்டும் குறைவான வெயிலில் உலர்த்தி விதைகளைப் பொலித்தீன் பையில் இட்டு களஞ்சியப்படுத் தவும். குளிர்சாதன வசதி இருக்குமாயின் 5 ஆண்டு களுக்கு மேலாக முளைதிறன் இழக்காமல் விதை களைக் களஞ்சியப்படுத்தலாம். குளிர்சாதன வசதி இல்லாதுவிடின் அறுவடை செய்த விதைகளை 6 மாத காலங்களுக்குள் நடுகை செய்யவேண்டும். தேவைப் படின் அறுவடை விதைகளை உடனடியாகவே நடுகை செய்யவும் முடியும்.


1500 குமிழ்களை 50 ச.மீ நிலப்பரப்பில் நடுகை செய்தால் ¼ ஏக்கருக்குத் தேவையான உண்மை விதைகளை உற்பத்தி செய்ய முடியும். அயன் மகரந்தச் சேர்க்கைக்கு ஏதுவான சூழலைத் தேனீப்பெட்டிகள் வைப்பதன் மூலம் விதை உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளமுடியும். தென்பகுதி விவசாயிகள் பெரிய வெங்காய விதை உற்பத்தியில் விதை உற்பத்திக்குத் தெரிவு செய்யும் தாய்க்குமிழ்களைச் சிறிதுகாலம் குளிர்ந்த பிரதேசத்தில் களஞ்சியப்படுத்திய பின்னர் இவற்றை நடுகை செய்து அதிக விதைகளை உற்பத்தி செய்கிறார்கள். விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி 2010 இல் உண்மை விதைகள் மூலம் விளக்க உரையினை அனேக விவசாயிகள் மிக்க ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளே உங்கள் தோட்டத்தில் பூக்கள் சிலவற்றை முறித்துவிடாமல் தொடர்ந்தும் வளரவிட்டு மேற்குறிப்பிட்டவாறு செய்கைகளை மேற்கொண்டு பரீட்சார்த்தமாகச் செய்து பாருங்கள். இந்தியாலிருந்து பெரிய வெங்காய விதைகள் போல வேதாள வெங்காய விதைகளும் தருவிக்கப்பட்டுச் சில தனியார் விவசாய இரசாயன விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இனிவருங்காலங்களில் பயிரியல் நடவடிக்கைகளில் புதிய நுட்பங்களை உட்புகுத்தி கால நிலை மாற்றங்களை எதிர்கொள்ளத் தயாராகுவோம்.

(முற்றும்)

**பொ.அற்புதச்சந்திரன்**
விவசாயப் போதனாசிரியர்,
விவசாய ஆராய்ச்சி நிலையம்,
திருநெல்வேலி.




# காளானின் முக்கியத்துவம்

தற்கால அவசரமான உலகில் மக்கள் தமது உணவுப் பழக்கவழக்கத்தில் சிறந்த கவனத்தை எடுத்துக் கொள்வதில்லை. இதன் காரணமாகப் பல்வேறுபட்ட நோய்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

தற்போது இதய நோய்களுக்கு அதிகமாக முகம் கொடுக்கின்றனர். இதற்குக் காரணம் மக்கள் அதிகளவில் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்கின்ற கொலஸ்ரோல் எனப்படும் ஒரு வகைக் கொழுப்பாகும். இந்த வகையான கொலஸ்ரோல் அதிகம் காணப்படுவது மாமிச உணவு வகைகளில். இந்த மாமிச உணவுகளுக்கு மாற்றாக 'காளான்' உணவை தமது உணவில் சேர்த்துக் கொண்டால் இதயம் சம்பந்தமான நோய்களின் பாதிப்பைக் குறைக்கலாம்.

காளான் என்பது ஒருவகையான பங்கசு ஆகும். இதனை உணவுக்காகவும் மருத்துவத் தேவைக்காகவும் பயன்படுத்தலாம்.

இலங்கையில் 3 வகையான காளான்கள் வளர்க்கப் படுகின்றன

1.Straw Mushroom (வைக்கோல் காளான்)
2.Oyster Mushroom (சிப்பிக் காளான்)
3.Button Mushroom (பட்டன் காளான்)

இதில் வைக்கோல் காளான் மற்றும் சிப்பிக்காளான் இரண்டும் உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

**100 கிராம் காளானில் உள்ளடங்கிருப்பவை**

நீர்- 91.0 g, சக்தி-13Kcal, புரதம் -2.5 g, கொழுப்பு- 0.3g, கல்சியம்- 20 mg, இரும்பு- 1mg, தயமின்- 120 mg, ரைபோபிளேவின்- 500mg, நியாசின் (NIACIN) -5.8 mg, விற்றமின் C -3mg.

மாமிச உணவுடன் ஒப்பிடும் போது உண்ணக் கூடிய காளானில் அடங்கியிருக்கும் கொழுப்பின் அளவு குறைவாகும். எனவே இதய நோய்கள் உண்டாகும் சந்தர்ப்பம் மிகவும் குறைக்கப்படுகின்றது.

அத்துடன் மாமிச உணவுடன் ஒப்பிடுகையில் விலையும் குறைவாகும். எனவே வாரத்துக்கு ஒருமுறை காளானை உணவுடன் சேர்ப்பது உடலுக்கு மிகவும் நன்மை பயக்கும்.

எமது சூழலிலும் உண்ணக்கூடிய காளான் காணபடுகின்றன. எப்படி இவற்றை கண்டறிவது?

*தீய காளான்கள் வெறுக்கக்கூடிய மணத்தைக் காண்பிக்கும்.

*வெங்காயத்துடன் வைக்கும் போது ஊதா நிறத்தைத் தோற்றுவிக்கும்.

*சில்வர் கரண்டியுடன் வைத்து அவிக்கும் போது கறுப்பு நிறத்தைக் காண்பிக்கும்

*தீய காளானை நோக்கிப் பூச்சிகள் செல்லாது.

இப்படியான இயல்பைக் கொண்டு நாம் தீய காளானைக் கண்டுபிடிக்கலாம். எனவே எமது சூழலிலேயே காணப்படும் உண்வுக்கும் உகந்த காளானைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினால் நாம் நோய்களை இவற்றி கொள்ளலாம்.

**உ.அர்ச்சனா,**
விவசாய பீட மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைமிகு கலை வளர்க்கும் திருமறைக் கலாமன்றம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியில் திருமறைக்கலா மன்றம் கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமையால் தென் பகுதியில் "றங்க கலா கேந்தி ரய" என அழைக்கப்படுகின்றது. இதன் கலைச் சேவையுடன் இணைந்த பன்முகப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகச் சமூகசேவை அமைச்சினால் 2002 ஆம் ஆண்டு 'அரச சார்பற்ற' நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு L-46304 என்னும் பதிவு இலக்கமும் வழங்கப்பட்டது. அனைத்து இனத்தவரையும் மதத்தவரையும் நாட்டினரையும் உள்ளடக்கி 'கலைவழி இறைபணி' என்னும் மகுடவாக்கைத் தாங்கி மானுட உயர்வுக்கும்,மேம்பாட்டுக்கும் உழைக்கும் ஒரு நிறுவனமாகக் கருதப்படுகிறது.

கலையின் பல்வேறு அம்சங்களிலும் கலைஞர்களை எதிர்காலச் சிற்பிகளாக உருவாக்கும் நோக்கோடு கலைசார் பயிற்சி நெறிகளையும் நடத்திவருகிறது. 1989 ஆம் ஆண்டு நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்த பயிற்சிப் பட்டறையை நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து ஆரம்பித்தது. 1990 ஆம் ஆண்டு யாழ். மறைக்கல்வி ஒரு நிலைய கட்டடத்தில் 'கவின் கலைகள் பயிலகம்' திறந்து வைக்கப்பட்டது. ஓவியம், வயலின், வீணை, மிருதங்கம், ஓர்கன், வாய்ப்பாட்டு,நடனம் ஆகிய பாடத்துறைகளில் வகுப்பக்கள் நடத்தப்பட்டன.

மாணவர் தொகை 250 ஐத் தாண்டியது. எனவே இடப்பற்றாக்குறை தோன்றப் பாடசாலைக் கட்டமைப்புடன் பல இடங்களிலும் இடம்பெற்ற பயிற்சி வகுப்புக்களை ஒன்றிணைத்து தற்போதைய சிறைச்சாலைக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வில் அனைத்துச் செயற்பாடுகளும் முடங்கிப்போனது. இந்தக் காலப் பகுதியில் மன்றம் மிருசுவிலில் செயற்பட்டு திருப்பாடுகள் நாடகத்தை மிருசுவிலிலும், பருத்தித்துறையிலும் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் யாழ். வந்து பகுதி பகுதியாகப் பல இடங்களிலும் கவின் கலைகள் பயிலகம் இயங்கத் தொடங்கியது. இந்தக் கலைப்பயிற்சி நிலையத்தை ஸ்திரத்தன்மையோடு கட்டி எழுப்ப வேண்டும் என்ற கலைத்தூது மரிய சேவியர் அடிகளின் முயற்சியின் பயனாக ஜேர்மன் 'நீடர் புரோணர்' சபையின் உதவியுடனும் நண்பர்களின் உதவியுடனும் யாழ். டேவிற் வீதியில் சொந்தக் கட்டடத்தில் 'கலைக்கோட்டம்' என்னும் பெயரில் 2006 ஆம் ஆண்டு கலைத்தூது அழகியல் கல்லூரி அமைக்கப்பட்டது.

இந்தக் கல்லூரியின் அதிபராக ஓய்வுபெற்ற அதிபரும் சிறந்த கல்வி நிர்வாகியுமான திருமதி.எவ்.சின்னத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து பரத நாட்டியப் பட்டப்படிப்புக் கற்கைநெறிகளும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

மன்றமானது ஈழத்தின் நாடக மரபுகளை வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்குடன் பல கலைப் பயணங்களை மேற்கொண்டது. 'வடலிக் கூத்தர்' என்ற கலைக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று 1997 ஆம் ஆண்டு ஜேர்மனி, பிரான்ஸ், கொலண்ட், சுவிஸ், ஆகிய நாடுகளில் ஜெனோவா, சத்திய வேள்வி, அமைதி (ஊமம்) போன்ற நாடகங்களை மேடையேற்றினர்.

1998 ஆம் ஆண்டு சகுந்தலை, சோழன் மகன், ஜீவப்பிரயத்தனம் என்பனவும் வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களினதும் பிறமொழிக் கலைஞர்களினதும் பாராட்டுகளைப் பெற்றன. மேலும் அவுஸ்திரேலியா கலைப் பயணம் (2000), சமாதான கலைப் பயணம் 2001 சுவிஸ், 2002 சலோம், 2003 அமெரிக்கா, கனடா, லண்டன் ஐ.நா. கூட்டத் தொடரில் கலை நிகழ்ச்சி (2002) றங்க கலா நாட்டார் நடனக் குழு (2004 போலண்ட், 2005தாய்வான்) போன்ற கலைப்பயணங்கள் சமாதானத்தையும் கலைப் பரிமாற்றங்களையும் வலுப்பெறச் செய்தன.


எஸ்.யேசுதாஸ்

சிறுவர் கலைக்கூடச் செயற்பாடுகள், இளையோருக்கான கலைப் பயிற்சிப் பட்டறைகள் குடாநாட்டில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. குப்பிளான், சில்லாலை, இளவாலை, மாதகல்,பருத்தித்துறை, கரவெட்டி, தீவகம் ஆகிய பகுதிகளிலும் கிராமிய மட்டங்களில் நடைபெறுகின்றன.

கூத்துருவ நாடகங்களான கொல்ஈனுங்கொற்றம், அற்றைத் திங்கள், ஆங்கில நாடகமான ஒதெல்லோ,வரலாற்று நவீனமான ஸ்பாட்டக்கஸ் ரசிகர்களின் வரவேற்பைப்பெற்ற படைப்புக்களில் சிலவாகும்.

தென்னிலங்கைக் கலைஞர்களை இணைத்துப் பல்வேறு நாடக முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திரா, சோமலதா சுபசிங்க, ஜெரோம் டி சில்வா போன்ற நாடகவியலாளர்களுடன் இணைந்து மனமே, சிங்கபாகு ஆகிய நாடகங்களை யாழ்ப்பாணத்தில் மேடையேற்றியதுடன் பல அரங்கப்பட்டறைகளையும் மேற்கொண்டுவந்துள்ளது. இங்கிருந்து தென்பகுதிக்கு பல நாடகப் படைப்புக்களைக் கொண்டு சென்றது. அதுமட்டுமன்றி ஜேர்மனிய 'ஹல்ஸ் பேக்' குழுவினரை இங்கு அழைத்து 'BLACK THEATRE' எனப்படும் புதிய அரங்கமுறையை அறிமுகம் செய்தது. 2003 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் உரிமை மாநாட்டில் 'INCRADIL OF THE WAR' என்னும் மௌன நாடகத்தினை மேடை யேற்றியது. இவையனைத்தும் திருமறைக் கலாமன்றத்தின் பன்மொழிக் கலை இணைப்பு அரங்கப் பரிவர்த் தனையைச் சுட்டி நிற்கிறது.

இத்தனை வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் கலைச் சேவைக்கும் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் மன்றத்தில் அங்கம் வகிக்கும் 200இற்கும் மேற்பட்ட பல்துறைசார் கலைஞர்கள் என்றால் மிகையில்லை. ஊதியமற்ற அர்ப் பணிப்புடன் கூடிய கலைச் சேவையில் கட்டுப்கோப்புடன் இயங்கும் தன்மைதான் 45 வருடகாலம் நின்று நிலைத்து உலகெங்கும் எமது வாசனையைப் பரப்ப அடிகோலியது. தமிழ்க் கலை உலகுக்குப் பெருமை சேர்த்துவரும் திருமறைக்கலாமன்றம் இன்னும் பல கலைத் தேடல்களை வெளிப்படுத்திச் சாதனை படைக்கும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)

# சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கு அத்திபாரமிடும் பாலர் கல்விக் கழகம்

நிஷா

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒவ்வொரு குழந்தையும் தன்னுள் பல்வேறு ஆற்றல்களையும் தெய்வீகத்தன்மையையும் கொண்டுள்ளது. குழந்தைகளிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களையும், தெய்வீகத் தன்மைகளையும் சரியாக இனங்கண்டு வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தும் வகையில் பணியாற்றும் பல்வேறு கல்வித்தாபனங்களில் பாலர் கல்விக் கழகமும் ஒன்றாகும்.

அந்தவகையில் 1976 ஆம் ஆண்டு செயற்பட்டு வந்த பாலர் பாடசாலைகளின் பணிகள் இடைநிறுத்தப்படக் கூடாது என்பதற்காக இளை ஞர் கழத்தின் முயற்சியினால் "பாலர் கல்விக்கழகம்" எனும் பெயர் மாற்றத்துடன் புதிதாகப் பழைய நடைமுறைகளின்படி தமது சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தார்கள்.

இந்த ஆண்டிலே கழகத்தின் பெயர் மாற்றப்பட்டதுடன் இதன் காப்பாளராகக் கலாநிதி ஈ.பி. இராசையா முகாந்திரமும் நிர்வாக அங்கத்தவர்களாகக் கலாநிதி க.கனகராசா, த.சண்முகலிங்கம் ஆகியோர் கடமையில் இருந்தனர்.

1990 ஆம் ஆண்டு ஈ.பி. இராசையா மரணம் அடைந்த பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த க.சிவானந்தன் புதிய காப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்தக் கழகத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பிப்பதற்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்படாததால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவந்தது. இதனைக் கழகத்தினர் உணர்ந்து 1972 ஆம் ஆண்டு ஆனைப்பந்தியிலுள்ள உயர்தரக் கல்லூரியில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சிச் சான்றிதழ் பயிற்சியை நடத்த ஒழுங்கு செய்தது.

இதன்போது கற்கை நெறிகளை மேற்கொள்பவர்களுக்குப் பரீட்சைகளை நடத்தி சிறந்த தகுதியை அடைந்தவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறு இடம்பெற்ற பயிற்சியில் நூறுக்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வந்தார்கள். இவர்களுக்கான விரிவுரைகளைப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வழங்கியதால் பல்வேறு துறைசார்ந்த அறிவுகளை ஆசிரியர்கள் பெறுவதற்கு இந்தப் பயிற்சி வகுப்பு பயனுள்ளதாக அமைந்ததுடன் அந்த அறிவினைப் பெறும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்தது. இந்தப் பயிற்சி வகுப்பின் அமைப்பாளராக திருமதி.தெ.இரத்தினகோபால் கடைமையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்த சு.நடேசப்பிள்ளையின் ஒத்துழைப்புடன் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் இடம் பெற்றன.

1991 ஆம் ஆண்டு "பொம்மலாட்டப் பயிற்சி" வகுப்புகளும் இடம்பெற்றன.

இந்தவகையில் பாலர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தேவையான சிறந்த பயிற்சிகளை வழங்கி அதன்மூலம் ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்பெறுவதற்குப் பாலர் கல்விக் கழகம் பல தரப்பட்ட செயற்பாடுகளை வழங்கி வருகின்றது.

யாழ். சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வருடந்தோறும் பரீட்சை களை நடத்திச் சான்றிதழ்களும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


பாலர்களின் பேச்சுத்திறனை ஊக்குவிப்பதற்காகத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பேச்சுப் போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களிலும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சண்முகநாதன்



வேலணை வடக்கு, பள்ளம் புலத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் சீனியர் லேன், கலட்டியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஆறுமுகம் சண்முகநாதன் கடந்த 25.03.2011 வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (பிள்ளை குட்டியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நவரத்தினம்மாவின் அன்புக் கணவரும் திருமுறைச்செல்வி, திருநாதன், சிவநாதன், காலஞ்சென்றவர்களான பவானி, நந்தினி மற்றும் மாலினி, வாசுகி, காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்குமார், சிவகௌரி, சக்தி, விஜயலட்சுமி, ஸ்ரீதரன், மகேந்திரன், இராஜேந்திரன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான மரகதம், அன்னம்மா, செல்லப்பா, மயில்வாகனம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, இரத்தினாம்பிகை, பிரமநாயகம்பிள்ளை, ஏரம்பமூர்த்தி மற்றும் நாகநாதபிள்ளை, விநாயகமூர்த்தி காலஞ்சென்ற இராஜகோபால் மற்றும் பாலசுப்பிரமணியம், பேரின்பநாயகம், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் மகிந்தராஜா, பபிலா ஜெயக்குமார், அகிலா, பிரியந்தன், ஜீவிதன், பிரியந், ஜீவித், பிரியா, திவ்யா, லக்ஸ்மன், காஞ்சனா ஸ்ரீகரன், ஸ்ரீகாந்தன், கஜநிதி, ஸ்ரீபவன் சிந்துஜா, ஸ்ரீபரன் துரிசலா, பிரியதர்சினி - லவன், கஜமுகன் சங்கீதா, கஜேந்திரன், காயத்திரி கிருபாகரன், கபாலினி சசிஜனன், கஜேந்தினி, நவிதா, சயந்தினி, பிரதீப், சுவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் கோகுலநாத், டிலக்ஷன், சஜீவன், டர்ஷி, ஜதுஷன், ஜதுஷா, டர்ஷன், வாகிஷன், வானுஜன், பவித்திரன், திஷானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2011) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, 9.30 மணியளவில் அவரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

**தகவல்:**
**இ. பொன்குமார் (மருமகன்).**


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 31.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | 0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. இல. 021 222 6944.


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
31.03.1923
அம்மன் மடியில்:
12.04.2004

**அமரர் பண்டாரி வேலாயுதம்**
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி வேரற்கேணியடி)

திதி: 28.03.2011

அன்புக்கும் பண்பிற்கும் பாசத்துக்கும்
எடுத்துக்காட்டாக விளங்கிய அன்புத்தெய்வமே!
காலம் ஓடிச் சென்றாலும் எங்கள்
மனதில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
காலனோ தன் கணக்கைக்
கணப்பொழுதில் முடித்துவிட்டான்
கண்டது கனவென்று கண்திறந்து பார்க்கின்றோம்
நிலைத்துவிட்ட உங்கள் அன்பால்
நினைவிழக்க முடியாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48,27)


## மஹஜன சம்பத / மஹாஜன சம்பத / Mahajana Sampatha

2011.03.25

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2374

வெற்றி எழுத்து: T
வெற்றி எண்கள்: 3 4 9 9 2 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T 3 4 9 9 2 6 | ரூபா. 23,309,213/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 3 4 9 9 2 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 4 9 9 2 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | 9 9 2 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 133 |
| 4 பரிசுகள் | 9 2 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1373 |
| 5 பரிசுகள் | 2 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13852 |
| 6 பரிசுகள் | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 135805 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 4 9 9 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 3 4 9 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 132 |
| 9 பரிசுகள் | 3 4 9 | ரூபா. 100/= | பரிசுகள் 1378 |
| 10 பரிசுகள் | 3 4 | ரூபா. 50/= | பரிசுகள் 13639 |
| 11 பரிசுகள் | T | ரூபா. 20/= | பரிசுகள் 54310 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 12,462,250.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## சந்திரசேகரம் குமரகுரு 2ஆம் ஆண்டு — குமரகுரு கவாஸ்கர் 13ஆம் ஆண்டு

# ஆன்ம இளைப்பாற்று

தோற்றம்
05.10.1946





தோற்றம்
24.08.1981

மறைவு
28.03.2009

மறைவு
23.04.1998

**வெண்பா**
ஆண்டுதான் பல கடந்து போனதுவே
ஆனாலும் ஆறவில்லை எம் மனது- மாண்புடனே
வையத்துள் வாழ்ந்து மறைந்த எம் உறவே
பையவே பரமனடி சென்றீர்

240, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

அன்பு
மனைவி, அம்மா, கு.சூரியா.

(49,23,25)


## திருமணக்கார் வாடகைக்கு



*வெள்ளை நிறமுடைய குளிரூட்டப்பட்ட கார் வாடகைக்கு விடப்படும்.*

தொடர்பு:-0215673555, 0215673666

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.

CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

**8 STUDENTS IN A BATCH**

Ms Office, DTP, Hardware Technology, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன, பாடசாலை மாணவர்கள் தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

சான்றிதழ்கள் அனைத்தும் பரீட்சை முடிவுகளின் பின்னர் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.

DURATION 1 MONTH, RS. 1000/-
கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## CALL SERVICE

T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop), TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்களை உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்: 02 11 43 52 — சிங்கம்

1280 சிகப்பு — 25-03-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,112,550/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 250,466 | 20/- | 5,009,320/- |
| 2 இலக்கங்கள் | 22,996 | 40/- | 919,840/- |
| 1 இல. + லக்கினம் | 22,753 | 60/- | 1,365,180/- |
| 2 இல. + லக்கினம் | 2,082 | 200/- | 416,400/- |
| 3 இலக்கங்கள் | 616 | 1000/- | 616,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,112,550/- | 3,112,550/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 12,549,290/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 668 | | 732,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 299,636 | | 13,281,290/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: 04 06 10 55 — துலாம்

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 664 | 500/- | 332,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 668 | | 732,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசு பொருளாக மட்டுமே நெடுந்தீவின் போக்குவரத்து

நீண்டு பரந்த கடலும் கோரப் புயற் காற்றும் கூடவே வெயிலும், மழையும் வாட்டி வதைக்க நாளாந்த தேவைகளுக்காக கடல் தாண்ட வேண்டிய கட்டாயம் எம்மவர்க்கு. என்னதான் சிரமங்கள் இருந்தாலும் பயணம் செய்துதான் ஆகவேண்டிய நிர்ப்பந்தம். இத்தனைக்கும் மத்தியில் இடர்படும் நாமும் இலங்கைத் திருநாட்டின் வாரிசுகள் தான். ஆனால் இதை யாராவது ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. நெடுந்தீவுப் பயணிகளின் அவலங்களும் அவற்றை நிவர்த்திப்பதாகச் சில ஆறுதல்களும் அவ்வப்போது செய்திகளாகப் பத்திரிகைகளை அலங்கரிக்கும். ஆயினும் பயன் எதுவும் கிடைக்காது. நெடுந்தீவின் பயண வரலாற்றில் பல பரிமாணங்கள் உண்டு. அவை எல்லாவற்றினுள்ளும் முக்கியத்துவம் பெறுவது குமுதினியின் சேவை எனலாம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் கா.பொ.இரத்தினத்தின் அரிய கொடையில் எம்மவருக்கு ஏற்ற சேவையை அது வழங்குகின்றது. 1985ஆம் ஆண்டில் நடந்த துயரச் சம்பவத்தின் பின் 'குமுதினி' பிரசித்தம் பெற்ற பேசு பொருளாக மாறியது. பின்னர் அடிக்கடி பழுதடைவதும் சிப்பந்திகளின் சாதுரியமான முயற்சிகளினாலும், உதவி அரசாங்க அதிபர், பிரதேச சபையினர் போன்றோரின் உன்னிப்பான அவதானிப்புகளாலும் உடனடியாகவே திருத்தம் பெற்று இதன் சேவை தொடர்வதும் நாம் அறியாததல்ல. தற்போது கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் சுமார் அறுபது லட்சம் ரூபா திருத்த வேலைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். ஆயினும் சேவை நீடிக்கவில்லை. ''எண்ணெய்ச் செலவுதான் பிள்ளை வளரவில்லை'' என்பதைப் போல் திருத்த வேலைகள் நடைபெற்று தற்போது ஐந்து மாதங்களுக்கும் மேலாக கடந்த 10.03.2011 வியாழக்கிழமை வழமையான சேவை நேரங்களைப் புறந்தள்ளி ரோந்துப் பணிக்குச் செல்லும் படகுபோல் பயணிகளுக்கு எதுவித அறிவித்தலும் இன்றியும் நேரம் பொருத்தப்பாடு இன்றியும் இரண்டே இரண்டு நாள்கள் ஓடியபின் 'ஒடிந்தது சுக்கான்' என ஓரங்கட்டி நிற்கிறது. என்னே நியாயம் இது?

பொறியியலாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் மேற்பார்வை செய்ய மாதக் கணக்கில் இந்தப் படகுக்கு என்ன நடந்தது? குமுதினியின் நேர மாற்றம் எவரது பரிசீலனையில் உருவானது? நெடுந்தீவின் நிர்வாக அதிகாரிகளூடாக உதயமானதா? அது எப்படி நிகழ்ந்ததோ எமக்குச் சீரான சேவையை வழங்கத்தக்க வகையில், உரிய நேரத்தில் சென்று திரும்பக்கூடிய முறையில் பிரயாண வசதி செய்யப்படுதல் இன்றியமையாதது.

குமுதினியின் போக்குவரத்து இனிமேல் தொடர வாய்ப்பிருப்பின் அதற்கு இணையாக இ.போ.ச. பஸ்சேவைகளும் ஒழுங்குபடுத்தப்படுமா? காலையில் நெடுந்தீவிலிருந்து ஆரம்பிக்கப் படாத சேவையால் அன்றாடப் பயணிகள் எவரும் மகிந்த சிந்தனையை அனுபவிக்கவே முடியாது. மாறாக சுற்றுலாப் பயணிகளும், தரை வழி வாகன வசதியுள்ள சில நிறுவனப் பணியாளர்களும் மட்டுமே பயன்பெற முடியும். ஏனையவர்கள் வழமை போலவே வெயிலும், மழையும், காற்றும், அலையும் தரும் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு பயணத்தைத் தொடர வேண்டியதுதான்.

நெடுந்தீவின் துறைமுகப் பகுதி வழங்குறைந்து வருவதால் குமுதினிப் படகே தரை தட்டும் சூழ்நிலை ஏற்பட்ட பின்னரே வடதாரகை II நெடுந்தீவின் கடற் போக்குவரத்திற்காகப் புதிதாகக் கட்டப்பட்டு ஒருநாள்கூடச் சேவையாற்றாது கடலில் நங்கூரப்பட்டு நடனமாடியபடி நிற்கின்றது. இதுவும் பொறியியலாளர்களின் புனிதமான ஆழமான மதிநுட்பத்திற்குச் சாட்சியாகவே அமைகிறது. பத்திரிகைகளிலும் இணையத் தளங்களிலும் மட்டுமே இன்று அதன் சேவை பதிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேசத்திலும் தேசிய ரீதியிலும் சமூக, பொருளாதார நிலைமைகள் வியத்தகு வகையில் முன்னேற்றமடைந்து செல்லும்போது ஒருநாள் கடல் கடக்க எம்மவர் படும் துயரங்களும் இடர்களும் இன்னும் இன்னும் நீண்டு கொண்டே செல்கின்றது.

தயவுசெய்து உரிய அதிகாரிகள் கலந்துரையாடல்களை விரைந்து நடத்தி துரிதமான பயனை எமக்குப் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இதன்மூலம் ஆபத்தான சிறிய மீன் பிடிப் படகுகளையும் அதிகூடிய கட்டணங்களைச் செலுத்தி வாடகைக்கு அமர்த்தும் படகுகளையும் பயன்படுத்தும் அவலத்தை நீக்க முடியும் எனவும் நம்புகின்றோம்.

**கோ. பத்மநாதன்,**
**நெடுந்தீவு**

## கண்ணகி கதை படிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 28

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினால் தென்மராட்சிப் பிரதேச ஆலயங்கள் தோறும் ''கண்ணகி கதை படிப்பு'' ஒவ்வொரு பங்குனித் திங்கள் தோறும் கண்ணகி அம்மன் ஆலயங்களில் இடம் பெற்று வருகின்றன.

முதலாம் திங்கள் நுணாவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. இன்று சோலையம்மன் கண்ணகி அம்மன் ஆலயத்திலும், மூன்றாம் திங்கள் கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் நான்காம் திங்கள் சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலயத்திலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும் என்று சங்கச் செயலாளர் சி.குலசிங்கம் அறிவித்துள்ளார். (ம-313)

## தேசிய நாடக விழாவுக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தேசிய நாடக விழாவுக்கு சிறுவர் நாடகம் , தேசிய நாடகம், குறுநாடகம் ஆகியவற்றுக்கான படைப்பாக்கங்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்கள் அடங்கிய சட்டக் கோவையை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பார்வையிட முடியும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாதன் அறிவித்துள்ளார்.

(எ-313)

## அடையாளம் காட்டி சைக்கிளைப் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 28

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் மல்லாகம் நீதி மன்றத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள 9 சைக்கிள்களதும் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைக் காட்டித் தங்களது சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

S 7173963, L 101604, 23939027, L675791, S7193086, S7211392, 97201691, 67124115, 2475898 ஆகிய இலக்கங்களை உடைய சைக்கிள்களே உள்ளன என்று கூறப்பட்டது. (ம-313)

**வேலையாள்கள் தேவை**
வடமராட்சியில் கணினி நிறுவனம் ஒன்றுக்குக் கணினி ஆய்வுகூட உதவியாளர்கள் தேவை.
MS Office, DTP தெரிந்திருப்பது அவசியம்
தொடர்பு: 078 3035181

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக் கப்பயில முழுக்கட்டணம் 5000/= வாரம் 5 வகுப்புக்கள். By விக்னேஸ்வரன் ஆச்சாரி.
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.077-6751649

**தொழில் பயிலுநர்கள் தேவை**
எமது மன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழில்நுட்பத் துறையில் பயிலுநர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 05.04.2011 இற்கு முன்னர் தங்களது சுயவிவரங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(39-21-23)
தலைவர்
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்,
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணில்: 30.11.1918
விண்ணில்: 26.02.2011



**செல்லையா இராசா**
(முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம் )

கடந்த 26.02.2011 சனிக்கிழமை கனடாவில் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு கனடாவிலும் இன்று (28.03.2011) வல்வெட்டியில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருந்த வளவு,
இந்து பாடசாலை வீதி,
வல்வெட்டி.
(48,27)

பிரிவின் நினைவில்:
குடும்பத்தினர்

ரூபா - 60 இல் இருந்து
கண்ணாடிக் குவளைகள் குறைந்த செலவில்

டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிபட்டி பிளாசா
2439422

**GERMAN SWISS மொழிகள்**
GERMAN SWISS மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் கற்பிக்கப்படுகின்றன.
GERMAN INSTITUTE
No.10, PALALY ROAD, JAFFNA. T.P: 0771604823.

**வீடு வாடகைக்கு**
யாழ். வீதி, மானிப்பாய் பிரதேச சபைக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (நேரவங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0773789512.

**காணி விற்பனைக்கு**
ஸ்ரான்லி வீதி, புதிய அத்தியடி வீதிச் சந்தியில் ஆயுள்வேதக் கல்லூரிக்கு வடக்குப் பக்கமாக இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112591720

**நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)**
**கிளை முகாமையாளர் / விற்பனையாளர்**
**தற்காலிக பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் சேவை மனப்பாங்குடன் முழுநேரமாக உழைக்கும் விருப்பமும் ஆர்வமும் உடைய 18-45 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**கிளை முகாமையாளர் (தற்காலிகம்)**
01. வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு சகல படிகளும் உட்பட ரூபா 300/= வழங்கப்படும்.
02. வேலைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணையைச் செலுத்த வேண்டும். இதற்கு வட்டி வழங்கப்படும்.

**தகைமை:**
*கூட்டுறவுப் பணியாளர் [சாதாரண தரம்] சான்றிதழ் அல்லது க.பொ.த. [சாதாரண தரம்] கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

**விற்பனையாளர் (தற்காலிகம்)**
01. வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு சகல படிகளும் உட்பட ரூபா 280/= வழங்கப்படும்.
02. வேலைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் ரொக்கப் பிணையைச் செலுத்த வேண்டும். இதற்கு வட்டி வழங்கப்படும்.

**தகைமை:**
*அ] கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்*
**அல்லது**
*ஆ] 08ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.*

*மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எமது சங்கக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி 11.04.2011ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் எழுதப்பட்டு ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும். முடிவுத் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும், தகுதியற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.*

பொது முகாமையாளர்,
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி.
[39-21-23] [577007]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டுனீஷியா தலைநகர் டுனிஷில், பிரதமர் பீஜி காய்ட் எசாப்சியை(வலது), இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் பிரான்கோ பிராட்டினி சந்தித்துப் பேசுகிறார்.

# ஜப்பானில் அணு உலை வெடித்ததால் கதிர்வீச்சு 10 மடங்கு அதிகரிப்பு

டோக்கியோ. மார்ச் 28

ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி சக்திவாய்ந்த பூகம்பமும், அதைத் தொடர்ந்து ஆழிப்பேரலையும் ஏற்பட்டது. இதில் வீடுகளும், கட்டடங்களும் இடிந்து தரைமட்டமாயின.

இச்சம்பவத்தில் 27 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர். பலரை இதுவரை காணவில்லை. இந்தப் பேரழிவு சம்பவத்தில் புகுஷிமாவிலுள்ள தாய்சி அணு மின் நிலையத்தில் 3 அணு உலைகள் வெடித்துச் சிதறின.

இதனால் அதிலிருந்து அணு கதிர்வீச்சு வெளியேறியது. இந்த கதிர்வீச்சினால் அப்பகுதியில் உற்பத்தியாகும் அரிசி, பால், காய்கறிகள், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியன தாக்கப்பட்டன.

எனவே, அவற்றை பொது மக்கள் சாப்பிட அனுமதிக்கப் படவில்லை. குடிதண்ணீரிலும் கதிர்வீச்சு தாக்கம் அதிகம் இருந்ததால் குடிக்க தண்ணீர் இன்றி பொது மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மீண்டும் வெடித்த 3ஆவது அணு உலையை குளிர்விக்கும் பணியில் ஈடுபட்ட 3 ஊழியர்களை கதிர்வீச்சு தாக்கியது. இதைத் தொடர்ந்து கதிர் வீசின் தாக் கம் குறித்து பரிசோதனை செய்யப்பட்டது.

கடந்த 5 நாள்களில் ஜப்பானில் கதிர்வீச்சு பாதிப்பு 10 மடங்கு அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. அங்குள்ள உணவுப் பொருள்களில் அதன் தாக்கம் உள்ளது. அதேநேரத்தில் புகுஷிமா அணுஉலை உள்ள கடல் நீரில் வழக்கத்தை விட 1,250 மடங்கு கதிர்வீச்சு அதிகமாக உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே, அதில் வாழும் மீன் களையும், கடல் வாழ் உயிரினங்களையும் சாப்பிடக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டுளது. இதுபோன்ற காரணத் தால் ஜப்பானிலிருந்து உலக நாடுகளுக்கு மீன், கடல் உணவுப் பொருள்கள் ஆகிய வற்றின் ஏற்றுமதி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வெடித்து சிதறிய புகுஷிமா அணுஉலையை குளிர்ந்த நீரை கொண்டு குளிர்விக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதில் 700இற்கும் மேற்பட்ட பொறியியலாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா ஜப்பானுக்கு உதவி வருகிறது. அணுஉலையை குளிர்விக்க சுத்தமான நீருடன் கூடிய கப்பற்படைப் படகுகளை அனுப்பி வைத்துள்ளது. அணுஉலையை குளிர்விக்கும்பணியில் அமெரிக்கா தனது நிபுணர்களையும் அனுப்பியுள்ளது.

# வெனிசுலாவில் 200 பேர் பறவைக்காய்ச்சலில் பாதிப்பு

வெனிசுலாவில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 200ஐத் தாண்டியுள்ளது என்று அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் யூஜினியா சதர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பறவைக் காய்ச்சல் அறிகுறியுடன் வந்த 23 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து நாடு முழுவதும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 202ஆக அதிகரித்துள்ளது. இரண்டு பேர் இறந்துள்ளனர் என்று கடந்த வாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. தென்மேற்கு மாநிலமான மெரிடாவில் 82 பேரும், கராகஸ் பகுதியில் 49 பேரும் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது என்றார்.

# அண்ணன், தங்கையை இணைத்தது இணையத்தளம்

லண்டன், மார்ச் 28

பிரிட்டனில் இணையதள 'சாட்டிங்' மூலம் 35 ஆண்டுகளுக்குப்பின் அண்ணனும், தங்கையும் மீண்டும் இணைந்தனர்.

கிழக்கு லண்டன் பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் (வயது-47) என்பவர் பொழுது போக்காக இணையதளத்தில் சாட்டிங்கில் ஈடுபட்டிருந்தார். அப்போது சாரா கேம்ப் (வயது - 42) என்ற பெண்ணுடன் நட்பு ஏற்பட்டது. பல்வேறு விடயங்களைப் பேசியபின் தங்கள் சிறுவயது குடும்பத்துடன் பொழுதைப் போக்கிய அனுபவங்களை இருவரும் பகிர்ந்துகொண்டனர். அப்போது இருவரும் ஒரே மாதிரியான சம்பவங்களைக் கூறினர். அப்போதுதான் சாரா சிறு வயதில் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற தங்கை என்பது ஜோர்ஜுக்குத் தெரியவந்தது.

சாரா தனது பெயரை மாற்றிக் கொண்டதால் அவரை முதலிலேயே ஜோர்ஜால் அடையாளம் காண முடியவில்லை. 1975 ஆம் ஆண்டு இவர்களது பெற்றோர் கருத்துவேறுபாடு காரணமாகப் பிரிந்தனர். அப்போது ஜோர்ஜுக்கு வயது - 11, சாராவின் வயது - 6. ஜோர்ஜ் தந்தையுடன் கிழக்கு லண்டனுக்குச் சென்றார்.

தாயுடன் சென்ற சாரா, திருமணமாகி எடின்பர்க் நகரில் வசித்து வந்தார். 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இணைய தளத்தின் மூலம் இவர்கள் தங்கள் உறவை மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் பிரிட்டன் பத்திரிகைகளில் வெளியாகி நாடு முழுவதும் பேசப்பட்டு வருகிறது.

## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



பேசியல், மேக்கப், மணப்பெண் அலங்காரம், சாறி டிரெசிங், ஸ்ரெயிட்னிங், பேமிங், திரெட்டிங், வக்சிங், ஸ்மூத்திங், பெடிக்கியூர், மெனிக்கியூர், ஹெயாக்கலறிங், நெயில் ஆர்ட், பிளக்ஸ் பொட்டீற்மென்ட், ஹெயார் ட்றீட்மென்ட், சாறிவேக்ஸ், கேக் ஐசிங், தையல் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். அனுமதிக்கட்டணம் (1000.00) ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்!
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்!

0213214013,
0779362642
வீரபத்திரர் கோயிலடி,
கோப்பாய்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவையில் வகுப்பு II இற்குத் தரமுயர்த்தப்பட்டுள்ள எமது வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.யோ.ரவீந்திரன்**
B.Sc. M.Ed.
(கல்வி நிர்வாகம்)

அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும்
சக உத்தியோகத்தர்களும்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(48,19,21)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
| --- | --- | --- | --- |
| 01. | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும் | 15.05.2011 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02. | காங்கேசன்துறைக் கிளையும் மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03. | யாழ்.பிரதான வீதிக்கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04. | ஊர்காவற்றுறை | | |
| 05. | நெல்லியடி | | |
| 06. | அச்சுவேலி | | |
| 07. | சங்கானைக் கிளையும் பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 08. | சுன்னாகக் கிளையும் கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 09. | சாவகச்சேரிக் கிளையும் கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 10. | வல்வெட்டித்துறை | | |
| 11 | யாழ்.பல்கலைக்கழகக்கிளையும் திருநெல்வேலி சேவை நிலையமும் கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 12 | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 13 | பருத்தித்துறைக் கிளையும் புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
2011.03.28
(48,23,24)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் விலைக்கழிவுடன் விசேட சலுகைகள்....

DHL உடன் இணைந்து
திருமுருகன் கொம் நெற்

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கான கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், உணவுப்பண்டங்கள், CD, DVD போன்றவற்றை பாதுகாப்புடன் விரைவாக குறைந்த கட்டணத்தில் அனுப்பிட DHL

20.03.2011 தொடக்கம் 20.04.2011 வரை அனுப்பும் ஒவ்வொரு பொதியின் பற்றுச்சீட்டு இலக்கங்களும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் மூன்று அதிஸ்டசாலிக்கு பின்வரும் பரிசுகள் வழங்கப்படும்.....

முதலாம் பரிசு – துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு – 5.1 woofer
3 ஆம் பரிசு – கையடக்கத் தொலைபேசி

நீங்களும் DHL இணைந்து அதிஸ்டசாலியாகுங்கள்

WESTERN UNION
MMBL Money Master
வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்பான, விரைவான நம்பிக்கையான சேவை
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

திருமுருகன் கொம் நெற்
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதானவீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் உள்ள பொதுமக்களைப் பாதுகாப்பதே நேட்டோ படைகளின் முக்கிய நோக்கம்

## ஒபாமா விளக்கம்

வோஷிங்டன், மார்ச் 28

லிபியாவில் பன்னாட்டுப் படைகளின் செயற்பாடுகள் உடனுக்குடன் ஜனாதிபதி உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படும். நேட்டோ படைகளின் முக்கிய நோக்கம் லிபியாவில் உள்ள பொதுமக்கள் பாது காக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபியைக் கொல்லும் திட்டம் ஏதும் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் லிபியா மீது தாக்குதல் தொடுப்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அளித்த விளக்கத்தில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார் என்று 'வோஷிங்டன் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையால் பாதுகாப்புச் சபை விதி 1973இன்படி அங்கு விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வெள்ளை மாளிகையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை ஜனாதிபதியிடம் கேட்டுத் துளைத்தனர். அவை அனைத்திற்கும் ஒபாமா பதிலளித்தார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

மும்மர் கடாபியைக் கொல்லும் திட்டம் ஏதும் அமெரிக்க அரசுக்குக் கிடையாது. வட ஆபிரிக்க நாடான அங்கு ஆட்சி மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது.

- இப்படி நாடாளுமன்ற முன்னாள் தலைவர் நான்சி பெலோசி கூறியுள்ளார் என்று 'பொலிடிகோ' செய்தி வெளியிட்டுள்ளது.

பன்னாட்டுப் படைகளின் தலைவர் ஜெனரல் கார்டர் ஹாம் உரிய நேரத்தில் தலையிட்டு தாக்குதல் நடத்தினார். இதனால் பொதுமக்களின் உயிர் பெருமளவு காக்கப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

லிபியா முழுவதும் பன்னாட்டுப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் எத்தகைய நடவடிக்கையை அடுத்த கட்டமாக எடுப்பது என்பது குறித்து அடுத்த வாரம் கூடி முடிவு செய்யலாம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

லிபியா மீதான கூட்டுப் படைகளின் தாக்குதல் அமெரிக்கா அவசர கதியில் எடுத்த முடிவு என்று பரவலான விமர்சனம் எழுந்தது. இதைத் தடுக்கும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி ஜனாதிபதி விளக்கம் அளித்தார் எனவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கூட்டத்தில் 20 முன்னணி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

லிபியாவில் தாக்குதல் நடத்த முடிவு செய்தமை குறித்து நாட்டு மக்களுக்கு ஒபாமா விளக்கம் அளிக்கவுள்ளார். அவர் இன்று திங்கட்கிழமை இது தொடர்பாக விரிவான உரை நிகழ்த்தவுள்ளார். லிபியா மீதான தாக்குதல் நடவடிக்கையை குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சனம் செய்துவருகின்றனர். இந்நிலையில் நாட்டு மக்களுக்கு ஒபாமா விளக்கமளிக்க முடிவு செய்துள்ளார். தேசிய இராணுவ பல்கலைக்கழகத்தில் ஒபாமா தனது விளக்க உரையை நிகழ்த்தவுள்ளார்.

லிபியாவில் கடாபியின் சர்வாதிகார செயல்களையும் அவர் நாட்டு மக்களிடம் விளக்குவார். லிபிய விவகாரம் குறித்து முதல் முறையாக ஒபாமா, நாட்டு மக்களிடம் உரை நிகழ்த்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிநவீன சிகிச்சை மூலம் கடாபியை இளமை ஆக்கிய பிறேசில் வைத்திய நிபுணர்

சாவ்பாலோ, மார்ச் 28

லிபிய ஜனாதிபதி கடாபி மக்கள் வெறுக்கப்பட்டு தற்போது பதவி விலகும்படி வலியுறுத்தப்பட்டுள்ளார். 68 வயதான இவர் கடந்த 42 ஆண்டுகளாக லிபியாவில் ஆட்சி நடத்தி வருகிறார்.

முதுமை நிலையை அடைந்துள்ள இவர் கடந்த 1994ஆம் ஆண்டு அதாவது தனது 53ஆவது வயதில் தன்னை இளமை ஆக்கிக் கொள்ள அதிநவீன சத்திர சிகிச்சை செய்துகொண்டார்.

அப்போது அவரது உடல் குண்டாக இருந்தது. முகம், கழுத்து ஆகிய பகுதிகளில் சுருக்கங்கள் காணப்பட்டன. எனவே, இளைய தலைமுறையினர் தன்னை வயதானவர் எனக் கூறி வெறுத்து விடக்கூடாது. எப்போதும் தான் இளமையாக காட்சி அளித்து மக்கள் மத்தியில் கவர்ச்சி கதாநாயகனாக வலம் வரவேண்டும் என விரும்பினார்.

அதற்காக அதிநவீன சிகிச்சை செய்துகொண்டார். அவருக்கு இந்த அறுவை சிகிச்சையை பிரேஸிலை சேர்ந்த பிளாஸ்டிக் சர்ஜரி டாக்டர் லியாசிர் ரிபைரோ மேற்கொண்டார். இது மிகவும் இரகசியமாக நடைபெற்றது.

இதன் மூலம் அவர் சுமார் 10 வயது குறைவான தோற்றத்துடன் காட்சி அளித்தார். அப்போது அவரது வயது 53. இந்தத் தகவலை அவருக்கு அதிநவீன ஒபரேஷன் செய்த பிரேஸில் டாக்டர் லியாசிர் ரிபைரோ தெரிவித்துள்ளார்.

இந்த சிகிச்சை மூலம் சுமார் 5 ஆண்டுகள் வரைதான் இளமை தோற்றம் இருக்கும். அதன் பின்னர் மீண்டும் முக சுருக்கம் ஏற்படும் என்றேன். அப்போது தேவைப்பட்டால் என்னை மீண்டும் அழைக்கிறேன் என்றார். அதன் பின்னர் அவர் என்னை அழைக்கவில்லை என்றும் டாக்டர் ரிபைரோ தெரிவித்தார்.

இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லஸ் கோனியையும் இதே போன்று இவர் பிளாஸ்டிக் சர்ஜரி, முடிமாற்று ஒபரேஷன் செய்து இளமை தோற்றமுள்ளவராக ஆக்கியுள்ளார்.



வியட்நாம் தலைநகர் ஹனோயில், ஜனாதிபதி நக்யன் மின் டிரியட்ட (இடது), உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை வரவேற்கிறார்.

# கதிர்வீச்சை தடுக்கும் கடும் முயற்சியில் ஜப்பானில் 700 பொறியியலாளர்கள்

## இரவு பகலாக போராடி வருகின்றனர்

சென்டாய், மார்ச் 28

ஜப்பானில் பூகம்பம் காரணமாக, அணுமின் நிலையத்திலிருந்து வெளியேறும் கதிர்வீச்சை தடுக்கும் முயற்சியில், 700 பொறியியலாளர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர்.

கதிர்வீச்சை தடுப்பதற்காக, ஏராளமான தண்ணீரை ஏற்றிக் கொண்டு, அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்றும் ஜப்பானுக்கு விரைந்துள்ளது.

ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம், ஆழிப் பேரலை ஆகியவை காரணமாக புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்த அணு உலைகளில் வெடிப்பு ஏற்பட்டது.

அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு, ஜப்பானின் மற்ற பகுதிகளுக்கு வேகமாகப் பரவுகிறது. அங்குள்ள உணவுப் பொருள்கள், தண்ணீர் ஆகியவற்றை கூட பயன்படுத்த முடியாத நெருக்கடிக்கு ஜப்பான் மக்கள் ஆளாகியுள்ளனர்.

புகுஷிமா அணு உலையிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சின் அளவை கட்டுப்படுத்துவதற்காக, கடல் நீரை அணுஉலைகளில் பீய்ச்சி அடிக்கும் முயற்சியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் முயற்சிக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. கடல் நீரிலுள்ள உவர்ப்பு தன்மையே இதற்குக் காரணம். இதைத் தொடர்ந்து, ஏராளமான தண்ணீருடன் அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்று, ஜப்பானுக்கு விரைந்துள்ளது.

இந்தக் கப்பலிலுள்ள தண்ணீரை, அணு உலைகள் மீது பீய்ச்சி அடித்தால், ஓரளவுக்கு கதிர்வீச்சு கட்டுப்படுத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

புகுஷிமா அணுமின் நிலையத்திலுள்ள மேலும் ஓர் அணு உலை ஆபத்தான நிலையில் இருக்கிறது என்றும் அந்த உலையில் எப்போது வேண்டுமானாலும் வெடிப்பு ஏற்படலாம் என்றும் ஜப்பான் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து ஜப்பான் அமைச்சரவை தலைமை செயலர் யுகியோ எடனோ கூறியவை வருமாறு:-

''அணு உலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பால், மிகவும் மோசமான நிலை எதுவும் ஏற்படவில்லை. இருந்தாலும், இதை தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம். கதிர்வீச்சை தடுக்கும் முயற்சியில், 700இற்கும் மேற்பட்ட பொறியியலாளர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர்.

புகுஷிமாவில் மொத்தம் உள்ள ஆறு உலைகளில், இரண்டு உலைகள் பாதுகாப்பாக உள்ளன. மற்ற நான்கு அணு உலைகளின் நிலை சற்று மோசமாக உள்ளது. என்று அவர் கூறினார்.

# சிரிய புரட்சியாளர்களின் போராட்டம் தீவிரம்: துப்பாக்கிச் சூடு; 30 பேர் பலி!

டமாஸ்கஸ், மார்ச் 28

சிரிய தலைநகர் டமாஸ்கஸ்ஸில் புரட்சியாளர்கள் மீது இராணு வம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 30 பேர் பலியாயினர்.

எகிப்து, டுனிஷியா, லிபியா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து சிரியாவிலும் மக்கள் புரட்சி வெடித்துள்ளது. ஜனாதிபதி பஷார் ஆசாத்துக்கு எதிராகப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் கடந்த 8 நாள்களாக உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தலைநகர் டமாஸ்கஸ்ஸில் ஆரம்பித்த இப்போராட்டம் டாரா உள்ளிட்ட 6 நகரங் களிலும், கிராமங்களிலும் பரவியுள்ளது.

வெள்ளிக்கிழமை டமாஸ்கஸ் நகரில் போராட்டம் நடத்த புரட்சியாளர்கள் பேரணியாகத் திரண்டனர். அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி ஆசாத்தின் ஆதரவாளர்களும் அங்கு வந்தனர்.

அதனால் இரு தரப்பி னருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. எனவே மோதலை தடுக்க பொலிஸாரும், இராணுவத்தினரும் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் சுமார் 30 பேர் பலியானார்கள்.

இருந்தும் இறந்தவர்களின் சடலங்களை வைத்துக்கொண்டு புரட்சியாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி னர். இதைத் தொடர்ந்து சிரியாவில் போராட்டம் வலுவடைந்துள்ளது.

இதுவரை போராட்டத்தில் ஈடுபட்ட 100இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் 34 பேர் பலியாயினர் என அரசு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## டோர்கஸ் காஸல்

டோர்காஸ் காஸல் என்றழைக்கப்படும் இந்த மான் இனம் வட ஆபிரிக்காவிலிருந்து தென்மேற்கு ஆசியா வரையுள்ள பகுதிகளில் காணப்படுகின்றது. இந்த காஸல் மான் குட்டி முதல் சில மாதங்களுக்குத் தாயின் பாலையே உண்டு வளர்கிறது. வயது வந்ததும் மிக வேகமாக ஓடக்கூடிய சக்தியைப் பெற்றுவிடும். அது மணிக்கு 70 மைல் வேகத்தில் ஓடும்.

பாலைவனங்களில் வாழ்வதற்கான வாசேஷ திறமைகள் அவைகளுக்கு உண்டு. அவை மானினங்களில் மிகவும் சிறியவை குளம்பிலிருந்து தோள் வரை 75 செ.மீற்றரே அவையின் நீளம் பல மணி நேரம் பாலைவன வெளிகளில் கடும் வெப்பத்தில் அவைகளால் திரிந்து வாழமுடியும்.

ஆண் காஸல் மான்கள் பெரும்பாலும் தனிமையிலேயே வாழ்கின்றன. இனச் சேர்க்கைக்காக மட்டுமே அவை ஏனைய பெண்மான் கூடத்தில் சேர்ந்து கொள்கின்றன.

டோர்கஸ் காஸல் மான்கள் செடிகளையும் மரங்களிலிருந்து விழும் இலைகளையும் உண்கின்றன. உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் லோகஸ்ட்ஸ் என்றழைக்கப்படும் ஒருவகை வெட்டுக்கிளிகளை உணர்கின்றன. காஸல் மான்கள் புல்களையும் பாலைவனப் புதர்க் கொடிகளையும் தின்றொழித்துவிடுவதால் தமது வளர்ப்பு மிருகங்களுக்கு உணவு இல்லாமல் போகின்றது எனக் கருதும் மனி தர்கள் அவை களை அடிக்கடி வேட்டையாடி விடுகிறார்கள். அதனால் இம் மான் இனம் அழியும் தறுவாயிலுள்ளது. தற்போது காஸல் மான்கள் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



-ரம்யன்

## ஏழ்மையில் கொடுமை

எல்லாவற்றிலும் கொடுமையானது ஏழ்மை. அதைவிடக் கொடுமையானது இளமையில் ஏழ்மை. அதைவிடக் கொடுமையானது தாங்கிக் கொள்ள முடியாத நோய். அதைவிடக் கொடியது அன்பில்லா மனைவியைப் பெறுதலாகும். அதைவிடக் கொடியது அப்பெண் இடும் உணவை உண்ணுதல்.

இராஜ் தனபால்

## உங்களுக்குத் தெரியுமா?

* இயற்கை ஓவியம் எனப் புனையப்படுவது?
  பத்துப்பாட்டு
* இயற்கை இன்பக் கலம் எனப்படுவது?
  கலித்தொகை
* இயற்கை வாழ்வில்லம் எனப்படுவது?
  திருக்குறள்
* இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் எனப்படுபவை?
  சிலப்பதிகாரம், மணிமேகலை
* இயற்கைத்தவம் எனப்படுவது?
  சீவகசிந்தாமணி
* இயற்கைப் பரிணாமம் என அழைக்கப்படுவது?
  கம்பராமாயணம்
* இயற்கை அன்பு எனப்படுவது?
  பெரியபுராணம்
* இயற்கையின் இறையுறையும் என்பவை?
  தேவாரம், திருவாசகம், திருவாய் மொழிகள்

சா.பபிதா, தரம்-8A
யா/இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்.

## உலகம் ஓர் சத்திரம்




ஒருமுறை பீர்பால் தன் சொந்த வேலை காரணமாக அயல்நாட்டுக்குச் செல்ல நேரிட்டது. செல்லும் வழியில் அரண் மனை ஒன்று தென்பட்டது. மிகவும் அசதியாக இருந்த பீர்பால் அங்கு சிறிது நேரம் தங்கிச் செல்லலாம் என முடிவு எடுத்தார். அது அயல்நாட்டு மன்னனின் அரண்மனையாகும். அந்த விடயம் பீர்பாலுக்குத் தெரியாது. அக்பரின் ஆளுகைக் குட்பட்ட மண்ணில் இருக்கும் அரண் மனை என்றே அவர் நினைத்தார்.

அந்த அரண்மனையின் பின்புறம் சென்று குதிரையைக் கட்டிவிட்டுப் பார்த்தார். ஆள் அரவமே இல்லை. அரண் மனைக்குள் புகுந்ததும் அடுக்களை தென்பட்டது. தமக்கிருந்த பசியில் சிறிதும் யோசிக்காமல் உணவினை எடுத்து உண்டார். பின்னர் அடுத்த அறைக்குச் சென்றார். அழகான பஞ்சு மெத்தையுடன் கூடிய படுக்கையறை. உண்ட மயக்கத்தில் அந்தப் படுக்கையில் படுத்து உறங்கினார்.

வேட்டையாடச் சென்றிருந்த மன்னர் சற்று நேரத்துக்குப் பின் திரும்பி வந்து விட்டார். தன் உணவை உண்டு விட்டுத் தன்னுடைய படுக்கையில் படுத்திருப்பவனைப் பார்த்ததும் சினம்கொண்டு பீர்பாலைத் தட்டி எழுப்பினார்.

''என் அரண்மனைக்குள் புகுந்து என் உணவினை உண்டு, என் படுக்கை அறையில் படுத்திருக்கிறாயே?'' என்று அதட்டினார். "ஓஹோ... இது அரண்மனையா? காவலர் யாருமே இல்லாததால் இதனை சத்திரம் என்று நினைத்தேன்!'' என்றார் பீர்பால் அலட்டிக் கொள்ளாமல். தன்னை மன்னர் என்று அறிமுகம் செய்தும் சற்றும் அஞ்சாமல் தன்னுடைய அரண்மனையை தர்மசத்திரம் என்கிறானே இவன் எனக் கோபமுற்றார் அந்த மன்னர். "உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா? அரண்மனைக்கும் தர்ம சத்திரத்திற்கும் கூட உனக்கு வித்தியாசம் தெரியவில்லையே?!'' என்று கடிந்தார் மன்னர். ''மன்னர் அவர்களே.. இது அரண்மனையாகவே இருந்தாலும் இதனையும் தர்ம சத்திரம் என்று அழைப்பதில் தவறில்லை!'' என்றார் பீர்பால். ''ஓர் அரண்மனை எப்படி சத்திரமாக முடியும்? சத்திரம் என்றால் இன்று ஒருவர் வருவார் நாளை போய் விடுவார்... மறுநாள் வேறொருவர் வருவார்.. பிறகு சென்று விடுவார்.. இங்கேயே தங்க மாட்டார்கள். அரண்மனை அப்படி அல்ல. நான் நிரந்தரமாகத் தங்கி இருக்கிறேனே!'' என்றார் மன்னர்.

''மன்னர் அவர்களே உங்கள் பாட்டனார் எங்கே தங்கி இருந்தார்?''

''இதே அரண்மனையில்தான்!'' ''உமது தந்தையார்?'' ''இதே அரண்மனையில்தான்!''

''நாளை உங்களுக்குப் பின் யார் தங்குவார்கள்?'' ''இதென்ன கேள்வி? எனது மகன் தங்குவான்!''

"ஆக இந்த அரண்மனையில் யாருமே நிரந்தரமாகத் தங்கி இருக்கவில்லை! தங்கள் முன்னோர் சில காலம் தங்கி இருந்துவிட்டுச் சென்று விட்டனர். இப்போது நீங்கள். உங்களுக்குப் பின் உங்கள் மகன். எனவே சத்திரத்துக்கும் அரண்மனைக்கும் எந்த வேறுபாடும் இல்லை!" என்றார் பீர்பால். பீர்பால் சொல்வதில் உள்ள உண்மை மன்னருக்கு விளங்கியது. வந்திருப்பவர் சாமான்யர் இல்லை என்பது விளங்கியது அவருக்கு! ''தாங்கள் யார்?" என்று மரியாதையுடன் வினவினார் அரசர். "என்னைப் பீர்பால் என்று அழைப்பார்கள்!" என்று பதில் சொன்னார் பீர்பால். "அந்த மாமேதை நீங்கள்தானா? தங்களின் புகழை நானும் கேள்விப்பட்டு இருக் கிறேன். ஆனால் இதுவரை பார்த்தது இல்லை. நான் மிகப்பெரிய தவறு செய்து விட்டேன். வருத்தம் வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள்!" என்றார் அரசர். அந்த மன்னனின் அன்புக் கட்டளையை ஏற்று பீர்பால் மேலும் சில நாள்கள் அவரின் விருந்தினராகத் தங்கி இருந்து விட்டு பிறகு தான் செல்ல வேண்டிய இடத்துக்குப் புறப்பட்டார்! (முற்றும்)

## என் பொம்மை



பொம்மை பொம்மை பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்

தலையை ஆட்டும் பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
எனக்குக் கிடைத்த பொம்மை போல்
எதுவும் இல்லை உலகினிலே

சிவனுகா,
கொய்யாத்தோட்டம்.

## நூலகத்தை நாடி...



அறிவை மேம்படுத்த: ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் பொதுநூலக தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களினால் வழங்கப்பட்ட கலை நிகழ்வுகளின் ஒரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவின் ஆதரவு இருக்கும்வரை ராசாவுக்கு முழு ஆதரவு வழங்குவேன்

## கனிமொழி கூறுகிறார்



முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கு தி.மு.க ஆதரவளிக்கும்வரை நானும் ஆதரவளிப்பேன் என்று முதல்வர் கருணாநிதியின் மகளும் மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2ஜி விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ தாக்கல் செய்ய இருக்கும் குற்றப்பத்திரி கையில் உங்கள் பெயர் இடம்பெற்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது, எதுவாக இருந்தாலும் எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறுவேன் என்றார் கனிமொழி.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஊகத்தின் அடிப்படையானவையே.

அதைத்தான் நாம் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறோம்.

இப்போது விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது. நாம் குற்றச்சாட்டுகளை எப்படி முறியடிக்கிறோம் என்று பாருங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தால் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு பாதிப்பு ஏற்படும் என்கிற கருத்தை அவர் மறுத்தார்.

ஊகத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து தேர்தல் முடிவுகள் அமையும் என்று எனக்குத் தோன்றவில்லை. அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்கிறது என்பவைதான் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் என்றார் அவர்.

இரண்டாவது முறையாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்து, அமைச்சரவை அமைக்கப்பட்ட போது, முதல்வர் குடும்பத்தில் பூசல் ஏற்பட்டது உண்மைதான் என்று ஒப்புக் கொண்ட கனிமொழி, இது எல்லாக் குடும்பத்திலும் நடப்பது தான். அதை ஏன் பெரிது படுத்துகிறீர்கள்?' என்று கேட்டார்.

மிக்சி, கிரைண்டர் வழங்குகிறோம் என்று வாக்குறுதி அளிப்பது இலவசப் பரிசுப் பொருள்கள் அளிப்பது போன்றது தான் என்று கூறப்படும் கருத்தையும் கனிமொழி கடுமையாக ஆட்சேபித்தார்.

ராசா கைது செய்யப்பட்டது, உங்களிடம் சி.பி.ஐ விசாரணை நடத்தியது உள்ளிட்ட சம்பவங்களை முதல்வர் கருணாநிதி எப்படி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று கனிமொழியிடம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கனிமொழி:

அவர் 75 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் இருக்கிறார். இவற்றைப் போல் எத்தனையோ சம்பவங்களை அவர் பார்த்திருப்பார் என்றார். (201)

வரவேற்பு.....



அகமதாபாத் விமான நிலையம் வந்திறங்கிய பிரதமர் மன்மோகன் சிங்கை, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மற்றும் ஆளுநர் காம்லா பெனிவால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

# இந்தியா-பாக். உள்துறை செயலர்கள் இன்று பேச்சு

மும்பைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான குற்றவாளிகள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை மற்றும் முன்னேற்ற நிலைப்பாடுகள் குறித்து விவாதிக்கும் முக்கிய பேச்சு இன்று நடைபெறவுள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் இடையிலான இந்த பேச்சு எந்த அளவிலான பயனைத் தரும் என அதிகாரிகள் எதிர்பார்த்திருக்கின்றனர். இந்திய உள்துறை செயலர் ஜி.கே.,பிள்ளை, பாகிஸ்தான் உள்துறை செயலர் சவுத்திரி உமர் ஷமான் ஆகிய இருவரும் 9 மாத இடைவெளிக்கு பின்னர் சந்திக்கவுள்ளனர்.

மும்பைத் தாக்குதல் தொடர்பான பாகிஸ்தானின் லஷ்கர் இ. தொய்பா பயங்கரவரவாதிகள் மீது அந்த நாட்டில் எடுக்கப்பட்ட சட்டபூர்வ நடவடிக்கைள் குறித்து விவாதிக்கப்படும். இந்த பேச்சு பெரும் பயனுள்ளதாக இருப்பதோடு இந்தியா எதிர்பார்க்கும் விடயங்களைத் திறந்த மனதுடன் பகிர்ந்து கொள்ளும் என பாகிஸ்தான் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

இதே நேரத்தில் மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளிகளின் ஜாகீர் ரஹ்மான்லக்வி உள்ளிட்ட சிலரது குரல் மாதிரிகளை நீண்டகாலமாகக் கேட்டும் இதுவரை பயனில்லை. இந்த விவகாரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் இந்தப் பேச்சில் முக்கிய இடம் பிடிக்கும், இதனை இந்தியா மீண்டும் வலியுறுத்தும் எனவும் கூறப்படுகிறது. (201)

# இந்து தேசியவாதம் சந்தர்ப்பவாத பிரச்சினை அருண்ஜெட்லி கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

பா.ஜனதாவுக்கு மிகவும் பிடித்தமான 'இந்து தேசியவாதம்' கொள்கையை கட்சியின் 'சந்தர்ப்பவாத பிரச்சினை' என்று, அதன் முன்னணித் தலைவர் அருண் ஜெட்லி வர்ணித்ததாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

டில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட ரகசிய தகவல்களை விக்கிலீக் இணையத்தளம் அம்பலப்படுத்தி வருகிறது.

நம்பிக்கை வாக்கெடுப்பில் மத்திய அரசைக் காப்பாற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டமை உட்பட அந்த இணையத்தளத்தின் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள், மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது.

கடந்த 2005 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி டில்லியில் உள்ள அமெரிக்க தூதரக பொறுப்பு அதிகாரியான ராபர்ட் பிளேக் அருண் ஜெட்லியைச் சந்தித்துப் பேசிய பின் அமெரிக்க அரசுக்கு அனுப்பிய ரகசிய தகவலில் இதை குறிப்பிட்டு இருக்கிறார் என்று விக்கிலீஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. (201)

# 'தேர்தல்' ஊழலின் பிறப்பிடமாகி விட்டது; தலைமை ஆணையாளர் குரேஷி தகவல்

டில்லி, மார்ச் 28

தேர்தலில் பெரிய அளவில் ஊழல் நடந்து வருகிறது. ஊழலின் பிறப்பிடமாகவே தேர்தல் நாள் இருக்கிறது. எனவே தேர்தலில் பண ஆதிக்கத்தை எதிர்த்து தேர்தல் ஆணையகம் போராடி வருகிறது. அதை புதிய இயக்கமாக செயற்படுத்தி வருகிறோம்.

டில்லியில் 57 லட்சம் ரூபா பணத்துடன் பிடிபட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தான் கொண்டு சென்ற பணத்துக்கான ஆவணங்களைக் கொடுத்துள்ளார்.

எனினும் தேர்தல் நடக்கும் மாநிலத்துக்கு பணத்தைக் கொண்டு சென்றதால் சந்தேகமாகவே உள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தலைமைத் தேர்தல் ஆணையாளர் குரேஷி.

இதுதொடர்பாக அவர் பத்திரிகையாளர்ளுக்கு நேற்று அளித்த பேட்டி வருமாறு:

டில்லி விமான நிலையத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் 57 லட்சம் ரூபா பணத்துடன் பிடிபட்டார். இந்தத் தேர்தலில் பண ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது.

தேர்தல் நேரத்தில் வேட்பாளர் ஒருவர் 2 கோடி ரூபா செலவு செய்தால் வெற்றி பெற்றதும் 10 கோடி ரூபா லாபமடைகிறார். இந்த லாபத்தை ஈட்டிக்கொள்ள கிரிமினல் குற்றவாளிகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொள்கிறார்.

அரசியலைத்தான் பணம் சம்பாதிக்க சாதகமாக பயன்படுத்தி கொள்கின்றனர். தேர்தல்



செலவுகளை தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம். ஆனாலும் இதில் 100 சதவீதம் வெற்றி அடைய முடியவில்லை.

6மோதங்களுக்கு முன்பு தேர்தல் செலவு கண்காணிப்புக்கு என வருமானவரி அதிகாரி தலைமையில் தனியான பிரிவை ஏற்படுத்தினோம். அது நல்ல பலனை கொடுத்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். (201)

# ஒரு கண்ணுடன் பிறந்த அதிசயக் குழந்தை

இந்தியாவில் ஒரு கண்ணுடன் குழந்தை ஒன்று கடந்த வாரம் பிறந்துள்ளது. இந்தக் குழந்தைக்கு மூக்கு இல்லை. பிறந்து 24 மணித்தியாலங்களில் இறந்து விட்டது. குழந்தையின் தாயான வீனா சவானுக்கு வயது 34 ஆகும்.

வைத்தியர்கள் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு இருந்தனர். குழந்தையை பார்க்க தாய் அனுமதிக்கப்படவே இல்லை. இந்த குழந்தை பிறப்பதற்கு 32 வாரங்களுக்கு முன்னர் ஸ்கேன் செய்து பார்த்ததில் குழந்தையினது உடல் நிலை திருப்திகரமாக இல்லை. குழந்தையின் மூளையில் நீர் நிரம்பி இருப்பதாக வைத்தியர்கள் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் தாக்கிய இளைஞர் மயக்கம்

பாட்டுக் கேட்பதற்காக வானொலிக்கு மின் இணைப்பை வழங்க முற்பட்ட போது மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தாவடி தெற்கில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பி.தாஸ்குமார் (வயது -18) என்பவரே மயக்கமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஒ-4-78-313)

# தலைமைப் பதவிக்கு வந்த...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதித்தலைவர் கருஜயசூரிய கூறுகையில்; தேர்தலுக்குப் பிறகு 400 தொலைபேசி அழைப்புகளுக்கு மேல் தமக்கு வந்ததாக அவர் கூறினார். பல குறைபாடுகள் பற்றியும் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். ஐ.தே.கவை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக தாம் எந்தவித தியாகத்தையும் புரிவதற்குத் தயாராய் இருக்கிறார் என்றார் அவர். கட்சியில் ஐக்கியம் ஏற்படுமானால் தமது பிரதித் தலைவர் பதவியை எவருக்கும் வழங்கத்தயாராய் இருக்கிறார் என்றார் அவர்.

வெளியாரின் தலையீடு கட்சியில் எற்படுவதாக அறிந்ததாகக் கூறிய ஜயசூரியா அவ்வாறு நடக்க அனுமதிக்கலாகாது என்றார்.

**தலைவராகத் தொடர்ந்து இருக்க ரணில் விருப்பம்**

ஐ.தே.கவின் புதிய யாப்பு விதிகளை முன்னாள் சட்டமா அதிபரும் பாதுகாப்பு அமைச்சருமான திலக் மாரப்பன சமர்ப்பித்து அதன் சட்டநுணுக்கங்களை விளக்கினார்.

கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை மிக்கவராக எழுந்து தமது நிலையைத் தெளிவு படுத்தினார். கட்சியின் தலைவராகத் தொடர்ந்து இருப்பது தமது எண்ணம் என்று அவர் கூறினார். கருத்தொருமைப்பாடு இல்லையெனில் விடயம் போட்டியின் மூலம் தீர்மானிக்கப்படலாம். அதற்கு இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற வேண்டும். இந்த விடயம் விரைவாக முடிவெடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மேற்கொண்டும் பெயர்கள் எதுவும் பிரேரிக்கப்படாவிட்டால் ரணில் விக்கிரமசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார் என்று மாரப்பன கூறினார். ஒருமித்த கருத்திலான முடிவுவேண்டும் என்று சஜித் பிரேமதாசா குறிப்பிட்டார்.

விக்கிரமசிங்க: போட்டிவேண்டும் என்று நீங்கள் முன்பு கூறியிருந்தீர்கள் அதைத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால் அதனை நாம் விவாதிக்கலாம்.

இந்தக் கட்டத்தில் முன்னாள் ஐ.தே.க சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து பிரிவு இல்லாமலே ஒருமித்த கருத்து உருவாக்கப்பட முடியும் என்றார். மோதலைத் தவிர்ப்பதற்கு கரு ஜயசூரியாவின் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கலாம். ஆனால் ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் கட்சித் தலைமைப் பதவிக்கான முன்மொழிவை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றார்.

அண்மையில் ஐ.தே.கவில் இணைந்து கொண்டவரான மங்கள சமரவீர கூறுகையில், கட்சி உறுதியாக உள்ளது. ஒற்றுமையைப் பாதுகாத்திட வேண்டும். தலைவராக யார் வந்தாலும் அவரை ஆதரிப்போம். இந்த விடயத்தில் ஒரு முடிவைக் காண்பதற்கு பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்கள் விரும்புகிறார்கள் என்றார்.

ஏப்ரல் 12 ஆம் திகதிக்கு பின்னர் தாம் தலைவராக இருப்பார் என பிரேமதாச கூறியிருந்தமை கட்சிக்கு நன்மை செய்யவில்லையென்றார் அவர். காலி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விக்கிரம சிங்காவின் பலத்த ஆதரவாளருமான வஜிர அபயவர்தன பேசும்போது தலைவரை மாற்றுவ தென்பது இடிவிழுந்த அநியாயமாகப்போய்விடும் என்றார்.

**தன்னைத்தானே புகழ்ந்துகொண்ட பிரேமதாசா**

பிரேமதாசா கூறியதாவது:- எது செய்யப்பட்டாலும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். நான் எங்குசென்றாலும் ஏனோ தெரியவில்லை நான் ஒரு காந்தம் போல் காணப்படு கிறேன். மக்கள் என்னில் கவரப்பட்டுவிடுகிறார்கள். தேர்தலில் தாம் பெற்றுக்கொண்ட மக்கள் ஆதரவு கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்றார் அவர்.

விக்கிரமசிங்க தலையிட்டு இந்த வேலையை முதலில் முடித்துவிடுவோம். வாக்களிப்பு ஒன்றை நடத்துவோம் என்றார்.

வாக்களிப்புக்கு விடாமல் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும் என்று விரும்பியவர்களில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ரவிசமரவீர (பதுளை எம்பி), ரஞ்சன் ராமநாயக்க (இரத்தினபுரி எம்பி), ஜயலத் ஜயவர்தன (கம்பஹா எம்பி), ஜோன் அமரதுங்க (கம்பஹா மாவட்ட எம்பி) ஆகியவர்கள் விடயம் நீடிக்கப்படக்கூடாது ஒரு வழிகாணப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இன்று முடியாவிட்டால் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். இது நீடிப்பதைத் தாம் விரும்பவில்லை யென்றும் இல்லையெனில் பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தை நாடி மேலும் நீடிப்பை ஏற்படுத்தி விடுவார்கள் என்பதாக நண்பர்கள் கருதுகிறார்கள் என்று விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விவகாரம் நீடித்தமையால் செவ்வாய்க்கிழமை மாலையில் குழு கூடுவதென்றும் அதற்குள் கரு ஜயசூரிய, காமினி ஜயவிக்கிரம பெரேரா, திஸ்ஸ அத்தனாயக்க, காபிர் ஹாஸிம் ஆகியவர்களைக் கொண்ட குழுவொன்று முட்டுக்கட்டையை தீர்ப்பதற்கான ஆலோசனை நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இக்குழு ஆலோசனைக்கெனசெயற்குழு தற்காலிகமாககலைந்தது.

அதன் பிறகு பலவிடயங்கள் இடம்பெற்றன. சந்திப்புகள், விவாதங்கள் என்றுயாவும் முடிவுற்றதன் பின்னர் விக்கிரமசிங்க போட்டியின்றி தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அதேபோல் சஜித் பிரேமதாச கூட்டுப் பிரதித் தலை வர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். (ப)

## மரண அறிவித்தல்

### வைத்தியநாதன் புஸ்பமணி



அனலைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியநாதன் புஸ்பமணி 25.03.2011 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதி - தெய்வானை தம்பதியரின் அருமை மகளும், வைத்தியநாதனின் (கனடா) அன்பு மனைவியும், நிரஞ்சனா (கனடா), சிறீதரன் (கனடா), ரவீந்திரன் (அமெரிக்கா), நிசந்தினி (ஆசிரியை, ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்), மனோகரன் (கனடா) ஆகியோரின் அருமை தாயாரும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் குணரட்னம் (அனலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2011) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

254, பலாலி வீதி, (மகளின் இல்லம்)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
2ஆம் வட்டாரம், (சகோதரனின் இல்லம்)
அனலைதீவு. (2661)

தகவல்:
விமலேந்திரன் நிசந்தினி (மகள்),
வை.குணரட்னம் (சகோதரன்).

## நன்றி நவிலல்





புலோலி வடகிழக்கைச் சேர்ந்த பெண்மணி ஆகிய நான் 10 வருடங்களாகத் தொடர்ந்து மாறாத தலையிடியினால் பீடிக்கப்பட்டு பல வைத்தியர்களிடம் சென்றும் மாற்றமுடியாத நிலையில் 1ஆம் கட்டைச் சந்தி பருத்தித்துறையில் அமைந்திருக்கும் யோகசித்த ஆயுர்வேத வைத்திய நிபுணர்களான

**S.பரம்குமார்** (T.P. 0779112969)

**S.சிவகுமார்** (T.P. 0774521392)

ஆகியோர் ஒரு வாரத்தினுள் இம் மாறாத் தலையிடியினை மாற்றித் தந்தமைக்கு அவர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் சேவைகள் மேன்மேலும் மேன்மையடையப் பிரார்த்திப்பவர்.

புலோலி வடகிழக்கு,
புலோலி. (சி-577167) ராணி.

## தசாககிருகயக்ஞ அழைப்பு



நிகழும் விகிர்தி வருடம் பங்குனி திங்கள் 5ஆம் நாள் (19.03.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ அண்ணாச்சாமி ஐயர் இரவிச்சந்திரசர்மா**

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

28.03.2011 திங்கட்கிழமை தசாகம் மு.ப 10.00 மணி
29.03.2011 செவ்வாய்க்கிழமை ஏகோதிஷடம் (மாசிகம்)
30.03.2011 புதன்கிழமை சபிண்டீகரணம்
31.03.2011 வியாழக்கிழமை கிரகயக்ஞம் (மதியபோசனம்)

மேற்படி கிரியைகளில் தாங்கள் குடும்ப சகிதம் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறேமசந்திர வாசா,
துன்னாலை, கரவெட்டி. (577021)

மனைவி - இந்திரா,
மகன் - சாருஹாச சர்மா,
குடும்பத்தினர்.

[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்].

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**தம்புசெல்வரட்ணம்**
*(கொக்குவில்மேற்கு)*

மண்ணில் 04 - 11 - 1945
மனங்களில் 27 - 02 - 2011

கொக்குவில் பதியில் எழுந்திட்ட ஏந்தலாய்!
துணையென யாவருக்கும் நற்சேவையாளராய்!
தேனை நிகர் மொழி பகரும் சிந்தையாளராய்!
வானை நிகர்த்த நற்கருணையாளராய்-வையகத்தில்
உலாவிய எங்கள் உத்தம எந்தையே!
காலவிதி கடிதில் உமை அழைத்ததுவோ-எம்
கோல விழிகள் கண்ணீர்க்கடலில் ஆழ்ந்ததுவோ!
ஒரு மாதமென்ன ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
உன் உருவம் நீங்காது என்றும் எம் மனதை விட்டு.

கடந்த 27.02.2011 அன்று சிவபதமடைந்த எம் அன்புத்தெய்வம் அமரர் தம்பு செல்வரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 28.03.2011 திங்கட்கிழமை மு.ப.11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

207/6 ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (2658) குடும்பத்தினர்.

## நீங்கா நினைவலைகள்

31 ஆம் நாள்

மண்ணகம் 11.06.1945
விண்ணகம் 26.02.2011



அமரர்
**வெள்ளையன் பிலிப்**

6 ஆம் ஆண்டு



மண்ணகம் 30.07.1947
விண்ணகம் 19.03.2005

அமரர் பிலிப் மாகிறேற்
**அக்கினேஸ்**

நாள்கள் முப்பத்தொன்று ஆகியும்
ஆறவில்லை எம் துயரம் - நேற்று
நிஜமாய் நின்ற எம் தெய்வங்களே!
இன்று நிழலாய் மறைந்து போனதேனோ!
என்றும் உங்களுடன் இருப்போம் என்றவர்களே!
எம்மை விட்டு இடையில் பிரிந்ததேனோ!
என்றும் உம் நாம வரிகளுடன் எம்
வாழ்க்கைப் பயணம் தொடரும்

வின்சன் கடை வீதி,
மல்வம், உடுவில். (2859)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பாடசாலைகளின் குழுநிலைப் போட்டி முடிவுகள்

வடமராட்சி,மார்ச்28

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான பெரு விளையாட்டு விழாவில் குழுநிலைப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

**பூப்பந்தாட்டம்**

**19 வயதுப் பிரிவு - ஆண்**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு - பெண்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

**கரப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு - ஆண்**

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, புலோலி புற்றளை மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி.

**15 வயது பிரிவு - பெண்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை சென்.தோமஸ் மகளிர் றோ.க. பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு - ஆண்**

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி.

**17 வயதுப் பிரிவு - பெண்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை சென்.தோமஸ் மகளிர் றோ.க. பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**19 வயதுப்பிரிவு - ஆண்**

உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி, வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு - பெண்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி.

**கிரிக்கெட்**

**19 வயதுப் பிரிவு - ஆண்**

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**19 வயதுப்பிரிவு - பெண்**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

(த-236)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குகிறார். (த-20)

# விளையாட்டு விழா

கைதடி, மார்ச் 28

கைதடி தெற்கு மின்னொளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி வளர்ச்சிக் குழுத்தலைவர் திருமதி தெய்வேந்திரன் வசந்தி தலைமையில் மின்னொளி முன்பள்ளி மைதானத்திலே நடைபெற இருக்கிறது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் ப.செல்லத்துரையும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி ஆரம்பப் பிள்ளைப் பருவ உத்தியோகத்தர் தே.வினோதன், தென்மராட்சி வலயக் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.பற்குலேந்திரன், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.லோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ம-288)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி**

**லக்ஷிதா கனகராசா (லக்கு)**



மலர்வு:
27.10.1986

உதிர்வு:
22.03.2009

மலராகி மணம் வீசும் வசந்தம் வந்தது
காலமெல்லாம் எமைக்காத்து
வாழ்வளிக்கும்
குடும்பத் திருவிளக்கு ஒளி
கொடுக்கும் என்றிருந்தோம்
சீறிப்பாய்ந்த குண்டதனால் சின்ன
உயிர் பிரிந்ததுவோ
மீண்டும் ஒரு தடவை எம்மோடு
இணைவாய்
நெஞ்சிருக்கும் வரைக்கும் நாம்
மறவோம்
உன் நினைவில் வாழ்கின்றோம்
என்றென்றும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணுக்கேணி கிழக்கு,
முள்ளியவளை.

குடும்பத்தினர்.

(41,20,23)(c/577013)


## தடகளப் போட்டிகளில் சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்கள் இடையே நடைபெற்ற தடகளபோட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரன் நவரத்தினம் கஜேந்திரன் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டிகளில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழம் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (த-11)

# றேஞ்சர்ஸ் நடத்தும் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொற்றாவத்தை கலைவாணி சன சமூக நிலையத்தின் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கழகம் மற்றும் வெளிக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டம், மரதன் ஓட்டம் மற்றும் அனைத்து தடகள விளையாட்டுக்கள் இந்தப் போட்டியில் இடம்பெறவுள்ளது. (த-313)

# கொழும்புத்துறை இந்து வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். கோட்டப் பாடசாலைகளின் 19 வயது பிரிவினரின் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதலாமிடத்தை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்-முதலாமிடம்,யாழ். மத்திய கல்லூரி இரண்டாமிடம்,சென். ஜோன்ஸ் கல்லூரி :மூன்றாமிடம் (த-23)


## மரண அறிவித்தல்

*திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்*

*(சின்னம்மா)*



மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.37/2, பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் (சின்னம்மா) நேற்று (27.03.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, செல்லையா, செல்லாச்சி ஆகியோரது அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சீதேவிப்பிள்ளை மற்றும் கண்ணகை, வியாகரத்தினம், கெங்காதரன் (பொன்னன்), ரதிதேவி ஆகியோரது அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைசாமி மற்றும் வேலுப்பிள்ளை, புவிநாயகி, சாந்தமலர், காலஞ்சென்ற சிவபாத சுந்தரம் (மண்டையன்) ஆகியோரது அன்பு மாமியாரும் காலஞ்சென்ற புண்ணிய மூர்த்தி மற்றும் கிருபாமூர்த்தி, ஏகாம்பரம், பகவதிதேவி, சேதுராஜா, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சிறிய தாயும் காலஞ்சென்றவர்களான அருளாம் பிகைதேவி, சரோஜாதேவி புண்ணியகாந்தன் மற்றும் கௌரி ஆகியோரது அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் சையோக நாதன் (பவா), சந்திரபாலு (பிரான்ஸ்), சிவலோகராஜா (கனடா), ஸ்ரீ கௌரி (சுவிஸ்),தவக்குமார் (சுவிஸ்), முரளிதரன், முரளிகரன், தர்ஷினி, கிருஷ்ணலதா, சாந்தரூபன் (ஜேர்மனி), கிருஷ்ண ரோகினி ஆகியோரது அன்புப் பேர்த்தியும் சஹானா (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்), ஷர்மி (சுவிஸ்), துவாரகன், துஷாயினி, சங்கவி, எழில்வேந்தன், பிரணவன், றதீஸ்குமார், தனுஷன், லக்கீசன், சானுஜா, பானுஜா, ஷாய்கான், வேணுகா துதீசன் ஆகியோரது அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2011) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 37/2, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(41,20,23)

தகவல்
குடும்பத்தினர்.



## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 111
திகதி - 26.03.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து Y அதிர்ஷ்ட இலக்கம் 10 வெற்றி இலக்கம் 7 5 7 4 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| [illegible] பரிசு | Y 10 7 5 7 4 8 | ரூ. 13,854,148.00 | - |
| 1 பரிசு | 10 7 5 7 4 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 7 5 7 4 8 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 5 7 4 8 | ரூ. 10,000.00 | 29 |
| 4 பரிசு | 7 4 8 | ரூ. 1,000.00 | 285 |
| 5 பரிசு | 4 8 | ரூ. 50.00 | 2769 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 26717 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| 7 பரிசு | 7 5 7 4 | ரூ. 1,000.00 | 29 |
| 8 பரிசு | 7 5 7 | ரூ. 100.00 | 276 |
| 9 பரிசு | 7 5 | ரூ. 50.00 | 2792 |
| 10 பரிசு | Y | ரூ. 20.00 | 11031 |
| 11 பரிசு | Y 10 | ரூ. 100.00 | 1257 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,090,310.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி 2476662, 2476663
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.14,280,281.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்



## அமரர் சம்பந்தன் சக்திதரன்

(ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

எங்களுள் ஒருவனாய் நேற்றுவரை பணி செய்தாய்
இன்முகம் இளநகையும்
இனிய மொழியும்
என்றும் உன் சொத்துக்கள்
விவாத மேடையில் வித்தகனாய் உயர்ந்து நின்றாய்
விசேட கல்வியிலே விருப்புக் கொண்டிங்கு வந்தாய்
பிஞ்சுகளின் நெஞ்சங்களில்
நீங்கா இடம் பிடித்தவனே!
பொங்கியெழும் துயரத்தால்
பேதலித்து நிற்கின்றோம்
துன்பத்தில் துவள்கின்ற உறவுகளின்
துயரத்தில் கலந்தே உன்
ஆத்மாவின் அமைதிக்காய் ஆண்டவனை
இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்,
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**

(சி/577019)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சபாரத்தினம்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சபாரத்தினம் 26.03.2011 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜெகதீஸ்வரியின் (ஈஸ்வரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பரமேஸ்வரி (ஏழாலை) தம்பதியரின் அன்பு மகனும் மீசாலை மேற்கைச் சேர்ந்த சிவ பாதம் (சிவனடியார்) - காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் மகாதேவன் (சிலாபம்), காலஞ்சென்ற தர்மலிங்கம் (ஏழாலை) மற்றும் பாலசுந்தரம் (ஆனந்தி - ஏழாலை), இராமச்சந்திரன் (சந்திரன் - கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் விஸ்வநாதன் (கனடா), நடேசன் (மீசாலை), சிவன்சோதி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), இராஜேஸ் வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2011) செவ் வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் மீசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம் பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
ச.ஜெகதீஸ்வரி (மனைவி).

(சி/577018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிபியாவில்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் இராணுவத் தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட கூட்டுப் படைகள் ஈடுபட்டுள்ளன.

அவை கடாபியின் இராணுவ நிலைகளைக் குறி வைத்து குண்டு வீசி வருகின்றன. கடாபிக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் பிடியில் பெங்காசி தவிர அஜ்தாபியா, பிரகா, மிஸ்ரதா ஆகிய நகரங்கள் இருந்தன.

அவற்றை கடாபியின் இராணுவத்தினர் கைப்பற்றி தங்கள் வசமாக்கினர். அவற்றை மீண்டும் கைப்பற்றுவதற்கு அமெரிக்க கூட்டுப் படையினர் அந்த நகரங்களில் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

அவர்களின் தாக்குதலை லிபிய இராணுவத்தால் சமாளிக்க முடியவில்லை. சனிக்கிழமை இரவு அஜ்தாபியா, பிரகா நகரங்களை விட்டு ஓட்டம் பிடித்தனர். தற்போது அவர்கள் எண்ணெய் வளம் மிக்க நகரமான பிரகாவிலிருந்து 40 கி.மீற்றர் தூரத்தில் முகாமிட்டுள்ளனர்.

அங்கு தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடாபியின் ஆதரவாளர்கள் வீட்டுக் கூரைகளின் மீது இருந்தபடி துப்பாக்கியால் சுடுகின்றனர். இங்கு மட்டும் இதுவரை 115 பேர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தவிர, தலைநகர் திரிபோலியிலும் தாக்குதல் தொடர்ந்து நடைபெறுகிறது. அமெரிக்க கூட்டுப்படையின் போர் விமானங்கள், குண்டுகளையும், ஏவுகணைகளையும் தொடர்ந்து வீசி வருகின்றன. (ஓ-சி)

## வெள்ள... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க் மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்களுக்கு அதேபோல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்தவுடன் நன்கொடையாளர்களிடம் முறைப்படி நிதியுதவி கோரப்படும் என இலங்கைக்கான ஐ.நாவின் பதில் வதிவிட பிரதிநிதி அட்னன் கான் தெரிவித்தார். (ஓ-10)

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகுகள் வடபிராந்திய கடற்பகுதியில் சேவையாற்றுவதற்காக இணைக்கப்பட்டுள்ளது. இப்படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பணிக்குப் புறப்படுகின்றன. அதேபோன்று இப்படகுகளிற்குச் சர்வதேச கரையோரப் பாதுகாப்புப் படகுகளுக்குப் பூசப்படுகின்ற வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ளது. அது போன்று வடிவமைப்புக்களும் இந்திய கரையோர படகுகளுக்குச் சமனானவையாகும்.

இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கடற்பரப்பில் மாத்திரம் பணிபுரிகின்றதுடன் இலங்கை கடற்பகுதிக்குள் வருவதில்லை. அத்துடன் வடமராட்சிக் கடற்பரப்பில் நடமாடியதாகக் கூறப்படுகின்ற இந்திய கரையோரப் படகுகளின் வர்ணத்திலும், வடிவத்திலும் இருந்த படகுகள் இலங்கைக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினருக்குச் சொந்தமானவையாகும். அத்துடன் இந்தப் படகுகளைக் கண்ட மீனவர்கள் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமானவை என்று தவறான எண்ணம் கொண்டுள்ளார்கள் என விளங்கக்கூடியதாக உள்ளது - என்றுள்ளது. (ஐ)

## தமிழ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வராக மட்டுமல்லாமல், இனம் பற்றிய உண்மையான அன்பும், அக்கறையும் கொண்டவராகவும், சுயமாக முடிவெடுக்கக் கூடியவருமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே விளங்கி வருகின்றார்.

தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைத்துவம் உள்ளவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே விளங்கி வருகின்றார் என்பதுடன் இனம் பற்றிய உண்மையான அக்கறை கொண்டவராகவும், அன்பு கொண்டவராகவும் இருந்துவருகின்றார் என்பதை நாங்கள் உணர்வுபூர்வமாக அறிவோம்.

அத்துடன் 2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஜனநாயக நீரோட்டத்துக்குக் கொண்டு வந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே - என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றியதைத் தொடர்ந்து ஜெயராஜ் அமைச்சருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கம்பன் கழகத்தைச் சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். வித்துவான் வசந்தா வைத்தியநாதனும் நிகழ்வில் உரையாற்றினார். (அ-சி)


## சேவை நலன் பாராட்டு விழா



யா/அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையின் அதிபராக பணியாற்றி இன்று 28.03.2011 இல் மணி விழாக் காணும்

திருமதி சிவரூபி சொக்கலிங்கம்

அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரின் ஓய்வுக் காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| ஆசிரியர் பணியில் - | 1984.08.05 - 2006.08.31 |
| உப அதிபர் பணியில் - | 2006.09.01. - 2006.12.31 |
| அதிபர் பணியில் - | 2007.01.01. - 2011.03.28 |

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 ★ 08 ★ 1940
மறைவு 26 ★ 03 ★ 2004

அமரர் கந்தையா சச்சிதானந்தம்

திதி:- நவமி

ஏழாண்டு ஓடி மறைந்திடினும் நிலைத்திருக்கும் உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை.

புலோலி வடகிழக்கு, வராத்துப்பளை, பருத்தித்துறை.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறந்தோர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 17 ★ 07 ★ 1948
விண்ணில் 26 ★ 02 ★ 2011

அமரர் பெருமாள் பாக்கியம்

கடந்த 26.02.2011 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.03.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டைப்பாலி வீதி,
ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

## அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

மிக விரைவாக கே.யூ வின் தனிப்பட்ட கல்வி முறைமூலம் உங்களைஆங்கிலம் அறிந்தவர்களாக்குகிறோம்.விபரங்கள் நேரில்.

Ku's Spoken English© (No Grammar) ESOL 1 ESOL 3 ESOL 2 G.C.E O/L

இலக்கண வேதனையற்ற மிகவும் இலகுவான, வீடியோ,ஓடியோ முறை மூலம் ,தனிப்பட்ட முறையில் கல்வி.-UK Visa English Specialists

UK Settlement Visa English

சர்வதேச ஆங்கில பரீட்சைகளில் பரீட்சகராக பணியாற்றிய வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ள விரிவுரையாளர் மூலம் வகுப்புக்கள்.

விபரங்களுக்கு: 077-6458253

City & Guilds நொலிட்ஸ் யூனிவேர்ஸ்

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு முதலாம் ஒழுங்கையில் நன்னீர்க் கிணற்றுடன் 3¾ பரப்புக் காணியில் அமைந்த புதிய வீடு மிகக் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770293801, 0779906064

## ஏசியன் கல்வி நிலையம் - மீசாலை

O/L Day Class ஆரம்பம்

இன்று (28.03.2011) திங்கள் 8.00 மணி

## சமையல் ஆள்தேவை

சைனீஸ், இந்தியன் சமையல் வேலை தெரிந்தவர்கள் உடன்தேவை. அடிப்படை சம்பளம் 30,000/-

தொடர்பு: 0771751495

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் குமரகோட்டம் ஓடை வைரவர் கோயில் சுற்றாடலில் இரண்டு பரப்புக் காணியுடன் (பிரதான வீதிக்கு அருகில் அமைந்தது) விற்பனைக்குண்டு.

தொடர்பு: Dr.சிவஞானம் விவேகானந்தராசா
தொலைபேசி: 011 2721542, 0777436347

## சேவை

உங்கள் கையடக்கத் தொலைபேசிகளை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள

STAR Phone Repair Shop

இல.124, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொ.பே:0772727370

## IT LAND

"Total IT Solution Center"
960, K.K.S Road, Kokuvil

வேலையாள்கள் தேவை

கணனி விற்பனைநிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. கணனித்துறையில் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. ஆண் / பெண் இருபாலாரும் மற்றும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : IT LAND, K.K.S Road, Kokuvil
TP No : 021 5100166 / 0718618015
Email : jaffnaitland@gmail.com

Our Services
Computer Sales and Repair, Phone sales and Repair, Software Development, Web Development, Game Zone, Internet Browsing, Video Calling, Photocopy, Printing and Scanning

## காணவில்லை



துன்னாலை வடக்கு, இந்திரன் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த

கந்தன் வீரன்

(வயது 63) என்பவரை கடந்த (24.03.2011) வியாழக்கிழமை காலை முதல் காணவில்லை. இவர் மனநிலை சரியில்லாதவர்.

இவரைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் 0777206779 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பா.ஜெயபாலன்.

## மரண அறிவித்தல்

திருமதி கனகசபாபதி புஸ்பராசமணி



ஆறுகால்மடம், மயிலுவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திருமதி கனகசபாபதி புஸ்பராசமணி நேற்றுமுன்தினம் (26.03.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - துரையம்மா தம்பதியின் அன்பு மகளும் கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாதேவா மற்றும் வாமதேவா (சீராளன்) சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் யோகேஸ்வரி, சரோஜினிதேவி, சிறிகமலநாதன், சூரியகுமார், சூரியதர்சினி, சூரியரஞ்சன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலுவீதி, ஆறுகால்மடம்.
தகவல்: மருமகன் (சத்தியசீலன்).

## 4ஆம் வருட நினைவலைகள்...



திருமதி லியோனா யூலியஸ்ராணி பசில் ராஜ்குமார்

[ஆசிரியை யா/புற்றளை மகா வித்தியாலயம் புலோலி, யா/வடமாட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி]


நான்கு வருடங்கள்
உருண்டோடியும்,
நாம் உங்களை மறக்கவில்லை,
திரும்பும் நாற்புறமும் உங்களைக் காண்கின்றோம்,
நீங்கள் எங்களுடன் வாழ்கின்றீர்கள்,
என்றும் வாழ்வீர்கள்.

(சி/577026)

என்றும் நினைவுகளுடன்:
கணவன் P.பசில் ராஜ்குமார் RDHS Office, யாழ்ப்பாணம்,
மகன் B.பசில் பியன்ரோ ஹாட்லிக்கல்லூரி,
தாய், சகோதரன், உற்றார், உறவினர்.
Off சென். தோமஸ் வீதி, சென். அன்ரனிஸ் வீதி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெளிவான வானிலையும் பிற மாவட்டங்களில் மழையும் பெய்யும் சாத்தியமுள்ளது.

# அரசின் கொடுமைகளை அம்பலப்படுத்துவதன் மூலமே தடுப்பில் உள்ளவர்களை விடுவிக்க முடியும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்28

புனர்வாழ்வு என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் உடல் ரீதியாக மிக மோசமாகச் சித்திர வதைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாகவே அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

'முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களது கொடுமைகளை அம்பலப்படுத்த தமிழ் மக்கள் முன்வரவேண்டும்' என்ற தலைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கிளிநொச்சி, பல்லவராயன்கட்டு, கரியாலை நாகபடுவானைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வவுனியா, நெளுக்குளம் புனர்வாழ்வு முகாமில் கடந்த திங்கட்கிழமை தற்கொலை செய்து கொண்ட சம்பவம், வெலிக்கந்தைப் புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த 22 ஆம் திகதி இறந்த சம்பவம் இரண்டுமே சந்தேகத்துக்கு இடமான முறையில் இடம்பெற்றுள்ளன.

இந்த இளைஞர்கள் இருவரும் முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே தாங்களாகவே தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்குநாம்வரவேண்டியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் இளைஞர், யுவதிகளும் உள்ளனர்.

சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் வகையில் இலங்கை அரசு மேற்கொள்ளும் இச்செயற்பாடுகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இணக்க அரசியல் என்ற போர்வையில் அரசுக்கு ஒத்துழைப்பதன் மூலம் இந்தக் கொடுமைகள் மூடி மறைக்கப்படுமாயின் தான் மேற்கொள்ளும் கொடுமைகளையும் நிறுத்த வேண்டிய எந்தத் தேவையும் அரசுக்கு ஏற்படாது என்பதை மக்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இன்று பல நாடுகளில் அரசுகளால் மேற்கொள்ளப்படும் பொதுமக்கள் மீதான ஜனநாயக அடக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்; ஆரம்பித்து விட்டனர்.

மக்களின் போராட்டங்களை அரசுகள் வன்முறைகளைக் கையாண்டு நசுக்குவதை சர்வதேச சமூகம் அனுமதிக்க தயாராக இல்லை. எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க நாம் அரசின் தந்திரங்களையும், கொடுமைகளையும் அம்பலப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஒ-10)

# நகரில் பெண்களிடம் சேஷ்டை விடும் 'கதாநாயகர்கள்' நேற்றுச் சிக்கினர்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ். நகரை அண்டிய பகுதியில் நீண்ட காலமாகப் பெண்களுடன் சேஷ்டைகளில் ஈடுபட்டு வந்த கும்பலொன்று நேற்று இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கும்பலைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பில் முடிந்ததனாலேயே இராணுவத்தினர் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது :

குறிப்பிட்ட கோஷ்டியினர் யாழ். நகரை அண்டிய கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்திப்பகுதியில் நீண்ட காலமாகப் பெண்களுடன் அங்கச்சேஷ்டைகளில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு பெரும் தொல்லை கொடுத்து வந்துள்ளனர். தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வரும் மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள் என யாரையும் இவர்கள் விட்டு வைப்பதில்லை.

பெரும்பாலும் சனி ஞாயிறு தினங்களில் இவர்கள் மது போதையில் பெண்களுடன சேஷ்டைவிடுவதுடன், வீதியால் போவோர் வருவோரையும் சீண்டியிருக்கின்றனர்.



நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மது போதையில் தமக்கிடையே வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கோஷ்டியில் ஒருவருக்கு மண்டை உடைந்துள்ளது. இதனை அவதானித்த இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வந்து சமரசத்தில் ஈடுபட முயன்ற வேளை கோஷ்டியினர் இராணுவத்தினரையும் தாக்க முற்பட்டனர். உடனடியாகச் சம்பவ இடத்துக்கு மேலதிகமாக படையினர் அழைக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட கோஷ்டியை இராணுவத்தினர் மடக்கிப்பிடித்ததோடு, பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதே வேளை

இக்குழுவைச் சேர்ந்த நால்வர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கசூரினா கடற்கரைப் பகுதியில் மது போதையில் பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபட்டதனால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் (ஒ)

# நல்லிணக்கக் குழுவின் முன் ரணில் சாட்சியம் அளிக்கமாட்டார்

கொழும்பு,மார்ச்28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்க மாட்டார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஆனால் அக்குழு அந்த நோக்கங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. இதனால் அக்கட்சியின் தலைவர் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்காத காரணத்தால் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதில் சிக்கல் நிலை காணப்படுகிறது என்று ஆணைக்குழு அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# வேலணையில் இன்று கொமர்ஷல் வங்கிக் கிளை

வேலணை,மார்ச்28

தீவக மக்களின் நலன் கருதி வேலணை பிரதேசத்திற்கான கொமர்ஷல் வங்கிக் கிளை குறிகாட்டுவான் வீதி, பங்களாவடிச் சந்தியில் இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 9.17 மணிக்கு சுபவேளையில் இடம்பெறும்.

இன்றைய தினம் மட்டும் இக்கிளையில் சேமிப்புக் கணக்கு, நடைமுறைக்கணக்குகளை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு முற்றிலும் இலவசமாக தன்னியக்க கணக்கு பரிவர்த்தன வரவு அட்டை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-323)

# கூட்டமைப்பு-மு.காங்கிரஸ் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன

## வதந்திகளை நம்பவேண்டாம் என்கிறார் ஹசன் அலி

கொழும்பு, மார்ச் 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எப்போதும் புரிந்துணர்வுடனேயே செயற்பட்டு வந்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் காலத்திலிருந்தே இந்த இணக்கப்பாடு தொடர்கின்றது.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹசன் அலி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எம்மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சில எதிராளிகள் தேவையற்ற வகையில் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது இரு தரப்பினதும் இணக்கப்பாடு இன்றி வடக்கு, கிழக்குக்கு நிரந்தரமான நிலைத்து நிற்கக்கூடிய தீர்வைக் காண முடியாது.

சர்வகட்சி மாநாடுகளின் போதும் நாம் இந்தக் கருத்தை முன்வைத்தே கலந்துகொண்டோம். இதற்கு வெளிநாடுகளின் மத்தியஸ்தமோ தலையீடோ தேவையில்லை. - என்றார்.(ஒ-சி)

# நிகழ்வுகள்

### பாடசாலை பரிசளிப்பு விழா

வரணி,மார்ச் 28

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் உப அதிபர் எஸ். தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரிக் கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவானந்தமும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்.சந்திரசேகரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-122)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு துறைசார்ந்த அதிகாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-313)

### சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

நாவற்குழி,மார்ச் 28

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில் சிறுவர் தொடர்பான பணிகளில் ஈடுபடும் அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிராகரிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் சுதேச மருத்துவ சபையிடம் கையளிக்குக!

## நேற்றைய பொதுக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்துப் வட இலங்கை சுதேச மருத்துவ சபையிடம் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் இல்லையேல் பொது மக்கள் பங்களிப்புடன் அதனை முறியடிக்க நாம் முயலுவோம் என்று வட இலங்கை சுதேச மருத்துவ சபையினால் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் ஏற்பாட்டிலான பொதுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. சபையின் தலைவர் டாக்டர் சு.ஸ்ரீ விக்கினேஸ்வரா தலைமையில் இடம்பெற்ற இந்தப் பொது நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பொதுக் கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட மூன்று முக்கிய தீர்மானங்களும் வருமாறு:-

* வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சினால் நிராகரிக்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் வட இலங்கை சுதேச மருத்துவ சபையிடம் மீளவும் கையளிக்கப்பட வேண்டும்.
* லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரியில் ஐந்து வருட கற்கை நெறி (டி ஏ எம்) தொடர்ந்தும் இடம்பெற வேண்டும். மானியங்களை நிறுத்தும் முயற்சி கைவிடப்பட வேண்டும். கற்கை நெறிக்கு மாணவர்களை இணைப்பது, விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பாக வட இலங்கை சுதேச மருத்துவ சபையிடம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
* பல்கலைக்கழகங்களுக்கு நிகராக லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரி தரமுயர்த்தப்பட வேண்டும்.

இவை தொடர்பாக ஜனாதிபதி, துறைசார்ந்த அமைச்சர்கள், அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு தீர்மானங்களை அனுப்புவது என்றும் அங்கு முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது சித்த ஆயுர்வேதத் துறையை மேம்படுத்தும் வகையில் செயற்குழு அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினகளான மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சி.வி.கே. சிவஞானம், பொ.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபை உறுப்பினர்களான சே.விந்தன், மௌலவி சுபியான், கல்லூரி அதிபர் உள்ளிட்டவர்கள் இதன்போது உரை நிகழ்த்தினர். அதிக எண்ணிக்கையானவர்கள் இதில் கலந்துகொண்டனர். (ஒ-14)

# புலிகளின் தலைவர் பிரபாகரனை உயிருடன் பிடிக்க இலங்கை விரும்பியிருந்தது - விக்கிலீக்ஸ்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உயிருடன் கைது செய்ய இலங்கை பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அதன் தலைவர் பிரபாகரனை உயிருடன் கைது செய்வதற்கு ஜனாதி பதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு கடும் உத்தரவுகளைப் பிறப்பித் திருந்ததாக விக்கிலீக்ஸ் சுட்டிக் காட்டுகின்றது.

அதற்காக என்ன விலை கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்துள்ளனர். அதன் காரணமாகவே யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் இழப்பு குறித்து அரசாங்கமோ பாதுகாப்புப் படைகளோ கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை என்றும் விக்கிலீக்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு யுத்த களத்தின் உண்மையான நிலைவரம் பற்றி சரியான தகவல் ஒருங்கிணைப்பு கிடைக்கவில்லை என்பதுடன், அவர்களின் எதிர்பார்ப்பின் பிரகாரம் விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் அரசாங்கப் படைகளிடம் சிக்கிக் கொள்ளவில்லை என்றும் விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.(தமிழ்வின்)(ஒ-10)

# பீரிஸை சந்திக்க நேரம் ஒதுக்காத பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர்

வெளிவவிகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அடுத்த மாதத் தொடக்கத்தில் பிரிட்டனுக்குப் பணயம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

அமைச்சர் பிரிட்டிஷ் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கியை சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியுள்ள போதும் இதுவரை அவரிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

பரகுவே மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தின் ஒரு கட்டமாகவே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரிட்டனுக்குச் செல்வதற்கும் திட்டமிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புச் சாத்தியமற்றதாகிப் போனாலும், அவருக்கு அடுத்த நிலையில் உள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட்டை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் ஜி.எல். பிரிஸ் கேட்டுள்ளார். ஆனால் அவரும் இதுவரை சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கவில்லை.(புதினப்பலகை)

# முன்னாள் போராளிகள் ஒரு தொகுதியினர் மாத இறுதியில் விடுதலையாவர்

புனர்வாழ்வளிக்கப்பட்ட ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் இம்மாத இறுதியில் விடுவிக்கப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தமிழ் மிரர் இணையத்தளத்திற்கு தெரிவித்தார்.

எனினும் சமூகத்தோடு விடுவிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

தற்போது சுமார் 4,000 வரையான முன்னாள் போராளிகளே புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளனர்.

இவர்களுக்கு மேசன் மற்றும் தச்சு தொழில் போன்ற வாழ்க்கைத்திறன்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான 24 புனர்வாழ்வு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய [illegible] உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் போராளிகளின் ஓவியங்கள் காட்சிக்கு

## ஏப். 25, 26ஆம் திகதிகளில் கொழும்பில்

புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலிகள் இயக்கப் போராளிகள் வரைந்த ஓவியங்களின் கண்காட்சி ஏப்ரல் 25,26ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

கொழும்பு கலாபவனத்தில் நடைபெற உள்ள இந்த ஓவியக் கண்காட்சியில் போராளிகள் வரைந்த சுமார் 300 ஓவியங்கள் இடம்பெறும். கண்காட்சியின் போது ஓவியங்கள் விற்பனை செய்யப்படும் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க தெரிவித்தார்.

ஒற்றுமை, சமாதானம், புனர்வாழ்வு அனுபவங்கள், எதிர்காலத் திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து முன்னாள் போராளிகளுக்கு மத்தியில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. அதில் தெரிவுசெய்யப்பட்ட ஓவியங்களே கண்காட்சியில் [illegible] பெறவுள்ளன. (இ-01)

## அடிகாயங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த

# இளம் ஆசிரியர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

பலத்த அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞரான ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். குப்பிளானைச் சேர்ந்த சம்பந்தன் சக்திதரன் (வயது -28) என்ற இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

ஆசிரியரான சத்திதரன் கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குப்பிளானிலுள்ள தமது வீட்டிலிருந்து தாயாருக்கு மருந்து வாங்குவதற்காக மாலை 5.30 மணியளவில் புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார். அங்கு நண்பருடன் இணைந்து சில மணிநேரத்தைக் கழித்துள்ளார்.

பின்னர் பலாலி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் தனியாகப் பயணித்துள்ளார். திருநெல்வேலியில் (பழைய பிரதேச செயலகத்திற்கு அருகில் இவரை இராணுவத்தினர் மறித்து விசாரணை செய்துள்ளனர். அவ்வேளை அங்கு ஒரு முறுகல் நிலைமை ஏற்பட்டதாகத் தெரியவந்தது.

அதைத்தொடர்ந்து அங்கு மக்கள் கூடியுள்ளனர். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அருகிலுள்ள மஞ்சமுன்னா தடியை முறித்து மிரட்டியதைத் தொடர்ந்து மக்கள் கலைந்துசென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் யார் என்பது குறித்துத் தெரியவில்லை.

அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் பிரஸ்தாப ஆசிரியர் சுயநினைவு இல்லாத நிலையில் 119 அவசர அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார். அங்கு அவர் விபத்தில் சிக்கிக் காயமடைந்ததாகத் தெரிவித்தே அனுமதிக்கப்பட்டார். உடனடியாக ஆசிரியர் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவரது உடலில் உள்ளாடையைத் தவிர வேறெந்த ஆடைகளும் இல்லாத நிலையிலேயே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

தொடர்ந்து சுயநினைவில்லாமல் இருந்த பிரஸ்தாப ஆசிரியர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் சிகிச்சை பயனின்றி மரணமானார்.

இவரது முதுகுப்புறத்தில் வயரினால் தாக்கியமைக்கான காயங்கள் காணப்படுவதுடன் தலையில் பலமாகத் தாக்கப்பட்டமைக்கான அடையாளங்கள் (காயங்கள்) உள்ளன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்தில் காயமடைந்தமைக்கான எந்தவித அடையாளங்களும் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

யாழ்.நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா யாழ்.ஆஸ்பத்திரியில் மரண விசாரணைகளை நடத்தினார். சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-15- 313)

## உள்ளூராட்சித் தேர்தலில் ஒத்துழைப்பு வழங்காத

# அரச தரப்பு எம்.பிக்கள் சிலர் மீது நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 28

உள்ளூராட்சிசபைத் தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கு உழைக்காத அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கு ஆளும் தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உழைக்கவில்லை என்று உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கட்சிக்குக் கிடைத்துள்ளன.

பல முக்கிய அமைச்சர்கள் கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியடையும் என்ற எண்ணத்தில் பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்தனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும், எம்.பிக்கள், அமைச்சர்கள் என்ற பேதமின்றி இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-சி)

# யாழ். பல்கலைக்கழகத்தைக் கூர்ந்து கண்காணித்து வருகிறது புலனாய்வுத் துறை

பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புற சூழலில் அதிகளவான இராணுவ புலனாய்வுத்துறையினர் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும், பணியாளர்கள் மத்தியில் பயப்பீதி காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினருக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையிலான யுத்தம் இடம்பெற்ற காலங்களில் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மட்டுமே கல்வி கற்று வந்தனர். சென்ற வருடம் கார்த்திகை மாதம் புதுமுக மாணவர்கள் உள்வாங்கப்பட்ட போது பல சிங்கள மாணவர்களும் உள்வாங்கப்பட்டனர்.

இதன் பின்னரே அதிகளவு இராணுவப் புலனாய்வாளர்கள் தமது புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மாணவர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் தமிழர்களுக்கு இருபதாயிரம் முதல் ஐம்பதாயிரம் வரை ஊக்குவிப்புத் தொகை கொடுக்கப்படுவதாகவும் தகவலுக்கு ஏற்ற வகையில் ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.(தமிழ்சீஎன்.என்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த வருடத்துக்கான சம்பந்தன் விருது பேராசிரியர் கி.விசாக ரூபனுக்கு நேற்று வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார். நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் விருதை வழங்கி பொன்னாடை போர்த்தி விசாகரூபனை கௌரவித்தார்.

# தற்காலிக அ.அட்டையுடன் தோற்றியோரின் ஜி.சீ.ஈ.பெறுபேறுகள் இடைநிறுத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 28

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில், தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பரீட்சைக்குத் தோற்றிய சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் இவ்வாறு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெறுபேறுகள் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் நுவரெலியா மற்றும் வடக்கில் மீள்குடியேற்றப் பகுதிகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்கள் என அவர் கூறினார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில், தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளைச் சமர்பித்து இம்மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். இருந்தும், அவர்கள் தேசிய அடையாள அட்டையின் பிரதியைச் சமர்ப்பித்து தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கும்வரை அவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதை பரீட்சைகள் திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின்போது முறைகேடாக நடந்துகொண்ட 6 ஆயிரத்து 430 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

போலி அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி ஆள் மாறாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு பரீட்சைக்குத் தோற்றவிருந்த நிலையில் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## விபத்தில் சிறுவன் நேற்றுக் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தனியார் வகுப்பு ஒன்றுக்குச் சைக் கிளில் சென்றுகொண்டிருந்த சிறுவனும், மோட்டார் சைக்கிளில் சென்றவரும் வீதியில் மோதுண்டு விபத்துக்குள் ளானதில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சைக்கென மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த விபத்துச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் அல்வாயில் இடம்பெற்றது. சம்பவத்தில் அல்வாய் வடக்கு நாவலடியைச் சேர்ந்த யோ.விதுசன் (வயது - 10) என்பவரே சிகிச்சை பெற்றுவருகிறார். (ஒ-4)

## கல்முனையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

300 இற்கும் மேற்பட்டோர் அங்கு வந்திருந்த போதிலும் சுமார் 25 பேரிடம் மட்டுமே வாய் மூல சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.ஏனையோரது சாட்சியங்கள் எழுத்து மூலம் அதற்கான படிவமொன்றில் பெறப்பட்டது

அநேகமானோர் காணாமற்போயுள்ள தமது உறவுகளை கண்டு பிடித்து தருமாறு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர். (ஒ-10)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் ஜனவரி மாதம் இலங் கைக்கு வந்திருந்தபோது இலங்கை - இந்திய கடல் எல்லை தாண்டி மின்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரண்டு நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பல தடவைகள் இந்திய மீனவர்கள் இலங்கையைத் தாண்டி மின்பிடித்தனர். குடா நாட்டு மீனவர்கள் அவர்களைப் பிடித்து இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைத்து நீதிமன்றம் ஊடாக அம்மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தப் பிரச்சினைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்கா கவே இரு நாடுகளுக்கும்இடையிலான சந்திப்புக்கான ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. (ஒ-சி)

## நுவரெலியா பிரதேச சபை தலைவராக சதாசிவம்

கொழும்பு, மார்ச் 28

நுவரெலிய பிரதேச சபையின் தலைவராக என்.சதாசிவம் நியமிக்கப்பட்டுள்ளார் என மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வி.எஸ். இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

## சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் கழகங்களுக்கு தடை

கொழும்பு, மார்ச் 28

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர் கழகங்களுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள் ளன என்று சப்ரகமுவ பல்கலைக்கழகத் தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார். பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறாக இந்த அனைத்து மாணவர் கழகங்களும் செயற்பட்டமையே இதற்கான காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தர்மலிங்கம்



கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 52/1, மருதடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (27.03.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் பாலகிருஸ்ணன் (பிள்ளையார் மல்ரி பிளாஸ்), காலஞ்சென்ற சண்முகராசா (அலன்) மற்றும் தியாகேஸ்வரி (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்.), தியாகராசா (T.T.L அலுமினியம் இன்ரஸ்ரியல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (28.03.2011) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52/1, நல்லூரடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0772759344

தகவல்:
குடும்பத்தினர்.

புதிய வீடு வாடகைக்கு உண்டு
கச்சேரிக்கு அருகில் சென்ற மாதமே கட்டி முடிக்கப்பட்ட 2000 சதுர அடி பரப்பளவில் அமைந்த இரு மாடிவீடு வெறுமையாகவோ அல்லது அனைத்துத் தளபாடங்களுடனோ அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உடன் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 0772268290

நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
O/L Day Class
(யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழு)
ஆரம்பம் - 28.03.2011 திங்கள் 8.00 A.m

புதிய பிரிவு
A/L 2013

| | |
|---|---|
| இரசாயனவியல் S.வாசு | பௌதிகவியல் S.சுஜன் N.வடிசன் |
| உயிரியல் V.A.ஞானேந்திரன் | இணை. கணிதம் R.சயந்தன் |

ஆரம்பம் - 28.03.2011 (Mon 3.00 pm)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு மிகவும் அருகில் 2ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0776079352, 0213001585

கற்சுமி வெளியீடு
முன்பள்ளி மற்றும் தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய மார்ச் - ஏப்ரல் மாத இதழ்கள்
அதிரடி மருதன், அம்மா, அன்னை, தாய், அறிவு, தேடல்
வெளிவந்துவிட்டன
* முதலாம் தவணைப் பரீட்சைக்கு ஏற்றவகையில் வெளிவந்துள்ளது.
* உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்.
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.

38 வருடங்களாக O/L பரீட்சைகளில்
சிறந்த பெறுபேற்றுச் சாதனை படைத்துவரும்
ஒழுங்கு, கட்டுப்பாடுகள் நிறைந்த நிறுவனத்தில்
O/L DAY CLASS
மார்ச் 30ல் ஆரம்பமாகின்றது
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்

CHEMISTRY - S.Vasu
இரவு நேர வகுப்புகள்
பொறிமுறை, கலப்பாக்கம், சமபகுதியம்
Mon, Wed 7.00 - 8.00 pm
அசேதன இரசாயனவியல் பண்பறிபகுப்பு
Sat, Sun 7.00 - 8.00 pm
பௌதிக இரசாயனவியல் அவத்தை சமனிலை
Thur, Fri 7.00 - 8.00 pm
ஆரம்பம் - 28.03.2011 (இன்று)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

விற்பனைக்கு / வாடகைக்கு
வாகனத்துக்கு வாகனம் மாற்றுதல்



தொடர்பு
0774667524
ரூபன்
0779238564

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.